
மூனாவின்
நெஞ்சில்
நின்றவை

**மூனாவின்**

நெஞ்சில் நின்றவை

பத்திகள்

**மனஓசை**

**Muunaavin**

**Nenchil Nintravai**

Column

MANAOSAI

Copyright © March 2019 Manaosai Verlag
Published by Manaosai Verlag, Germany
Printed in Stuttgart, Germany

Copyright © Muunaa
Compilation: Chandravathanaa
Cover Design: Muunaa
Cover illustration: Muunaa

ISBN: 978-3-9813002-7-7

## மூனாவின்
## நெஞ்சில் நின்றவை

எத்தனையோ நிகழ்வுகள்
அதில் துயரங்களும் இருக்கும்
மகிழ்ச்சிகளும் இருக்கும்
பலதைக் கடந்து வந்திருக்கின்றோம்
ஆனால் ஒரு சில சம்பவங்கள் மட்டும் ஏனோ
திடீரென நெஞ்சில் விழித்துக் கொள்கின்றன.
அப்படி நினைவில் வருபவைகள்
எல்லாவற்றையும் எழுதிவிட முடியாது.
எழுத முடிந்ததை மட்டும் எழுதியிருக்கிறேன்.

இங்கே நான் தந்திருக்கின்ற
எனது நெஞ்சில் நிறைந்தவை எல்லாம்
தாயகத்தில் நான்
இளமையில் சந்தித்துக் கொண்டவை.

இவைகளை வாசிக்கும் போது
உங்கள் நினைவுகளும் கூட
சில வேளைகளில் மீட்டப்படலாம்.
மீட்டிப் பாருங்கள்.

**அன்பன்**
**மூனா**

# பதிப்புரை

*மூனா ஒரு ஓவியராக, கருத்தோவியராக (Cartoonist)*
*இணைய உலகிலும் பத்திரிகை உலகிலும்*
*பலராலும் அறியப்பட்டவர்.*
*அவர் ஒரு எழுத்தாளராகவும் நாடகாசிரியராகவும்*
*இயங்கிக் கொண்டிருப்பது பலரும் அறியாதது.*
*ஆழ்வாப்பிள்ளை தெட்சணாமூர்த்தி செல்வகுமாரன்*
*என்ற தனது இயற்பெயரை விடுத்து பல*
*புனைபெயர்களில் அவர் எழுதிக் கொண்டிருப்பதே*
*அதற்கான முக்கிய காரணம்.*

*மூனா என்பது கூட ஒரு புனைபெயர்தான்.*
*மூனா, முல்லை, தூரிகை, கவி, ஆழ்வாப்பிள்ளை…*
*என்று அவரது புனைபெயர்கள்*
*நீண்டு கொண்டே செல்கின்றன.*
*மூனாவின் கருத்தோவியங்களில் மட்டிலுமல்ல,*
*பேச்சிலும் எழுத்திலும் கூட நகைச்சுவை தொக்கி நிற்கும்.*
*சோகமான விடயங்களைக் கூட*
*ஒருவித எள்ளல் கலந்த எழுத்து நடையில்*
*எழுதி விடுவது*
*மூனாவின் தனித்துவம்.*

*அந்த அவரது எழுத்துக்களிலிருந்து*
*இன்னும் அவரோடு வாழ்ந்து கொண்டிருக்கும்*
*அவரது இளமைக்கால நினைவுகளின்*
*இருபத்தியிரண்டு பதிவுகளை*
*இங்கு தொகுத்துத் தருவதில் மகிழ்கிறேன்.*
*இவை மூனாவின் நினைவுகளின்*
*சிலதுளிகள் மட்டுமே.*
*இன்னும் பல தொடரும்*

***மனஓசை***

**உள்ளடக்கம்**


1. முடித்து வைக்கப்பட்ட வழக்கு
2. நின்று கொல்லும் தெய்வம் வந்து விட்டது
3. மோனைப்பொருளே மூத்தவனே
4. பெயரைச் சொல்லவா?
5. காதலிக்காதே கவலைப்படாதே
6. ஆடவரெல்லாம் ஆடவரலாம்
7. பள்ளிக்கூடம் போகலாம்
8. அறுபது பாகக் கிணறு
9. ஓடிப் போனவன்
10. கிறுக்கன் என்கின்ற பண்டிதர் வீரகத்தி
11. கிராமக்கோட்டுச் சந்தி மதவு
12. சந்தி வாடகைக்கார்
13. மார்க்கிரேற் அன்ரி
14. முத்து அக்கா
15. எங்கள் ஊர் முதலாளி
16. வடையும் மோதகமும் அண்ணன் தம்பி
17. பார்க்காதே பார்க்காதே
18. பெண் பார்க்கப் போறேன்
19. கடன் வாங்கிக் களியாட்டம்
20. கள்ளுக்கொட்டில் பக்கம் போகாதே
21. நாலும் தெரிந்தவன்
22. ஓடிய ஓட்டம் என்ன!

# முடித்து வைக்கப்பட்ட வழக்கு

அறுபதுகளின் பிற்பகுதி. நான் மாணவனாக இருந்த நேரம். அரசியலின் அரிச்சுவடியே எனக்கு அப்பொழுது தெரியாது. இப்பொழுது மட்டும் என்ன தெரியும் என்று கேட்கும் எண்ணம் உங்களுக்கு இப்பொழுது வந்திருக்கும். ஆனால் மரியாதை நிமித்தம் நீங்கள் அப்படியான கேள்விகள் எல்லாம் கேட்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எனக்கு அப்பொழுது அரசியலில் தெரிந்தது எல்லாம் வீடும் சைக்கிளும்தான்.,,இதற்கு நேரே புள்ளடி போடுங்கள்'' என்றோ, ,,உங்கள் பொன்னான வாக்குகளை இந்தச் சின்னத்துக்குப் போடுங்கள்'' என்றோ தேர்தல் பிரச்சார துண்டுப் பிரசுரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அந்தப் பிரசுரங்களில் வீடு அல்லது சைக்கிள் படமோதான் இருக்கும். சில சமயங்களில் நட்சத்திரப் படத்துடனும் துண்டுப் பிரசுரம் கிடைத்திருக்கிறது.

எங்கள் நகரத்தில் இரண்டு முக்கிய வேட்பாளர்கள். ஒருவரது சின்னம் வீடு. மற்றையவரது சின்னம் சைக்கிள். என்னதான் ஓடி ஓடிப் பிரச்சாரம் செய்தாலும் ஒவ்வொரு தடவையும் வீட்டுக்கே வெற்றி. அதுவும் பெரிதளவிலான வாக்கு வித்தியாசங்கள் எல்லாம் கிடையாது. மிகச் சொற்ப வாக்குகளால் சைக்கிள் பின் தள்ளப்பட்டு விடும். அந்தச் சொற்ப வாக்குகளின் வெற்றியை வல்வெட்டித்துறை நகர வாக்காளர்களே ஏற்படுத்தி விடுவார்கள். வீட்டின் வேட்பாளர் அவர்களது நகரத்தைச் சேர்ந்ததால் ஒற்றுமையாக ஒருங்கிணைந்து தங்களது வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் அவர்கள் வீட்டுக்கே போட்டு விடுவார்கள். மற்றும்படி கொள்கைகளின் அடிப்படையில் வாக்குகள் கிடைத்தன என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது.

*ஏனென்றால் எங்களுக்கு அடுத்த தொகுதியான உடுப் பிட்டித்தொகுதியில் காலங்காலமாக சைக்கிளே வென்று கொண்டிருந்தது. வீடு பின்னுக்கே நின்றது.*

*அப்பொழுது குழுக்களாக தங்கள் தலைவனுக்கு தேர்தல் வேலைகள் செய்தாலும், ஆளாளுக்கு முறைத்துக் கொள் வார்களே தவிர அடிதடி எல்லாம் பலமாகக் கிடையாது.*

*ஆனாலும் ஒரு கொலை அந்த நேரத் தேர்தலின் போது நடந்தது.*

*நான் இனி சொல்லப்போகும் சம்பவத்தில் இடம் பெறும் பெயர்களை வேண்டும் என்றே மாற்றி இருக்கிறேன். எதற்கு வம்பு?*

*அபிமன்யு. அஞ்சாதவீரனுக்கான பெயர். வீட்டுச்சின்னத் துக்கான முக்கிய அபிமானி. திருமணமாகி இளம்மனைவி, மகளோடு வல்வெட்டித்துறையில் இருந்துவந்து பருத்தித் துறையில் வசித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இரண் டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டு வரும் பொழுது அடித்துக் கொல்லப்பட்டு விட்டார். சைக்கிள்சின்னத்தின் அதிமுக்கிய அபிமானிதான் அதைச் செய்தார் என்பது எல்லோருக்கும் அப்பொழுது உள்ளங் கை நெல்லிக்கனி.*

*அவருக்கு ஒரு பெயர் வைக்க வேண்டுமே. ஆதி என்று பெயர் வைப்போமா? எனக்கு ஓகே. ஆகவே தொடரு வோம்.*

*வழக்கு என்று வந்த பொழுது, குற்றவாளியாகக் காண் பதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாததால், நீதி மன்றத்தால் ஆதியைத் தண்டிக்க முடியவில்லை. ஆதிக் காக வழக்காடியவர் சைக்கிள் சின்னத்தின் வேட்பாளர் என்பதையும் மெலிதாக இங்கே குறிப்பிட்டுவிடுகிறேன். அதன் பிறகு ஆதிதான் நகரத்தின் முக்கிய புள்ளி.*

*எல்லோரிடம் இருந்தும் பயத்துடன்கூடிய ஒருமரியாதை அவருக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.*

*அபிமன்யுவின் மனைவியோ என்புருசன் வாழ்ந்த இடம் தான் எனக்கு அயோத்தி என்று மகளுடன் பருத்தித் துறையிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார்.*

*காலங்களின் ஓட்டத்தில் இந்தக் கதை பழம் கதையாகி சம்பவம் தெரிந்தவர்களுக்குக்கூட அது மறந்துபோயிற்று. சைக்கிள் வேட்பாளரும் எவ்வளவோ முயன்றும் பாராளு மன்றத் தேர்தலில் வெற்றி பெறாமலே காலமாகிப் போனார்.*

*எண்பதுகளின் ஆரம்பப் பகுதி. இப்பொழுது ஆதி பருத்தித்துறை நவீன சந்தையில் மரக்கறிகள் விற்பனை செய்து கொண்டிருந்தார். சுன்னாகம் சந்தையில் மொத் தமாக மரக்கறிகளை கொள்வனவு செய்து பருத்தித் துறை நவீன சந்தையில் சில்லறையாக விற்பனை செய்து கொண்டிருந்தார். அவர் விற்பனை செய்து கொண்டிருந்த அந்தச் சந்தையில் அவர்தான் மகாராஜா. அவரை மீறி காகம் கூட ஒரு பலாப்பழச் சுளையை கொத்த முடியாது. இந்த நேரத்தில்தான் சில இள வட்டங்கள் வியாபாரம் செய்ய சந்தைக்குள் ஆர்வமாக வந்தன.*

*வந்தவர்களுக்கு, நான் முன்பு சொன்ன அபிமன்யுவின் பழைய வீட்டோடு உறவுமுறையும் இருந்தது. ஆகவே முரண்பாடு என்பது சந்தைக்குள் உடனேயே வந்து விட்டது. ஒருநாள் ஆதி கர்ஜனை செய்ய இள இரத்தம் பொங்கி எழ பிரச்சனை பூதாகரமாகிப் போனது. ஆதி வீட்டுக்குச் சென்று தனது பழைய வாளை எடுத்துக் கொண்டு நகரத்தை வலம் வர ஆரம்பித்தார்.*

தனது கணவனின் வீரத்துக்குத் துணையாக ஆதியின் மனைவியும் இணைந்து ஊர் வலத்தில் ராஜா ராணியாக வலம் வந்தார்கள். „இப்ப வாங்கடா பாக்கலாம்' என்ற ஆதியின் கர்ஜனையால் நகரம் முழுக்க நடுங்கிக் கொண்டிருந்தது. எதற்கு வம்பு என்று நகரத்துக் கடைகள் எல்லாம் மூடிக் கட்டிக் கொண்டு நகரத்தை அமைதியாக்கப் பார்த்தன. தட்டிவான்கள், மினிவான்கள் எல்லாம் இனி நின்றால் உருப்படி சேராது என்று புறப்பட்டுப் போயின. இதில் போனால் சங்கடம் இல்லை என்று இ.போ.ச பஸ்கள் மட்டும் நிலையத்தில் தரித்து நின்றன.

நல்ல வேளை, மீண்டும் ஒரு அசம்பாவிதம் எங்கள் நகரத்தில் நிகழவில்லை. அடுத்தநாள் நகரம் தனது அன்றாட வேலைகளில் கவனமாக இருந்தது. நவீன சந்தை கூடி இருந்தது. விற்பனைக்காக ஆதி குவித்து வைத்திருந்த மரக்கறிகளுக்கு மத்தியில் அவரது வீரவாள் நிமிர்ந்து நின்றது. அந்த இள வட்டங்கள் மட்டும் சந்தைக்கு விற்பனை செய்ய வரவில்லை. சம்பவம் நடந்து கொஞ்ச நாட்கள்தான், அபிமன்யுவின் கதை போல் நாங்கள் சந்தையில் நடந்த சச்சரவையும் வழக்கம் போல் மறந்து போனோம்.

„சுன்னாகம் சந்தைக்கு மரக்கறி வாங்கப் போன போது இன்பருட்டியிலை பஸ்ஸை மறிச்சு ஆதியை வெட்டிப் போட்டுட்டாங்களாம்' நண்பன் கணேசன் காலையில் ஓடி வந்து சொன்ன பொழுது ஆச்சரியமாக இருந்தது. வாள் வைத்திருந்தது ஆதி. ஆனால் வெட்டப் பட்டு வீழ்ந்து கிடப்பதும் என்னவோ ஆதி.

'வா.. பாக்கலாம்' கணேசனின் சைக்கிளில் தொத்திக் கொண்டேன்.

பஸ்ஸின் இருக்கையில் ஆதி சின்னா பின்னமாகி இருந்தார்.

அவரின் திடகாத்திரமான கறுத்த மேனியில் சிவப்புகள் சிதறி இருந்தன. இன்னும் சற்று நேரத்தில் இராணுவம் வரலாம் என்ற அச்சம் இருந்ததால், பார்வையாளர்கள் பார்த்த கண்ணோடு உடனடியாகத் திரும்பிக் கொண் டிருந்தார்கள். நாங்களும் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமான வேளையில் கணேசன் என்னைத் தட்டி ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

ஒரு பெண் ஓடி வந்து கொண்டிருந்தாள். ஓடி வரும் வேகத்தில் கூந்தல் அவிழ்ந்து கடற்காற்றில் தலைமயிர் கள் பறந்து கொண்டிருந்தன. கொஞ்சம் வயதானதால் வேகமாக அந்தப் பெண்ணால் ஓட முடியாமல் இருந்தது தெரிந்தது. மூச்சிரைக்க வந்து பஸ்ஸின் முன்னால் நின்றாள். வந்தவள் வீழ்ந்திருந்த ஆதியைப் பார்த்தாள். காற்றில் பறந்து கொண்டிருந்த தனது கூந்தலை அள்ளி நிதானமாக முடிந்து கொண்டு எக்காளம் இட்டுச் சிரித்தாள். போய் விட்டாள். அவள் முகத்தைக் கவனித் தேன். வாழ்வில் வாழ்ந்ததின் பயனைக் கண்ட திருப்தி தெரிந்தது.

„யாரடா மச்சான் இது?' கணேசனைக் கேட்டேன்.

„அபிமன்யுவின் மனைவி உத்தரை'

கணேசனை சைக்கிளில் வைத்து ஓடுவது என்பது நிறைந்த சிரமம்.

„வரக்கை நான்தான் ஓடினனான் போகக்கை நீதான் ஓடோணும்' என்ற கணேசனின் பேச்சுக்கு மறு பேச்சில்

*வாமல் கடற்காற்று வேகமாக ஒரு பக்கம் தள்ள வாயில் நுரை தள்ளாத குறையாக சைக்கிள் பெடலை உழக்கிக் கொண்டிருந்தேன். அமைதியாக „சைக்கிள் பார்' இல் இருந்து கொண்டு கணேசன் சொன்னான். „பாரடா மச்சான் பருத்தித்துறையில் இருந்து இன்பருட்டி வரை ஒண்டு ஒண்டரைக் கிலோ மீற்றர் இருக்கும். மனுசி அங்கையிருந்து இதைப் பாக்கிறதுக்கு ஓடி வந்திருக்குது.'*

*கூந்தல் முடித்து ஆதியின் உடலைப் பார்த்துச் சிரித்த அந்த உத்தரையின் முகம் மட்டும் எனது கண்களை விட்டு இன்னும் அகலாமலே இருக்கிறது.*

*அதுசரி ஆதியை யார் கொன்றார்கள் என்ற கேள்வி உங்களிடம் இருக்குமே.*

*முதலில் ஒன்று சொல்கிறேன். இது நடந்த கால கட்டங் களில் பல இயக்கங்கள் முளைவிடத் தொடங்கியிருந் தன. போதாததற்கு யார் செய்தார்கள் என்பதற்கான சாட்சியங்கள் இல்லை.*

*காலை விடியல் நேரம். இருட்டு. ஆகவே யாராலும் எதையும் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஆதி தரப்பில் வாதாடுவதற்கு சைக்கிள் வேட்பாளரும் உயிரோடு இல்லை. ஆகவே வழக்கை இத்தோடு மூடி வைத்து விடுவோம்.*

*„அதுசரி அந்த இளவட்டங்களைப் பற்றி...'*

*அவர்கள் எப்பொழுதோ அந்தக் கரைக்குப் போய் விட்டார்கள் என்று சொன்னார்கள்.*

***06.11.2014***

# நின்று கொல்லும் தெய்வம் வந்து விட்டது

*ஆனைவிழுந்தான் சந்தியில் இருந்தது அந்த மயானம். மயானத்தை ஒட்டி இருந்த வீதி எப்பொழுதும் அமைதி யாகவே இருக்கும். அந்த வழியாக தனியாகப் போகும் போது ஒருவித அச்சம் இருக்கும்.*

*ஆனாலும் நண்பர்களோடு வல்லிபுரக் கோவிலுக்குப் போகும் பொழுது அந்த மயானத்துக்குள் ஒரு தடவை போய் வலம் வந்து விட்டே போவோம். வாய்க்கரிசி போடும் பொழுது வீசப்படும் அரிசியோடு கலந்திருக்கும் ஐந்து, பத்துசத நாணயக் குற்றிகளோடு, சில சமயங் களில் ஐம்பதுசத நாணயங்களும் யார் கண்களிலும் படாமல் எங்களுக்காக ஒளித்துக் காத்திருக்கும்.*

*வல்லிபுரக்கோவில் கேணியில் குளித்த பின்னர் மரத்தடி களில் ஆச்சிகள் சுட்டுக் கொண்டிருக்கும் சூடான தோசைகளைப் புசிக்கவும், துரைசிங்கத்தின் தமையனார் நடாத்திக் கொண்டிருந்த தேநீர் கடையில் தேத்தண்ணி ருசிக்கவும் அவை எங்களுக்குப் பயன்பட்டிருக்கின்றன.*

*ஆனைவிழுந்தான் மயானத்தின் வடக்குப் பகுதியில் இருந்த காணி தனியாருக்குச் சொந்தமானது. வேலி அடைப்புகள் கிடையாது. வெள்ளை மணலை கள்ளமாக அள்ளிச்செல்ல அந்தக்காணியினூடாகவே வழியமைத்து றக்டர்கள் பயணிக்கும்.*

*ஊரில் எங்காவது நாகப்பாம்பு வந்தால், பிடித்துக் கொண்டு வந்து வல்லிபுரக் கோவிலடியில் விடுவது அப்பொழுது வழமையாக இருந்தது. சாமிக்குற்றம் என்பதால் நாகப்பாம்புகளைக் கொல்ல மாட்டார்கள்.*

*இப்படி விடப்படும் நாகப்பாம்புகள் கோவிலை அண்டிய சவுக்குத் தோப்பிலும், பத்தைகள் உள்ள காணிகளிலுமே ஒதுங்கி வாழும். அதன் நிமித்தம் ஆனைவிழுந்தான் மயானத்தை ஒட்டி இருந்த காணியிலும் பாம்புகள் இருக்கும் என்ற பயத்தில் ஆட்கள் நடமாட்டம் இன்றி மயான அமைதியாக இருக்கும்.*

*வழமைக்கு மாறாக அந்தக் காணி அன்று சனங்களால் நிறைந்திருந்தது. அங்கிருந்த மரங்களில் எல்லாம் சைக் கிள்கள் சாத்தி வைக்கப் பட்டிருந்தன. எனது றலி சைக்கிளும் அவற்றில் ஒன்றாக இருந்தது. ஒரு இளம் பெண்ணின் அதுவும் பாடசாலை மாணவியின் சடலம் அங்கே இருந்ததுதான் அன்று அந்தக் காணியில்இருந்த கூட்டத்துக்கான காரணம்.*

*பாடசாலைக்கு கொண்டு செல்லும் பை நிலத்தில் இருந் தது. அதனுள் இருந்து புத்தகங்கள், அப்பியாசக் கொப்பி கள்,கொம்பாஸ் எல்லாம் மெதுவாக வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. வெள்ளைநிறப் பாடசாலைச் சீருடையில் தரையில் இருந்த பெண்ணின் உடலத்தின் முகம் மண் கொண்டு மூடப் பட்டிருந்தது.*

*„யார் பெத்த பிள்ளையோ? இப்படி செத்துப்போய் இருக்குது'*

*„எந்தப் பாவி இதைச் செய்தது?' என பலவிதமான அங்கலாய்ப்புகளை அங்கே கேட்கக்கூடியதாக இருந்தது.*

*„வீட்டிலை அக்கா இருக்கிறாதானே?' என்று ஊரில் இருந்த தம்பிமார்களை விசாரித்தோம்.*

*விசாரணை முடிவில் தெளிவானது. எங்கள் ஊரில் எல்லா மாணவிகளும் பத்திரமாக இருக்கிறார்கள் என்று.*

ஆகவே இறந்து இருந்தது வெளி ஊராக இருக்க வேண்டும். அது யாராக இருக்கும் என்ற கேள்வி ஊரில் பலமாக இருந்தது.

யாராக இருக்கும் என்ற கேள்வியுடன் நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த என்னை எனது நண்பன் கலையரசன் இடை மறித்தான்.

„மச்சான் நேற்று மத்தியானத்துக்குப் பிறகு ஒரு பிள்ளையை ஒருத்தன் ஆனைவிழுந்தான் பக்கம் கூட்டிக் கொண்டு போனதை நான் பார்த்தேன்டா'

„ஆளைத் தெரியுமோ?'

„புது முகங்களா இருந்தது. முந்தி ஒருக்காலும் நான் அவையளைப் பார்க்கை இல்லை மச்சான்'

முகத்தை மண்கொண்டு மூடி இருந்ததால் யாருக்குமே அந்தப் பாடசாலை மாணவியை யார் என்று இனம் கண்டுகொள்ள முடியவில்லை.

அந்தக் கேள்வி அதிக நேரம் நிலைக்கவில்லை. தும்பளை சிவப்பிரகாசவித்தியாலயத்தின் விவசாய பாட ஆசிரியை ஒருவரின் மகள் என்று கண்டு பிடித்து விட்டார்கள். அந்த ஆசிரியையின் பெயரைக் கேட்டதும் எனக்குப் பெரும் கவலையாகப் போய் விட்டது. அந்த ஆசிரியை எனக்கு நன்கு பரிச்சயம் ஆனவர். அவரது கணவர் ராமச்சந்திரன் எனது வகுப்பு ஆசிரியராக இருந்தவர். ஆனால் இருவரும் ஏதோ காரணத்தால் பிரிந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆஸ்திக்குப் பெண் என்றும் ஆசைக்கு ஆண் என்றும் இரண்டு பிள்ளைகள். இரண்டு பிள்ளைகளும் தாயுடனே

வசித்து வந்தார்கள். மூத்தவளான மகள்தான் இப்பொழுது கொலைசெய்யப் பட்டிருக்கிறாள். அவள் பெயர் கமலம்.

சம்பவம் இப்படித்தான் அரங்கேறுகிறது.

கீழே விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டு வராத்துப்பளை என்ற இடத்தில் அவளது தாய் சிகிச்சை பெறுகிறார் என்றும் கமலத்தை அழைத்து வர என்னை அனுப்பினார் என்றும் பொய் சொல்லி பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த கமலத்தை அழைத்துச் செல்கிறான் அவளது ஒன்று விட்ட சகோதரன். அவன் பெயர் வீரப்பன்.

இந்த வீரப்பன் ஒரு கடற் தொழிலாளி. சொந்தமாகப் படகு இல்லாததால் ஒரு சம்மாட்டியாரின் கீழ் ஒரு தொழிலாளியாக வேலை செய்கிறான். சம்மாட்டியாரின் மகனுக்கு கமலத்தின்மேல் ஒரு கண். கமலமோ அவனைக் கண்கொண்டு பார்க்கவே இல்லை. கொஞ்சம் நெருங்கி வந்து „பகிடி' விட்டுப் பார்த்திருக்கிறான். கமலம் செருப்பைக் கையில் எடுத்திருக்கிறாள். அவமானம், ஏமாற்றம் இரண்டோடும் தனது நண்பர்கள் மத்தியில் கேலிக்கு ஆளாகி விட்டிருந்தான்.

எப்படியாவது அடைந்தே தீர்வேன் என்று நண்பர்கள் மத்தியில் சபதம் எடுக்கிறான். தனது தந்தையிடம் கூலியாக வேலை பார்க்கும் வீரப்பனைக் கருவியாக் குகிறான். பணம் தருகிறேன் என்றோ சொந்தமாகப் படகு வாங்கித் தருகிறேன் என்றோ ஆசை காட்டி இருப்பான் போல. வீரப்பன் அவனது எண்ணத்துக்கு சம்மதித்து விட்டான்.

அதனால்தான் இப்பொழுது கமலத்தை பாடசாலையில் இருந்து பொய் சொல்லிக் கூட்டிப் போகிறான்.

*பருத்தித்துறையில் பஸ் ஏறி கிராமக்கோட்டுச் சந்தியில் இறங்கி ஆனைவிழுந்தான் பக்கம் கமலத்துடன் போய்க் கொண்டிருக்கிறான். அப்படி அவர்கள் போகும் பொழுது தான் கலையரசன் கண்டிருக்கிறான். ஆனால் அதன்பின் நடந்ததை யாரும் பார்க்கவும் இல்லை. சொல்லவும் சாட்சிகள் இல்லை.*

*´கழுத்து எலும்பில் ஒரு முறிவு காணப்படுகிறது. சுவாசப் பையில் மண்கள் காணப்படுகின்றன. மயக்கம் அடைந்து விட்டிருந்த அவரை மரணித்து விட்டதாக நினைத்து மண்ணால் மூடி இருக்கலாம். மண் கொண்டு மூடியதால் மூச்சுத் திணறி மரணம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கொலைக்கான மரண சான்றிதழ்தான் இது.*

*கலையரசன் ஒரு சாட்சியாக வருகிறான். வீரப்பன், கமலத்தை ஆனைவிழுந்தான் பக்கம் கூட்டிச் சென்றது உறுதியாயிற்று.பாடசாலையில் கிடைத்த தகவல் மற்றும் கலையரசனின் சாட்சி ஆகியவற்றால்  வீரப்பன் கைது செய்யப் படுகிறான்.*

*தங்களது சொந்தமகளை இழந்து விட்டது போன்று நகரமே சோகமானது. பாடசாலை கீதத்தைப் பாடாமல் மாணவிகள் சோககீதம் பாடினார்கள். பத்திரிகைகளுக்கு பெரும்தீனி கிடைத்தது. பல நாட்களாக பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியே கமலம் கொலை வழக்காகிப் போனது.*

*நகரத்தின் பிரதானசட்டத்தரணி, வீரப்பனுக்காக வாதா டிக் கொண்டிருந்தார். வீரப்பனுக்கு எதிராக இரண்டு சாட்சிகள் இருந்தன. ஒன்று பாடசாலையில் இருந்து அனுமதி பெற்று கமலத்தைக் கூட்டிச் சென்றது. மற்றையது ஆனைவிழுந்தான் பக்கம் கமலத்தை அழைத்துச் சென்றதைப் பார்த்த கலையரசன். ஆனால் சம்மாட்டியார் மகனுக்கு எதிராக எவ்வித துப்புகளும்*

*இல்லை. ஆக வீரப்பன் வாயைத் திறந்தால்தான் ஏதாவது தகவலே கிடைக்கும்.*

*கூட்டிக் கொண்டு வருவதற்கு படகு தருவதாகச் சொன்னபகுதி காட்டிக் கொடுக்காமல் இருந்தால் என்ன எல்லாம் தருவதாகச் சொல்லியிருக்கும். பணம் பலமாகப் பாய்ந்தது. அது சட்டத்தின் ஓட்டை ஓடிசல்கள் ஊடாக புகுந்து கபடி விளையாடிக் கொண்டிருந்தது. அதனால் சம்மாட்டியாரின் மகனுக்கு துளியும் சேதாரம் இல்லாமல் போயிற்று. பாதுகாப்பாக அவனை வேறு இடத்திற்கு நகர்த்தி விட்டார்கள். ஆரம்பத்தில் வேகம் பிடித்த கமலம் கொலைவழக்கு பின்னாளில் நத்தையை விட மெதுவாக நகர்ந்தது.*

*வருடங்கள் ஓடிற்று. கலையரசனும் இப்பொழுது வெளி நாட்டுக்குப் போய்விட்டான். சாட்சியங்கள் போதுமான தாக இல்லை. வழக்கின் வீச்சும் குறைந்து கொண்டே போனது. தமிழ் விடுதலை வீரர்கள் வந்து கொண்டிருந் தார்கள். மக்கள் கவனமும் அந்தப்பக்கம் போய் விட்டது. கண்ணிவெடித் தாக்குதல்கள், அதன் பின்னால் அதிரடி யாக ஊருக்குள் நுளைந்து அட்டகாசம் செய்யும் சிறீ லங்கா இராணுவம் என எல்லாமே அல்லோலகல்லோல மாக இருந்தது. இந்த நிலையில் கமலம் கொலை வழக்கு மக்களின் கவனத்தில் இருந்து விலகிப் போயிற்று.*

*ஒருநாள் வழக்கு முடிந்து விட்டது. வீரப்பன் விடுதலை ஆனான். விடுதலை கிடைத்த மறுநாள் வல்வெட்டித் துறைச் சந்தியில் இருந்த ஆலமரத்தில் தலைகீழாகக் கட்டப்பட்ட நிலையில் வீரப்பன் செத்திருந்தான். அவனது நெற்றியில் பொட்டு வைத்தாற் போல் ஒரு துப்பாக்கிக்குண்டு பாய்ந்திருந்தது.*

***15.12.2014***

# மோனைப்பொருளே மூத்தவனே

*„பானை வயிற்றோனே பக்தர்களைக் காப்போனே மோனைப் பொருளே மூத்தவனே கணேசா இந்த ஏழையைப் பாருமையா...'*

*கணேசனைப் பார்த்து நாங்கள் எல்லோரும் கிண்டல் செய்து பாடும் பாடல் இது. பானை வயிறும் கணேசன் என்ற பெயரும் பிள்ளையாருக்கும் கணேசனுக்கும் மகா பொருத்தம். நாங்கள், தன்னைக் கேலி செய்து பாடுவ தாக அவன் எப்பொழுதும் நினைத்தது கிடையாது. புன்னகையுடன் நாங்கள் பாடுவதை ரசிப்பான். ஆனால் அவனிடமிருந்த புன்னகை ஒரு சமயம் தொலைந்து போயிற்று. எப்பொழுதும் இறுக்கமான முகத்துடனே இருந்தான். எங்களிடம் இருந்து விலகிக் கொள்ள விரும்புகிறானா என்ற சந்தேகம்கூட எனக்குள் எழுந்தது.*

*ஒருநாள் என்னைச் சந்திக்க ஆறு கிலோமீற்றர் தூரத்தில் இருந்து சைக்களில் வந்தான்.*

*„சந்தையிலை உனக்கு யாரையாவது தெரியுமோ?' கணேசன் என்னைக் கேட்ட பொழுது, எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஏன் இந்தக் கேள்வி என்ற பாவனையுடன் அவனைப் பார்த்தேன்.*

*„பிலாப்பழம் வேண்டோணும் மச்சான்' என்றான்.*

*„அதுக்கு சந்தையிலை ஆரையாவது தெரியோணும் எண்டில்லை. பழமும் பிடிச்சு, விலையும் சரியா அமைஞ்சால் வாங்கிக் கொள்ளலாம்' என் பாணியில் சொன்னேன்.*

*„பழத்தை வெட்டி சுளைகளைத் தனியா எடுத்துத் தரோணும்..’ அவன் சொன்னதில் இறுக்கம் இருந்தது.*

*„பகிடி விடுறியே..? சந்தை வியாபாரத்திலை களை கட்டி இருக்கு.. இந்த நேரத்திலை... அதுவும் பிலாப் பழத்தை நோண்டுற வேலை...’*

*„எனக்கோ வீட்டுக்கோ இல்லை மச்சான்.. அவங்களுக்கு..’*

*அவங்களுக்கு என்ற வார்த்தை என்னை நிதானிக்க வைத்தது. கணேசனை நிமிர்ந்து பார்த்தேன்.*

*கணேசன் பார்வையால் ஆமோதித்தான். அந்தக் கால கட்டத்தில் பெரியவர்களுக்கு அவர்கள் „பெடியள்’ எங்களுக்கு „அவங்கள்’.*

*„மூன்று நாளா இருக்கிறாங்கள். அங்கை இருக்கிற வையள் ஆளாளுக்கு முறைவைச்சு சாப்பாடு குடுக்கினம். பிலாப்பழ சீசன். அவங்களுக்கு வாங்க நேரம் எங்கே. அதுதான் நான்..„ கணேசன்சொல்லிக்கொண்டிருந்தான்.*

*யாரைக் கொண்டு பிலாப்பழத்தை வெட்டி சுளைகளைத் தனியாக எடுப்பிக்கலாம் என்ற சிந்தனை எனக்குள் ஓடிக் கொண்டிருந்தது. உடனடியாக என் நினைவில் தட்டுப்பட்டவர், என்னுடன் படித்த இராஜகோபாலின் தாயார். அவர் சந்தையில் பழ வியாபாரம் செய்பவர். கணேசனைக் கூட்டிக் கொண்டு அவரிடம் போய் விசயத்தைச் சொன்னேன். மறு வார்த்தை இல்லை. „ஒரு பதினைஞ்சு நிமிசம் பொறுத்து வா’ என்றார்.*

*பதினைந்து நிமிடங்களுக்கு மேலாக கொஞ்ச நேரம் கழித்துப் போனோம். பிளாஸ்ரிக் பைகளில் போட்டு, வைத்திருந்த பிலாப்பழச் சுளைகளைத் தந்தார்.*

*„எவ்வளவு?' என்று விலை கேட்டேன். „என்னால் முடிஞ்சது இதுதான் தம்பிமார், கொண்டே குடுங்கோ' என்றார். எவ்வளவோ கேட்டும் அவர் பணத்தை வாங்க மறுத்து விட்டார். கணேசன் பழங்களுடன் புறப்பட்டுப் போனான்.*

*இரண்டு நாட்களாக சந்தை ஆள் நடமாட்டம் குறைந் திருந்தது. அந்த நகரத்தில் நடந்த சோகமான சம்பவம் தான் அதற்குக் காரணம். ராஜகோபாலின் தாயார் இன்று பழத்துக்கு பணம் வாங்காததற்குப் பின்னணியில் அந்த சம்பவமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.*

*„லாலா' என்கிற றஞ்சனை நாங்கள் இழந்திருந்தோம். ஒரு வானில் போராளிகள் பயணித்துக் கொண்டிருந் தார்கள். அவர்களுக்கு முன்னால் நோட்டம் பார்த்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் லாலா பயணித்துக் கொண்டிருந்தான். அவனது சமிக்கையை வைத்தே வானில் இருப்பவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு சந்தியில் அதிரடிப் படையின் ஜீப் வருவதை லாலா கண்டு விட்டான். ஆனால் உடனடியாக வானில் இருப்பவர்களுக்கு அறிவிக்க முடியவில்லை. மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டுசென்று அவர்களுக்கு அறிவிக்கலாம் என்றால், அதற்குள் ஜீப் இவர்களை நெருங்கி விடும். அதுவே எல்லோருக்கும் ஆபத்தாகப் போய்விடும். இருந்த சொற்பகணத்தில் லாலா முடிவெடுத்தான்.*

*தனது மோட்டார் சைக்கிளின் வேகத்தை அதிகப் படுத்தினான். அதிரடிப்படையின் ஜீப்புடன் மோதுவது*

போன்று வாகனத்தைச் செலுத்தி சந்தியில் பாதை மாற்றி ஓட்டினான். அது அந்த அதிரடிப்படைக்குப் போதுமானதாக இருந்தது. அவர்கள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள். வானில் பயணித்துக் கொண்டிருந்த போராளிகள் நிலைமையைப் புரிந்து கொண்டார்கள். பாதையை மாற்றிக் கொண்டார்கள்.

எல்லோரும் மாலையில் இருப்பிடம் திரும்பி விட்டார் கள். லாலாவைத் தவிர. லாலாவின் உடலம் போதானா வைத்தியசாலையில் இருந்தது. சயனைற் அருந்தி இருந்தான். துப்பாக்கியால் சுட்ட அடையாளமும் அவனுடலில் இருந்தது. அதிரடிப் படையால் சுடப்பட்ட பின் சயனைற் சாப்பிட்டானா? சயனைற் சாப்பிட்ட பின்னர்தான் அவர்கள் சுட்டார்களா என்று தெரிய வில்லை. பல கதைகள் ஊருக்குள் உலா வந்தன. ஆனால் பெரிதும் நொந்து போயிருந்தது, வானில் பயணித்த லாலாவின் போராளி நண்பர்கள்தான். „அந்த அதிரடிப்படையை கூண்டோடு அழிப்போம்' அவர்கள் அப்படி ஒரு சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

அவர்கள்தான் இப்பொழுது இரும்பு மதவடியில் கண்ணி வெடி வைத்து அதிரடிப் படையின் வரவுக்காகக் காத்தி ருக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பிடக் கொடுப்பதற்குத் தான் கணேசன் பழம் வாங்கிப் போகிறான். நாட்கள் ஓடினவே தவிர அதிரடிப்படை அந்தப் பாதையில் பயணிக்கவில்லை. யாராவது தகவல் கொடுத்திருப்பார் கள் என்று ஒரு கதையும் மெல்ல வெளிவரத் தொடங்கி யிருந்தது.

நாளடைவில் இரும்பு மதவடியில் அவர்கள் தங்கள் எதிரிகளுக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை பலர் மறந்து போயினர். „பெடியள் கண்ணி வெடியைக் கழட்டிக் கொண்டு போட்டாங்களாம் என்று ஒரு கதை

*வெளிவந்தது' அந்தப் பாதையில் பயணிக்கப் பயந்திருந் தவர்களும் தாராளமாக வந்து போய்க் கொண்டிருந் தார்கள். ஆனால் அவர்கள் இன்னமும் இலக்குக்காக காத்திருக்கிறார்கள் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது.*

*ஒரு பகல்நேரம். நகரமே அந்த அதிர்வால் ஆடியது. இரும்பு மதவடியில் கண்ணி வெடித்திருந்தது. தூக்கி எறியப்பட்ட அதிரடிப் படையின் ஜீப், தான் வந்த பாதையை நோக்கியவாறு சிதைந்து போயிருந்தது. கொஞ்ச நேரம்தான் ஆகி இருக்கும். கடலில் இருந்து செல்கள் வந்து விழ ஆரம்பித்தன. நகரம் வேகமாகக் கலைய ஆரம்பித்தது.*

*மாலையில் வீட்டில் இருந்தேன். கணேசன் வந்தான் களைத்திருந்தான்.கூடவே மூன்று குடும்பங்களைக் கூட்டி வந்தான். 'மச்சான் அங்கை இருக்கேலாது. குண்டு போடுறாங்கள். இவையள் இஞ்சை இருக்கட்டும். எல்லாம் தணிஞ்சாப் போலை போயிடுவினம்' உரிமை யோடு என்னைக் கேட்டான்.*

*அவர்கள் தங்குவதற்கான வசதிகளையும் உணவையும் ஏற்படுத்திக் கொடுத்தேன். நன்றியோடு என் கையைப் பிடித்தான். அன்று என்னுடன்தான் அவன் இருந்தான். மறுநாட் காலை நான் எழுவதற்கு முன்னரே அவன் எழுந்து, தான் கூட்டி வந்தவர்களுக்கான தேவைகளைச் செய்து கொண்டிருந்தான். காலையில் நானும் அவனும் ஒன்றாக உணவருந்தினோம். சாப்பாட்டுக்குப் பின் தான் போக வேண்டும் என்றான். ஏன், எதற்கு என்று நான் அவனைக் கேட்கவில்லை. எனக்குப் புரிந்திருந்தது. என்னிடம் விடைபெற்று வாசல் வரை சென்றவன், திரும்பி வந்தான்.*

*,,மச்சான் நான் முழுக்க நனைஞ்சவன்.நீ கையை மட்டும்*

*நனைக்கிற ஆள். நாங்கள் இடங்களை மாத்திக் கொண்டிருப்போம். உங்கள் தரவளிகளுக்குத்தான் ஆபத்து. பேசாமல் நீயும் வெளிநாடு போயிடன்' என்றான். சிரிப்பாலே பதில் சொன்னேன். பதிலுக்கு அவனும் சிரித்து விட்டுப் போனான். சுற்றிவளைப்பு, தலையாட்டிகள், கைதுகள், சித்திரவதைகள், சூடுகள் என நிலைமைகள் மோசமாக மாறிப் போயின. எப்பொழுதும் ஓடிக் கொண்டே இருந்தேன். முடியாத ஒரு கட்டத்தில் நானும் விமானம் ஏறி வெளி நாடு வந்து விட்டேன்.*

*இங்கே நான் இருந்த அகதி முகாமில் பல நாட்டவர்கள் இருந்தார்கள். தொலைக்காட்சி ஒன்றும் வானொலிப் பெட்டி ஒன்றும் எல்லோருக்காகவும் பொதுவாக இருந்தது. தொலைக்காட்சி எப்பொழுதும் மற்றைய நாட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும். வானொலிப் பெட்டி மட்டும் அநாதையாக இருக்கும். பிபிசி, வெரித்தாஸ் செய்திகளைக் கேட்க அந்த வானொலி எனக்குப் பயன்பட்டது.அன்றும் செய்தி கேட்டுக்கொண் டிருந்தேன்.„நேவி சுட்டதில் பருத்தித்துறைக் கடலில் 24 தமிழர்கள் பலி'' தலைப்புச்செய்தியைக் கேட்டபொழுதே தலை கிறுகிறுத்தது. சிலநாட்கள் கழித்து ஊரில் இருந்து கடிதம் வந்தது. அந்த 24 பேரில் கணேசனும் இருந்தான் என்கிற செய்தி அதில் இருந்தது.*

*இருபத்தியொன்பது வருடங்கள் ஆயிற்று. என்னை „வெளிநாடு போ' என்று சொன்னவனிடம் „நீயும் வா' என்று ஏன் நான் அன்று ஒப்புக்குக் கூட கேட்கவில்லை என்ற ஒரு குற்றஉணர்வு இன்றும் என்னுள் இருக்கிறது. நான் எவ்வளவு சுயநலவாதியாக இருந்திருக்கிறேன் என்பது இப்பொழுது புரிகிறது.*

***17.11.2013***

# பெயரைச் சொல்லவா?

*மாலையில் நான் ஓவியம் பயிலச் செல்லும் முன் சிவபாதம் கடைக்கு ஒரு தடவை சென்று விட்டுத்தான் மார்க் மாஸ்ரரின் அறைக்குப் போவேன். மார்க் மாஸ்ரர் எங்காவது செல்ல நேரிட்டால் தனது அறைத் திறப்பை சிவபாதம் கடையில் கொடுத்து விட்டுச் செல்வது வழமை. திறப்பு சிவபாதம் கடையில் இருந்தால் மார்க் மாஸ்ரர் எத்தனை மணிக்கு தனது அறைக்கு வருவார் என்ற தகவலும் அங்கிருக்கும்.*

*மார்க் மாஸ்ரரிடம், ஓவியம் சம்பந்தமாக எத்தனை கேள்விகளைக் கேட்டாலும் ஆசையாகச் சொல்லித் தருவார். எத்தனையோ நுட்பங்களைக் காட்டியும் தருவார். எல்லாவற்றுக்கும் மேலாக நான் college of fine arts இல் பயில வேண்டும் என்பதில் அவர் முனைப்பாக இருந்தார்.இந்த வேளையில்தான் எனது பாடசாலையில் பயிலும் சகமாணவனான சேகரும் ஓவியம் பயில விருப்பம் தெரிவித்தான். மார்க் மாஸ்ரரிடம் அறிமுகம் செய்து வைத்தேன். எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் அவனையும் என்னுடன் சேர்ந்து வந்து தன்னிடம் ஓவியம் பயில ஒப்புதல் தந்தார். சிலவேளைகளில் எனக்கு நேரம் போதாதிருந்தால் சேகரே சிவபாதம் கடைக்குப் போய் மார்க் மாஸ்ரரின் அறைத் திறப்பை வாங்கி வருவான். ஒருநாள் என்றுமில்லாதவாறு மார்க் மாஸ்ரரின் முகத்தில் சந்தோசத்தைக் காண முடிய வில்லை. சந்தேகமோ, சலிப்போ அவரது முகத்தில் நிறைந்திருந்தது. நானும் சேகரும் வரைதலில் ஈடுபட்டி ருந்தோம். மார்க் மாஸ்ரர் சிவபாதத்துடன் கதைத்துக் கொண்டிருந்தார். திடீரென என்னைக் கூப்பிட்டார்.*

*"இதிலையிருந்த ரண்டு புத்தகங்களைக் காணயில்லை. எடுத்தனீரோ?"*

*'எடுத்தனீரோ?' என்ற வார்த்தை எனக்கு அறவே பிடிக்கவில்லை. "நானெடுக்கேல்லை. நானெடுக்கிற தெண்டால் உங்களிட்டைச் சொல்லிப் போட்டுத்தானே கொண்டு போவன்"*

*"அப்ப இதிலையிருந்த ரண்டு புத்தகங்களும் எங்கை?"*

*"எனக்குத் தெரியாது"*

*"உமக்குத் தெரியோணும்.. நீர்தான் இதுக்குப் பொறுப்பு... நானில்லையெண்டால் சிவபாதத்திட்டை போய் திறப்பு வாங்கி வந்து ரூமைக் கவனிக்கிறது நீர்தானே? நீர்தான் இதுக்குப் பதில் சொல்லோணும்"*

*நான் சேகரைப் பார்த்தேன்.எந்தவித குழப்பமுமில்லாமல் படத்தைக் கீறிக் கொண்டிருந்தான்.*

*"அந்தப் புத்தகங்கள் சுலபமாகக் கிடைக்காது. நான் கன பேரிட்டை சொல்லித்தான் அதை வாங்கி வைச்சிருந்த னான். எப்பிடியோ அந்தப் புத்தகங்கள் இஞ்சை திரும்பி வரவேணும்" மார்க் மாஸ்ரர் சொல்லிக் கொண்டே இருந்தார். எனக்குள் நான் சிறுமையாகிப் போனது போன்ற உணர்வு. எனது தன்மானத்தைத் தட்டிவிட்டது போன்ற பிரமை. அன்று பயின்று முடிந்து புறப்படும் போது ஏதோ ஒப்புக்குத்தான் சொன்னேன்.*

*"போட்டு வாறன்"*

*"அடுத்த முறை வரக்கை புத்தகங்களையும் கொண்டு வாரும்" மார்க் மாஸ்ரர் சொல்வது காதில் கேட்டது.*

*அதன் பின்னர் நான் அந்தப் பக்கம் செல்லவேயில்லை. ஒன்று அந்தப் புத்தகங்களை யார் எடுத்தது, அது இப்போ எங்கே இருக்கிறது என்பது பற்றி எதுவுமே*

*எனக்குத் தெரியாது.மற்றையது என்னைச் சந்தேகித்தது, என்னிடம் அதைப்பற்றி அவர் கேட்டது, கேட்டமுறை. எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை.*

*நீண்ட நாட்களின் பின்னர் நகரத்தில் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பின்புறமாக இருந்து ஒரு கை எனது தோளில் விழுந்தது. முன்னால் நின்ற நண்பர்களின் கண்களில் மரியாதை தெரிந்தது. அவசரமாகத் திரும்பிப் பார்த்தேன். மார்க் மாஸ்ரர். வார்த்தைகள் வர மறுத்தன. அவரே எனக்காவும் பேசினார் போல் இருந்தது.*

*"எப்பிடி இருக்கிறீர்? அந்தப் பக்கம் பிறகு ஆளையே காணேல்லை"*

*நண்பர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.*

*"வாரும் பஸ் ஸ்ரான்ட்டுக்குத்தான் போறன். அதுமட்டும் கதைச்சுக் கொண்டு போவம். அலுவல் ஒண்டு இருந்த தாலைதான் பள்ளிக் கூடத்துக்கு வந்தனான். இப்ப நான் இங்கை படிப்பிக்கிறேல்லை. மாறி அங்கை போட்டன்"*

*"தெரியும்"*

*தெரிஞ்சுகொண்டும் என்னை வழியனுப்ப நீர் வரேல்லை ம்.. கோவம் எல்லாருக்கும் வாறதுதான். ஆனால் இந்த வயசிலை உமக்கு இவ்வளவு கோவம் கூடாது" நான் அப்பிடித்தான் கேக்கவேணும் .சேகரை எனக்குத் தெரி யாது. நீர்தான் கூட்டிக் கொண்டு வந்து விட்டனீர். நீர்தானே அதுக்குப் பொறுப்பு. அதுசரி அந்தப் புத்தகங் கள் எங்கையிருக்குது எண்டாவது தெரியுமே?"*

*குனிந்து பார்த்தபடியே தலையசைத்து "தெரியாது" என்று பதில் சொன்னேன்.*

"மோகன் ஆர்ட்ஸ் கடையிலை இருக்குது. சேகர்தான் கொண்டே குடுத்தது. சேகரும் அவனும் நல்ல சிநேகிதம். அங்கை புத்தகங்கள் இருந்ததை சிவபாதம் பாத்திட்டு வந்து என்னட்டை சொன்னாப் போலைதான் எனக்கு புத்தகங்கள் காணாமல் போன விசயமே தெரியும். வீணா ஏன் படிக்கிறவனைக் குழப்புவான் எண்டிட்டுத் தான் உம்மட்டை உரிமையோடை கேட்டன். அவனும் புத்தகங்களை திருப்பிக் கொண்டு வந்து வைப்பான் எண்டு பாத்தன்.நீர் கோவிச்சுக் கொண்டு போனதுதான் மிச்சம்"

என்னால் எதுவுமே பேச முடியவில்லை.

"புதுவீடு கட்டியிருக்கிறன். குடிபோகக்கை ஒரு அறைக்கு உம்முடைய பெயின்றிங் இருக்கோணும் என்று ஆசைப் பட்டன். நீர் வரவேயில்லை. கதையோடை கதையா எனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான்''

"வாழ்த்துக்கள் மாஸ்ரர்"

"அவனுக்கு என்ன பெயர் தெரியுமோ?" கேட்டுவிட்டு வாஞ்சையுடன் என்னைப் பார்த்தார். நானும் நிமிர்ந்து அவரைப் பார்த்தேன்.

"அவனுக்கு உம்முடைய பெயரைத்தான் வைச்சிருக்கிறன். சொல்லிவிட்டுப் புறப்படத் தயாராக இருந்த பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டு யன்னலூடாகக் கையசைத்தார்.

மார்க் மாஸ்ரரின் மகன் செல்வகுமாரனுக்கு இப்பொழுது முப்பத்திரண்டு வயது இருக்கும். இன்னும் அந்த செல்வகுமாரனை போய்ச் சந்திக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

*05.12.2004*

# காதலிக்காதே கவலைப்படாதே

*அவரை அங்கை ரீச்சரென்றே அழைப்போம். அவரின் முழுப்பெயர் அங்கையற்கண்ணி. அங்கையற்கண்ணி என்ற பெயர் நீண்டு போனதால் அங்கை.*

*அங்கை - அழகான பெயர். அவர் கூடத்தான் அழகு. யாரிடமும் தேவையில்லாமல் பேசமாட்டார். தானுண்டு தன் வேலையுண்டு என்பது அவரின் சுபாவம்.*

*அங்கை ரீச்சர் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்ட ஆசிரியையல்ல. தனிப்பட்ட முறையில் நடனம் பயிற்று வித்த ஒரு ஆசிரியை. எங்கள் ஊரில் இருந்து 22 மைல் தள்ளிப் போய்தான் நடன வகுப்பெடுத்து வருவார். நடன ஆசிரியை என்பதால் அவரின் நடையிலும் ஒரு நளினமிருக்கும். அழகு ஒன்று நளினமாக நடந்து வந்தால் இளசுகளுக்கு எப்படியிருக்கும்? அவர் போகும் போதும் வரும் போதும் எங்கள் வீதிகளில் நிறைய சைக்கிள்கள் மெதுவாக ஓடும். ஒரு பக்கம் போன சைக்கிள் தேவையில்லாமல் மறுபக்கம் மீண்டும் திரும்பி வரும். கழண்டு போயிருக்கும் சைக்கிள் செயினை சிரத்தை எடுத்து பூட்டிக் கொண்டு சைக்கிள் பாரின் முக்கோண வழியாக சிலர் பார்வையை ஓடவிட்டுக் கொண்டிருப்பார்கள். எங்கள் வீதியில் சன நடமாட்டம் அதிகமாக இருக்கிறது என்றால், அங்கை ரீச்சர் வந்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.*

*அங்கை ரீச்சரின் தம்பி சுதன் என்னுடன்தான் படித் தான். சுதன்தான் அங்கை ரீச்சரை பஸ் நிலையம் வரை கூட்டிக்கொண்டு போய் விடுவான். மாலையில் பஸ் நிலையத்தில் காத்திருந்து கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போவான். சுதனுடன் நானும் பல தடவைகள் அங்கை ரீச்சருக்காக பஸ் நிலையத்தில் காத்திருந்திருக்கிறேன்.*

*அங்கை ரீச்சர் என்னை அன்பாக தம்பி என்றே அழைப்பார். மாலையில் வரும் போது சுதனுக்கு மட்டுமல்ல எனக்கும் ஏதாவது இனிப்புகள் வாங்கி வந்து தருவார்.*

*அங்கை ரீச்சருக்கு ஒரு காதல் இருந்தது. அவரின் பக்கத்து வீட்டிலிருந்த கார்த்திகேயண்ணைதான் ரீச்ச ரின் காதலன். அவரும் நிறைய அன்பானவர். மின்சாரத் துறையில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். ரீச்சரின் பக்கத்து வீட்டுக்காரனாக இருந்தாலும் அவர்களது காதல் மிகவும் கண்ணியமாகவே இருந்தது. அவர்களுக்கு இடையில் காதல் இருந்தது ஊரில் அநேகருக்குத் தெரியும் . வீதிகளில் அங்கை ரீச்சரும் கார்த்திகேயண் ணணும் சந்திக்க நேர்ந்தாலும் வெறும் பார்வையுடன் விலகிச் செல்வார்கள். இத்தனைக்கும் இதுவே நான் பார்த்த முதல் கண்ணியமான காதல்.*

*ஒருநாள் நான் ரீச்சரைப் பார்த்த போது அவரின் முகத்தில் மகிழ்ச்சி மறைந்திருந்தது. ஏன் என்று நான் கேட்கவில்லை. கேட்கும் வயதும் எனக்கிருக்க வில்லை. முகத்தில் மட்டும்தான் அவரது மகிழ்ச்சி மறைந்து போயிருந்தது. செயல்களில் எதுவித மாற்ற மும் இருந்ததில்லை. திங்கள் முதல் வெள்ளி வரை நடன வகுப்புக்குச் சென்று வருவார் திரும்பி வரும்போது எனக்கும் சுதனுக்கும் ஏதாவது இனிப்பு வாங்கி வருவார். ஆனாலும் அவரது முகம் களையிழந்திருந்தது தெரிந்தது.*

*ஒருநாள் இரவு அங்கை ரீச்சரின் வீட்டுப் பக்கமாக துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ஊரெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டது. கொஞ்ச நேரத்தில் எல்லாமே அமைதியாகி விட்டது. அன்று என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. சின்னப் பையன் என்று எனக்கு யாரும் எதையும் சொல்லவில்லை. எப்படியாயினும்*

*விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருந்தது.*

*அடுத்த நாளே விடயத்தை அறிந்து கொண்டேன். விடயம் இதுதான். கதைக்கு ஒரு வில்லன் வேண்டு மல்லவா. அதுவும் காதல் கதைக்கு வில்லன் இல்லா விட்டால் அதில் ஒரு ஈடுபாடு இல்லாது போய்விடும். அங்கை ரீச்சரின் தாய்வழி உறவினனே வில்லனாக வந்தான். அதுவும் அங்கை ரீச்சரை விட அவருக்கு பதினான்கு வயது அதிகம்.*

*அங்கை ரீச்சரின் தாய்க்கும் தனது உறவினனை மணம் முடித்துக் கொடுப்பதிலேயே ஆர்வமிருந்தது. சினிமா காதல் மாதிரி இவர்கள் காதலும் முக்கோணக் காதலா னதால் காதலனுக்கும் வில்லனுக்கும் இடையில் மோதல் ஆரம்பமானது. அதன் இறுதிக் கட்டமே கார்த்திகேயண் ணையின் துப்பாக்கி விளையாட்டு.*

*கார்த்திகேயண்ணையிடம் முயல்வேட்டைக்குக் கொண்டு செல்லும் துப்பாக்கி இருந்தது. முயல் வேட்டைத் துப்பாக்கி என்றால், சுடும் போது சன்னங்கள் சிதறிப் பாயும். அதில் ஒன்றாவது முயலில் படும் சாத்தியக் கூறு இருக்கும். இந்தத் துப்பாக்கியை வைத்துத்தான் கார்த்தி கேயண்ணை விளையாட்டுக் காட்டினார். ஆளைப் பார்த்துச் சுடாமல் பயம் காட்டுவதற்காக வானத்தைப் பார்த்து சுட்டிருக்கின்றார். விளைவு சத்தம் கேட்டு ஊர் எல்லாம் திரண்டு விட்டது.*

*தமிழ் சினிமாக்களில் பயங்கர ஆயுதங்களை வில்லன் தான் வைத்திருப்பான். கதாநாயகன் வெறும் கையுடன் சென்று சண்டை செய்து எதிரியை வென்று காதலியை மீட்டு வருவான். ஆனால் நிலமை இங்கு வேறுவிதமாக இருந்தது. கதாநாயகன் கையில் ஆயுதமிருந்தது. இது ஊராருக்கு கார்த்திகேயண்ணையை வில்லனாக மாற்றிக்*

காட்டியது. ஆகவே முடிவு மங்களமாக இல்லாமல் அமங்களமாக இருந்தது. ஊராரின் ஆதரவு அங்கை ரீச்சரின் தாய்வழி உறவினனுக்கே கிடைத்தது. பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் இரவோடு இரவாக, தலை கவிழ்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த அங்கை ரீச்சருக்கு அவரது தாய் வழி உறவினன் தாலி கட்டி காதல் கதையை முடித்து வைத்தான்.

எனக்கு அங்கை ரீச்சரை நினைக்க அழுகையே வந்து விடும் போலிருந்தது. கார்த்திகேயண்ணையும் பாவம். இந்த விடயத்திற்குப் பிறகு ஊரில் யாருடனும் கார்த்தி கேயண்ணை கதைத்ததை நான் காணவில்லை. அழகான அவரின் முகத்தில் தாடி வளர்ந்து கொண்டேயிருந்தது. அந்த அவரது அழகு முகத்தை பின்னாட்களில் முழுமை யாக நான் பார்க்கவேயில்லை. அங்கை ரீச்சர் கூட நீண்ட நாட்களாக நடனவகுப்பு எடுக்கப் போகவில்லை. எனது சிறுபராயத்தில் உள்ள விளையாட்டுக்கள் படிப்புக்களுடன் இவர்களது விடயம் பல காலம் எனக்கு மறந்தே போயிற்று.

கொஞ்ச வருடங்களின் பின்னர் அங்கை ரீச்சரை மறுபடி நான் பார்த்தேன். ஆளே முழுவதுமாக மாறி இருந்தார். நடையில் நளினங்கள் இருக்கவில்லை. முகத்தில் சிரிப்பு சிறிதளவேனும் இல்லை. கண்களின் கீழே புதிதாக வளையங்கள் விழுந்திருந்தன. கன்னத்தில் குழிகள் இருந்தன. அவரது கண்கள் குழிக்குள் இருந்தன.

"புருசன் பயங்கரக் குடிகாரன். பாவம் இரண்டு பெட்டை களைப் பெத்துப் போட்டு உழைக்கப் போறாள். புருசன் சுகமா வீட்டிலையிருந்து குடிச்சுக் கொண்டிருக்கிறான். எப்பிடியிருந்த பெட்டை இப்பிடிப் போனாள். மனுசன் அடிக்கிறவன் போலை" என்று ஊரில் அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

*இப்போதெல்லாம் அங்கை ரீச்சரைக் கூட்டிக் கொண்டு போவதற்கு சுதன் வருவதில்லை. தனியாக வந்து தனியாகவே அவர் போய்க் கொண்டிருந்தார். ஒருநாள் பஸ் தரிப்பிடத்தில் நான் நின்ற போது அங்கை ரீச்சர் நடன வகுப்பு எடுத்து முடித்து விட்டு வந்து பஸ்ஸால் இறங்கினார். தூரத்தில் நின்று பார்த்தால் ரீச்சரை அடையாளம் காண முடியாது. அந்தளவுக்கு அவரில் மாற்றம் இருந்தது. காலம் எப்படியெல்லாம் மனிதர் களைப் புரட்டிப் போடுகிறது. மனது கனமானது.*

*"தம்பி எப்பிடி இருக்கிறாய்..? உனக்கு ஒண்டும் வாங்கிட்டு வரேல்லையடா"*

*இதைச் சொல்லும் போது அவரின் கண்களில் ஏதோ மின்னுவது தெரிந்தது. வாகனங்களின் வெளிச்சம் கண் களில் நிறைந்திருந்த கண்ணீரில் பட்டுத் தெறிப்பதைப் புரிந்து கொண்டேன்.*

*அந்த வயதில் நிலமைகளை சமாளிக்கும் பக்குவம் எனக் குத் தெரியாது. பேசாமல் நின்றேன்.*

*"படி.. நல்லாப் படி.. "எனது தோளில் தட்டிச் சொல்லி விட்டுச் சென்றார்*

*அடுத்தநாள் காலையில் செய்தி கிடைத்தது ‘‘அங்கை ரீச்சர் விசம் குடித்து இறந்து போனார்‘‘ என்று.*

*"அம்மா இனியும் என்னாலை ஏலாது" என்று சொன்னது தான் அங்கை ரீச்சர் சொன்ன கடைசி வார்த்தைகள் என அறிந்தேன். தாய்க்குக் கட்டுப்பட்ட அந்த உயிர் தாயின் மடியிலிலேயே பிரிந்தது.*

*கார்த்திகேயண்ணையை நான் இங்கு வரும் போது கண்டிருக்கிறேன். அந்த அழகு முகத்தை மறைத்த தாடி*

நரைத்திருந்தது. இப்போ அவர் உயிருடன் இருந்தால் அவருக்கு ஒரு எழுபது வயதாவது இருக்கும்.

ஊருக்குப் போனால் கார்த்திகேயண்ணையைத் தேடிச் சென்று கதைக்க வேண்டும். அவரது வைராக்கியத்தைப் பற்றிக் கேட்கவேண்டும். காதலித்தவள் கிடைக்கவில்லை என்பதற்காக கல்யாணமே இல்லாமல் வாழ்ந்து என்ன கண்டீர்கள் எனக் கேட்க வேண்டும்.

ஊருடன் பகைத்தால் வேருடன் கெடும் என்பது உண்மைதானா எனவும் கேட்க வேண்டும்.

*22.09.2004*

# ஆடவரெல்லாம் ஆடவரலாம்

*பத்திரகாளி கோவில் காவடி என்றால் அந்த நகரத்து இளைஞர்களுக்கு எல்லாம் பயங்கரக் கொண்டாட்டம் தான். நகரமே களைகட்டி நிற்கும்.*

*திருவிழா தொடங்கும் போது வீட்டில் கிடாய் (கடா) வாங்கிக் கட்டி விடுவார்கள். அவர்கள் உபவாசம் இருந்தாலும் கிடாய்க்கு நல்ல தீனி போட்டு வளர்ப் பார்கள். பிண்ணாக்கு, தவிடு என்று குழைத்துக் குழைத்து வலுக்கட்டாயமாகத் தீத்துவார்கள்.*

*வீட்டுக்கு வருபவர்களிடம் எல்லாம் பெருமையாகத் தங்கள் கிடாய் பற்றிப் பேசிக் கொள்வார்கள். தவறாமல் கிடாய் கட்டியிருக்கும் இடத்துக்கும் கூட்டிச் சென்று தங்கள் மகிழ்ச்சியைக் காட்டுவார்கள். இவையெல்லாம் திருவிழா வரைதான். திருவிழா முடிந்த மறுநாள் கிடாயின் கதையும் முடியும். அன்று கிடாய் கதை முடிக்கும் வீடுகளிலெல்லாம் வேறொரு திருவிழா மிகவும் சிறப்பாக நடக்கும்.*

*திருவிழா ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த நேரமது. அன்று காவடி, கரகம் என வீதி அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. கரகம் தூக்கி ஆடும் இளைஞர்கள் எல்லோரும் எனக்குத் தெரிந்தவர்கள். அதில் முக்கியமானவர்களாக முத்து, வரதன், மணியம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.*

*கரகம் ஆடுபவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படும் பட்சத்தில் செய்து தரும்படி என்னைக் கேட்டுக் கொண்டதால் கரகம் ஆடும் இளைஞர்களுக்குப் பக்கத்தில் நானும் இருந்தேன்.*

பெரிதாக செய்வதற்கு எனக்கு ஒன்றுமே இருக்க வில்லை. கரகம் ஆடுபவர்கள் களைத்துப் போனால் குடிப்பதற்கு அவர்களுக்கு குளிர்பானம் தந்தால் போதும்.

எனது தோளில் தொங்கும் பையில் நாலைந்து கோலாப் போத்தல்கள் இருந்தன. இவர்கள் குடித்து முடிந்தால் புதிது புதிதாக கோலாக்களை என்னிடம் கொண்டு வந்து தந்து கொண்டிருந்தார்கள். எனவே எனக்குப் பெரிதாக அலட்டிக் கொள்ளும் வேலை இல்லை.

கரகங்கள் நகர வீதிகளில் அட்டகாசமாக ஆடி வந்தன. பெண்கள் உடையில் தலையில் வண்ணக் கரகங்களை வைத்து அவர்கள் சுற்றிச் சுழன்றாடி வரும் அழகோ அழகு.

காவடி, தீச்சட்டி, பாற்செம்பு என முன்னால் பல போய்க் கொண்டிருந்தாலும், வீதியில் நிற்கும் மக்களெல்லாம் முண்டியடித்துப் பார்க்க விரும்பியது என்னவோ பின்னால் வந்து கொண்டிருந்த இந்த இளைஞர்களின் கரகாட்டத்தைத்தான்.

உடுக்கு, மேளம், பறை இப்படியாக பலவித கருவிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த ஒலியில் ஆட்டங்கள் அமர்க்களமாக இருந்தன. வாத்தியங்கள் எழுப்பிய ஒலியில் ஆடும் உணர்ச்சி தானாகவே கால்களுக்கு வந்து விடுமோ என்ற பிரமை கூட வந்தது. ஒரு விதத்தில் கரகாட்டக்காரருடன் நானும் வருவது எனக்குப் பெருமையாக இருந்தது.

மணியன் ஆவேசமாக ஆடிக் கொண்டிருந்தான். அவனுக்கு உரு வந்து விட்டதாகப் பேசிக் கொண் டார்கள். அவனது தலையில் இருந்த கரகத்தை பக்கத் தில் இருந்தவர்கள் பக்குவமாக வாங்கிக் கொண்டார்கள்.

*தலையில் கரகமில்லாமலேயே அவன் சுழன்று சுழன்று வேகமாக ஆடிக் கொண்டிருந்தான்.*

*ஒருவர் தனது தோளில் இருந்த சால்வையால் அவனைக் கட்டி அவனது முதுகுப் புறமாக சால்வையின் இரு நுனிகளையும் சேர்த்து இறுகப் பிடித்திருந்தார். ஆடும் அவனது கால்கள் தனது கால்களைத் தாக்காமல் அவதானமாகவே அவர் காலடியை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். கண்டிப்பாக அவருக்கு இது குறித்த முன் அனுபவம் இருந்திருக்க வேண்டும்.*

*பல வீதிகள் ஊடாக பல மணி நேரம் நடந்த களைப்பில் எனது தோளில் தொங்கும் பையில் இருந்த கோலாவை எடுத்து ஒரு முடக்கு குடித்தேன்.அவ்வளவுதான். சிந்திக்க எண்ணவில்லை வீதியில் அப்படியே துப்பி விட்டேன்.*

*கரகம் ஆடிய வண்ணம் இதைப் பார்த்துக் கொண்டிருந்த முத்து ஆடியபடியே என்னை நெருங்கி வந்தான்.*

*கரகத்தின் மேளச்சத்தத்துக்கு மத்தியிலும் காதிற்குள் கிசுகிசுத்தான். "நீங்கள் இதெல்லாம் குடிக்கக் கூடாது. இது கரகம் ஆடுறவையளுக்கு மட்டும்தான்"*

*சொல்லி விட்டு ஆடியபடியே அப்பால் நகர்ந்தான்.*

*அடப்பாவிகளா என்று கத்த வேண்டும் போலிருந்தது. சாராயத்தின் கலர் தெரியாமல் இருப்பதற்கு சிறிது கோலா கலந்து அதை கோலாப் போத்தலுக்குள் விட்டு வைத்திருந்தார்கள். பார்ப்பவர்களுக்கு அது கோலா. குடிப்பவர்களுக்கு அது சாராயம்.*

*இப்போ எனக்கு விளங்கியது, இவர்கள் வேகமாகச் சுழன்றாடி வரும் இரகசியம்.*

*பறை அடிப்பவர்களுக்கு முன்னால் மணியன் அபிநயம் பிடித்து மூர்க்கத்தனமாக ஆடிக் கொண்டு இருந்தான்.*

*பத்திரகாளி கோவில் காவடி என்றால் அந்த நகரத்து இளைஞர்களுக்கு எல்லாம் பயங்கரக் கொண்டாட்டம்தான்.*

*25.07.2004*

# பள்ளிக்கூடம் போகலாம்

*ஒன்பதாவது வகுப்பு. இரசாயனவியல் ஆசிரியரான பொன்னம்பலம் மாஸ்ரர்தான் எங்களது வகுப்பாசிரியர் ஆகவும் இருந்தார். அதுவும் ஒரு சில மாதங்களே. திடீரென அவருக்கு இடமாற்றம் வந்ததால் நல்லதொரு ஆசிரியரை இழக்கும் நிலை எங்களுக்கு.*

*அவருக்குப் பிரியாவிடை கொடுப்பதற்கு மேல் வகுப்பு மாணவர்கள் முடிவு செய்து 9, 10, 11, 12 விஞ்ஞான வகுப்பு மாணவர்களிடம் தலைக்கு இரண்டு ரூபா (அப்போதெல்லாம் இரண்டு ரூபா என்பது பெரிய காசு) வாங்கிக் கொண்டார்கள்.*

*இந்த பிரியாவிடை விடயத்திற்கு பொறுப்பாக இருந்தது 12வது படித்துக் கொண்டிருந்த மாணவர் தலைவன் ரவி. இன்று அவன் நாட்டில் ஒரு சட்டத்தரணியாக இருக் கிறான். விஞ்ஞானம் படித்த சட்டத்தரணி.*

*ரவியின் தம்பி சபா எனது வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தான். ஆதலால் இந்தப் பிரியாவிடை விட யம் எங்களது வகுப்பிலும் தடல் புடலாகப் பேசப் பட்டது.*

*பிரியாவிடை நிகழ்ச்சிக்கு சில வாரங்களுக்கு முன்னால் அதிபர் தங்கராஜா மாஸ்ரரிடமிருந்து நிகழ்ச்சிக்கான அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் மாணவர்களிடம் ஒரு குழப்பமான சூழ்நிலை. இதில் முன்னணியில் செயற் பட்டுவந்த ரவி, சபா இருவருக்கும் தன்மானப்பிரச்சனை.*

*பாடசாலை பிரியாவிடை செய்வதால் மாணவர்கள் தனியாக பிரியாவிடை நிகழ்ச்சி நடத்தத் தேவையில்லை*

என்பது அதிபரின் வாதம். மாணவர்களிடம் நிதி வசூலித்த பின்னால் நிறுத்த முடியாது என்பது மாணவர் தலைவரது கருத்து. இவர்களுக்கு நடுவில் பாவம் அப்பாவிகளாகிய நாங்கள்.

பிரியாவிடை நிகழ்ச்சியை மாணவர்கள்தான் நடத்த வேண்டும் என்பதில் ரவி பிடிவாதமாக இருந்தான். அவனுக்குப் பின்னால் சில ஆசிரியர்களும் இருந்தார்கள் என சாடைமாடையாக சிலர் பேசிக் கொண்டார்கள். அதிபர் தங்கராஜா மாஸ்ரரோ அமைதியாக இருந்தார்.

மாணவர்களிடம் வசூலித்த பணத்தை உடனடியாக திருப்பிக் கொடுத்து விடவேண்டுமென அதிபரிடமிருந்து இறுதி அறிவிப்பு வந்தது.

எனது மனதுக்குள் சந்தோசம். பிரியாவிடைக்கு என்று அம்மாவிடமிருந்து பணம் வாங்கியாயிற்று. பணம் திருப்பித் தரப்பட்டால் அதை எனது வேறு தேவைக்குப் பயன்படுத்தலாமென கணக்குப் போட்டுக் கொண்டேன். நிகழ்ச்சி நிறுத்தப் பட்ட விசயம் அம்மாவுக்கு எங்கே தெரியப் போகிறது?

கணக்குகள் எப்பொழுதும் சரிவராது. நான் போட்ட கணக்கும் தப்பாகப் போயிற்று.

ஒருநாள் மாணவர் தலைவரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. அதிபர் தங்கராஜா மாஸ்ரர் எங்களது நிகழ்ச் சியை மறுப்பதால் கச்சேரியிலுள்ள கல்வித் திணைக் களத்தில் இதுவிடயமாக முறைப்பாடு செய்யவுள்ளோம். ஆகவே நாளை காலை எட்டு மணிக்கு விஞ்ஞானவகுப்பு மாணவர்கள் பாடசாலைக்கு முன்னால் கூடவும். போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன ஒவ்வொரு மாணவரும் போக்குவரத்துக்கான செலவாக ஒரு ரூபா கொண்டு வரவும்.

அநேகமான மாணவர்கள் ரவியின் பின்னால் நின்றார் கள். போதாதற்கு சபா எனது வகுப்பிலிருந்து எல்லோ ருக்கும் உரு ஏத்திக் கொண்டிருந்தான்.

ஆகவே இவர்களது பேச்சுக்கு எடுபடுவது தவிர வேறு மார்க்கம் எனக்கு இருக்கவில்லை.

முதலில் அம்மா இந்த விடயத்துக்கு ஒத்து வரவில்லை. ஆனாலும் எனது வகுப்பு மாணவர்கள் எல்லோரும் பங்கு கொள்வதை அறிந்த பின்னர் ஒரு ரூபா தந்தா. அதுவும் மனமேயில்லாமல்.

கச்சேரிக்கான பயணம் பாட்டுக்கள் துள்ளலுடன் மகிழ் வாக இருந்தது. கச்சேரி வாசலில் எங்கள் வண்டிகள் மறிக்கப் பட்டன. வாசலிலேயே நாங்கள் கொண்டு போன புகார் வாங்கப்பட்டது.

உடனடியாக எல்லோரும் பாடசாலை திரும்ப வேண்டும் எனக் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப் பட்டோம்.

தங்கராஜா மாஸ்ரருக்கு கச்சேரியிலும் அதிக செல்வாக்கு இருந்தது பின்னர்தான் தெரியவந்தது. எது எப்படியோ எனது முதற்போராட்டம் மூன்று ரூபாக்கள் நட்டத்துடன் தோற்றுப் போனது.

அடுத்தநாள் வகுப்பறைக் கரும்பலகையில் எழுதப்பட் டிருந்தது "நேற்று பாடசாலைக்கு வராத மாணவர்கள் அதற்கான காரணத்தை பெற்றோர் அல்லது பாது காவலரிடமிருந்து எழுத்து மூலமாகப் பெற்று அதிபரிடம் சமர்ப்பித்து, அதன் பின்னரே வகுப்பறைக்கு வரவும்"

பாண்டிய மன்னனின் பிரம்படியை விட தங்கராஜா மாஸ்ரரின் பிரம்படி எப்படியிருக்கும் என்று அந்தச்

*சிவனுக்கே தெரியும். நெருப்பில் சுட்டு நுனி கறுத்திருந்த பிரம்பு நினைவில் வந்து கலக்கியது. எல்லோரையும்விட அதிகமாகக் கலங்கிப் போயிருந்தது ரவியும், சபாவும் தான்.*

*எல்லோரும் ரவியின் வீட்டில் கூடினோம். தனது மகனால்தான் இவ்வளவும் என்பதை அறிந்து ரவியின் தந்தை எங்களுக்கு உதவ முன்வந்தார். அவர் தங்கராஜா மாஸ்ரரை அவரது இல்லத்தில் சந்தித்து எங்களுக்காக கதைத்துப் பார்த்தார்.*

*பாடசாலைக்குவரமுடியாமற் போனதற்கான காரணத்தை எழுத்து மூலமாக ஒவ்வொரு மாணவரும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதில் தங்கராஜா மாஸ்ரர் உறுதியாக இருந்தார். சரி ஏதாவது ஒரு காரணத்தை எழுதிக் கொண்டு போய்க் கொடுங்கள். பிரச்சினை வராது என்று ரவியின் தந்தை உறுதி தந்தார்.*

*இது விசயமாக வீட்டில் கேட்டால் அங்கேயும் பூசை நடக்குமென்பதால் நாங்களே கடிதங்களைத் தயாரித்துக் கொண்டோம். எனது அம்மம்மா காலமாகிவிட்டா என்று எனக்கான காரணத்தைக் குறிப்பிட்டு கடிதம் எழுதிக் கொண்டேன்.*

*அடுத்தநாள் கடிதங்களுடன் மண்டபத்தில் கூடினோம். மண்டபதின் ஒரு வாசலினூடகத்தான் அதிபரின் அறைக்குச் செல்ல வேண்டும். நான்கு நான்கு பேராக உள்ளே அழைத்தார்கள். துணிவுள்ளவர்கள் (இல்லை என்றாலும் இருப்பதாகக் காட்டிக் கொண்டு) முன்னுக் குப் போனார்கள்.*

*உள்ளே போனவர்கள் பிறிதொரு வாசலினூடக வகுப்பறைகளுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எனது முறை வந்தது. உள்ளே போனேன்.*

என்னுடன் சங்கர், முகுந்தன், நடராஜா ஆகியோரும் உள்ளே வந்தார்கள்.

முறிந்து சிதறிய பிரம்புத் துகள்கள் நிலத்தில் இருந்து பயமுறுத்தின. தங்கராஜா மாஸ்ரரைப் பார்க்கும் துணிவு எனக்கில்லை. முகத்தை எவ்வளவு பாவமாக வைத்திருக்க முடியுமோ அப்படி வைத்திருந்தேன்.

கிளாக்கர் வந்து எங்களிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக் கொண்டார்.

‘‘என்ன எழுதியிருக்கு?’’ சிங்கம் கர்ஜித்தது.

‘‘நாலு பேருக்கும் அம்மம்மா செத்துப் போச்சாம்’

கிளாக்கர் ஏளனமாகச் சொல்லி விட்டு கடிதங்களை மேசையில் வைத்தார்.

பரீட்சையில்தான் பார்த்து எழுதுவார்கள் என்று சொல் வார்கள். கடிதத்தில் உள்ள காரணத்தையும் ஆள் ஆளாக்கு பார்த்து எழுதியதை அன்றுதான் பார்த்தேன்.

தங்கராஜா மாஸ்ரர் கிளாக்கரை நோக்கி கண் அசைத்தார். சுவரைப் பார்த்தபடி நால்வரும் நிறுத்தப் பட்டு, குனிந்து கால் பெருவிரலை கைகளினால் பிடிக்கும் வண்ணம் பணிக்கப் பட்டோம்.

‘‘நாலுபேருக்கும் ஒரே அம்மம்மாவா? வெவ்வேறையா?’’

தங்கராஜா மாஸ்ரரின் கரகரத்த குரல் காதில் கேட்டது. அதுக்குப் பிறகு எதுவுமே நினைவில்லை. சுளீர், சுளீர் என்று பிற்பக்கத்தில் பிரம்பின் இரண்டு இழுவைகள். தண்ணீரில் இருந்து வெளியில் போட்ட மீன் கூட என்னளவுக்குத் துள்ளியிருக்காது.

*வகுப்பறைக்கு வந்தால் எனக்கு நாலு, எனக்கு மூன்று, எனக்கு இரண்டு என்று ஆளாளுக்குப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.*

*பேசும் நிலையில் நானில்லை. மூன்று ரூபா கொடுத்து இரண்டு சுளீர் வாங்கிய கெட்டித்தனத்தைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?*

*08.08.2004*

***பத்தியில் நான் குறிப்பிட்ட ரவி என்கிற மாணவர் தலைவன்தான் இன்றைய எங்களது பருத்தித்துறை நகரசபைத்தலைவர் ரவீந்திரன் சபாநாயகம்***

# அறுபது பாகக் கிணறு

பழங்கள் இருந்த ஒரு கூடையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நாகப்பாம்பு கடித்ததால் எகிப்தின் ராணி யாக இருந்த கிளியோபட்ராவுக்கு மரணம் நேர்ந்தது. கிளியோபட்ராவை கடித்த அதே நாகப்பாம்பு கடித்ததால் அவருடைய தோழிகள் இருவரும் இறந்து போனார்கள் எனக் கதை இருக்கிறது.

இதை ஆராய்ந்து அது சாத்தியம் இல்லை என்று மான்செஸ்டர் அருங்காட்சியகத்தின் காப்பாளரான ஆண்ட்ரூ க்ரேயும் எகிப்திய நிபுணரான ஜாய்ஸ் டில்டெஸ்லியும் கூறுகின்றனர் என பிபிசி இணையத்தில் ஒரு தகவலை சமீபத்தில் வாசித்தேன். கி.மு 30இல் நடந்ததை இப்பொழுது ஆராய்ந்து யாரைப் பிடித்துத் தண்டிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. ஆனால் இந்தத் தகவல் எனக்குள் உறைந்திருந்த ஒரு விடயத்தை விழிக்க வைத்திருக்கிறது.

அந்தக் கிணற்றுக்குப் பெயர் அறுபது பாகக் கிணறு. அது ஒன்றும் அறுபது பாக அளவு ஆழம் இல்லை. அதன் ஆழத்தைப் பார்த்து அந்தக் காலத்தில் யாரோ ஒரு மேதை „கிணறு அறுபது பாகம் வரும் போல' என்று சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். ஆழம் என்றால் அப்படி ஒரு ஆழம். அந்தளவு ஆழத்தில் இதுவரை வேறொருகிணற்றை நான் பார்த்ததேயில்லை.

எனது ஊரில் இருந்த கணையந்தோட்டம் என்ற கிராமத்தில் இருந்ததுதான் அந்த அறுபது பாக பொதுக் கிணறு. ஆழமான கிணறு என்பதால் மனிதர்களோ மிருகங்களோ அதற்குள் விழுந்து விடாமல் இருக்க எச்சரிக்கையோடு சற்று உயரமாக கிணற்றைச் சுற்றி வட்டமாக சுவர் கட்டி இருந்தார்கள்.

*அந்தக் கிணறு இருக்கும் ஒழுங்கையூடாகவே எனது பாடசாலைப் பயணம் இருந்தது. காலையில் பாட சாலைக்குப் போகும் பொழுது, ,,அந்த மாப்பிள்ளை காதலிச்சான் கையைப் புடிச்சான்,, என்று பணம் படைத்தவன் படத்தில் வரும் கே.ஆர்.விஜயா மாதிரி யாரேனும் குளிக்கிறார்களா என ஓரக்கண் பார்ப்ப துண்டு. எனக்குத்தான் அதிர்ஷ்டம் பக்கத்தில் இருப்ப தில்லையே. ,,ருக்குமணியே ருக்குமணியே அக்கம் பக்கம் என்ன சத்தம்' என்ற ரோஜாப் படப்பாணி பெரிசுகளின் தரிசனம்தான் கிடைக்கும். அந்தக் கிராமத்துக் குமரிகள் எப்போதான் குளிப்பார்கள் என்பது எனக்கு தெரியா மலேயே போயிற்று.*

*அறுபது பாகக் கிணற்றடியில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில்தான் வினாசித்தம்பி வாத்தியார் (கவனிக்க பெயரை மாற்றி இருக்கிறேன். எதற்கு வம்பு) வீடு இருந்தது. உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் சொல்லித் தரும் ஆசிரியர் அவர். எங்கள் ஊரில் தினவெடுத்து சந்தியில் நின்று அட்டகாசங்கள் செய்யும் இளம் காளைகள் வினாசித்தம்பி வாத்தியாரிடம் உடற் பயிற்சி, மல்யுத்தம் என்று கலைகள் படித்தவர்கள். பகற்பொழுதுகளில் மப்பும் மந்தாரமுமாக மதவுகளில் இருந்து கொண்டு வீதியை ஆட்சி செய்து கொண்டிருப் பார்கள். பங்குனி பிறந்து விட்டால் கள்ளின் விலை கணிசமாகக் குறைந்து விடும். அதனால் காளைகளுக்கு மப்பு எக்கச் சக்கமாக ஏறிவிடும். அப்பொழுது மதவு களில் இருந்து கொண்டு இவர்கள் வாய்களில் இருந்து தெறிக்கும் சொற்கள் எல்லாம் சுருதி தப்பாமல் அசுத்த மாகவே வந்து விழுந்து கொண்டிருக்கும்.*

*குருவுக்கு மாணவர்கள் தரும் இவ்வாறான அவமரியாதை கள் வினாசித்தம்பிவாத்தியாரின் மதிப்பை பெரிதும் கீழே*

*இறக்கி விட்டிருந்தன. இதைப் பற்றி எல்லாம் வினாசித்தம்பி வாத்தியாருக்கு சிறிதள வேனும் கவலை கிடையாது. அவரிடமும் குடி விரும்பிக் குடிகொண்டிருந்ததால் மதிப்பு மரியாதை எல்லாம் அவர் எதிர் பார்க்காத விடயங்களாக இருந்தன. வினாசித்தம்பி வாத்தியாருக்கு குடும்பத்தில் ஏதோ சிக்கல் இருந்தது.*

*அந்தச் சிக்கல் சொத்துக்களாலோ அல்லது சொந்தங்களுக்குள் ஏற்பட்ட வேறு ஏதாவது தகராறுகளாலோ வந்தது என்பது எனக்குத் தெரியாது. அவருக்கு நெருங்கிய உறவுகளோடு எப்பொழுதும் பிணக்கு தொடர்ந்து கொண்டே இருந்தது. வினாசித்தம்பி வாத்தியார் சகல விளையாட்டுக்களையும் அறிந்து வைத்திருந்ததால் அவரை நெருங்கிக் கதைக்கவோ மல்லுக்கட்டவோ யாருக்கும் துணிவில்லை. ,,மனுசன் தூக்கி அடிச்சுப் போடும்' என்று இடைவெளி விட்டு தூர இருந்தே திட்டிக் கொண்டிருந்தார்கள்.*

*ஒரு நாள் இரவு கணையந்தோட்டக் கிராமம் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொருத்தர் கையிலும் ஏதோ ஒரு விளக்கு இருந்தது.*

*,,வினாசித்தம்பிவாத்தியார் அறுபது பாகக் கிணத்துக்கு உள்ளை விழுந்திட்டாராம்' தகவல் கிடைத்து நான் அந்த இடத்துக்குப் போன பொழுது எல்லாமே முடிந்து விட்டிருந்தது.*

*,,வினாசித்தம்பி வாத்தியார் பாதைமாறி கிணற்றுப்பக்கம் சைக்கிளை விட்டிட்டார். மனுசன் நல்லாத் தண்ணி அடிச்சிருந்திருக்கிறார். அப்பிடியே சைக்கிளோடை கிணத்துக்குள்ளை விழுந்திட்டார்' சம்பவத்தைப் பார்க்காதவர்களும் காட்சியை விபரித்துக்கொண்டிருந்தார்கள். விபத்து மரணம்தான் என அவர்களே தீர்ப்பும் சொன்*

னார்கள். அந்தக் கிணற்றுக்குள் விழுந்தால் தப்புவதற்குச் சாத்தியமே இல்லை. ஆனாலும் எங்கோ ஒரு தப்பு இருப்பதாக எனக்குப் பட்டது.

நல்ல போதையில் வரும் ஒருவர் வேகமாக சைக்கிள் ஓட்ட வாய்ப்பில்லை. ஆக வினாசித்தம்பி வாத்தியார் மெதுவாகத்தான் சைக்கிளை ஓட்டி இருப்பார். அப்படி மெதுவாகவே வரும் சைக்கிள் கிணற்றுச் சுவரில் மோதினால் நிலை தவறி அவர் நிலத்தில் விழுவதற்கான சாத்தியமே அங்கே இருந்தது. சரி நிலத்தில் விழுந்தவர் போதையில் என்ன செய்வது என்று தெரியாமல் தள்ளாடிக் கிணற்றுக்குள் விழுந்து விட்டார் என்று வைத்துக் கொண்டாலும் அவரது சைக்கிள் எப்படி கிணற்றுக்குள் விழும்? எஜமானர் கிணற்றுக்குள் விழுந்து விட்டார் என்ற கவலையால் சைக்கிள் தானாகவே கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்குமா? அல்லது வினாசித்தம்பி வாத்தியார் தனக்கு வாழ்க்கை வெறுத்துப் போய் விட்டது என்று கிணற்றுக்குள் குதித்திருப்பாரா? „நான் போன பிறகு தனியாக இருந்து நீ ஏன் கஸ்ரப்படப் போகிறாய்' என்று கிணற்றுக்குள் குதிப்பதற்கு முன்னர் சைக்கிளையும் தூக்கிக் கிணற்றில் போட்டிருப்பாரா? என்று என்னிடம் கேள்விகள் நீண்ட நாட்களாக இருந்தன. வாழ்க்கைச் சூறாவளிகளில் அதை மறந்தே போயிருந்தேன்.

இப்பொழுது வந்த கிளியோபற்றாவின் மரணம் பற்றிய சந்தேகங்கள்தான் மீண்டும் வினாசித்தம்பி வாத்தியாரின் நினைவை மீட்டிப் பார்க்க வைத்திருக்கிறது. விபத்து மரணம் என்று வினாசித்தம்பி வாத்தியாரின் இறப்புக்கு மரணச்சான்றிதழ் தந்து நாற்பது வருடங்களாயிற்று. ஆனாலும் என்னிடம் இருக்கும் கேள்விகளுக்கு மட்டும் மரணம் கிடையாது.

***27.10.2015***

# ஓடிப்போனவன்

*நான்காம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்புக்குப் போன பொழுதுதான் எனக்கு துரைலிங்கத்தின் அறிமுகம் கிடைத்தது.*

*அவனுக்குப் படிப்பு சரியாக ஏறவில்லை. பரீட்சை யில் குறைந்த புள்ளிகள். இவைதான் துரைலிங்கம் ஐந்தாம் வகுப்பில் தொடர்ந்து ஒரு வருடம் தங்கிப் படிப்பதற் கான காரணிகள். அவன் தனியாளாக அங்கே ஐந்தில் தங்கவில்லை. துணைக்கு வத்சலாவும் இருந்தாள். துரைலிங்கத்துக்கு இருந்த அதே காரணிகள்தான் வத்சலாவுக்கும் இருந்தன.*

*ஐந்தாம்வகுப்பில் அவளது அழகை வர்ணிக்க எனக்கு வயது போதாது. இப்பொழுது வேண்டுமானால் கொஞ் சம் சொல்லிக் கொள்ளலாம். அவளது அழகும், அமைதி யும் பிரமிக்க வைத்துக் கொண்டிருந்தன. வகுப்பறையில் நிலவாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தாள். „தங்கரதம் போல் வருகிறாள். அல்லித் தண்டுகள் போலே வளை கிறாள். குங்குமப்பூப்போல் சிரிக்கிறாள்' எனும் கண்ண தாசன் வரிகள் அவளுக்கு அற்புதமாகப் பொருந்தும். வத்சலாவுக்கு என்னைவிட மூன்று வயதாவது அதிகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். சிறார்களான எங்கள் வகுப்பறையில் அவள் குமரியாக இருந்தாள்.*

*வத்சலாவைக் கண்டால் கணக்கு வாத்தியார் சுப்பிர மணியரின் வெற்றிலைக் காவிப்பற்கள் வெளியே தெரியும். அவளை தனது மேசைக்கு அருகே வைத்து வாஞ்சையோடு கணக்குச் சொல்லிக் கொடுப்பார். சுப்பிரமணியம் வாத்தியார்தான் எங்கள் வகுப்பாசிரியர். ஏதாவது பிழைகள் நடந்து விட்டால் அடி, பேச்சுக்கள் எல்லாம் எங்களுக்குத்தான்.*

வத்சலா கணக்கில் பிழைவிட்டால் கூட "தெரியாட்டில் கூச்சப்படாமல் என்னட்டை கேக்கோணும் என்ன' என்று பண்பாகச் சொல்லிவிட்டுப் போவார். சுப்பிர மணியம் வாத்தியார் வத்சலாவுக்கு இப்படிச் செல்லம் கொடுத்துக் கொடுத்துத்தான் அவள் படிக்காமல் ஐந்தாம் வகுப்பில் தங்கி விட்டாளோ என்று நான் அப்பொழுது நினைப்பதுண்டு. இப்பொழுது என்றால், கணக்கு வாத்தியார் என்ன கணக்குப் பண்ணினார் என்று உடனேயே சொல்லி விடுவேன்.

வத்சலாவின் தாய் பூமணிக்கும் தகப்பன் கனகருக்கும் நாலாம் பொருத்தம். எப்பொழுதும் சண்டையும் சச்சர வும்தான். ஒருநாள் சண்டை பெரிதாகி ,போதுமடாசாமி' என்று வத்சலாவின் தகப்பன் குடும்பத்தை விட்டு எங்கேயோ ஓடிப் போய் விட்டார். இந்தத் தகவல்களை எல்லாம் எனக்குத் தந்தது துரைலிங்கம்தான்.

ஒரு வெள்ளிக்கிழமை பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். வேம்படிச் சந்தியில் சிலர் கூடி நின்றார்கள். அந்தச் சிறு கூட்டத்துக்குள் இருந்து வந்த சத்தம் அங்கே ஒரு அடிதடி நடக்கிறது என்பதைச் சொல்லிற்று. விடுப்புப் பார்க்கும் வயது. ஓடிப்போய் பார்த்தால், சின்னத் துரையர் வாயில், மூக்கில் இரத்தம் வழிய நிலத்தில் இருந்தார். அவர் ஒரு சலவைத் தொழிலாளி. வத்சலாவின் இரு மாமன்கள்தான் அவரைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். சின்னத்துரை யரால் அவர்களை எதிர்த்து ஒன்றும் செய்ய முடிய வில்லை. ஒன்று அவரது சாதி. மற்றது அவருக்கு அளவுக்கு மீறிய போதை. இந்த இரண்டு காரணங் களால்தான் எதிர்த்துத் தாக்க முடியாமல் இப்பொழுது அவர் இரத்தம் சிந்த நிலத்தில் இருக்கிறார். யாராவது விலக்குப் பிடிக்க மாட்டார்களா என அவர் பார்வை கேட்டுக்கொண்டிருந்தது. தொடர்ந்து அந்தக் காட்சியை

*என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அந்த இடத்தை விட்டு வீட்டுக்கு ஓடி வந்து விட்டேன்.*

*நல்ல பிள்ளையாக வீட்டுப் பாடம் எல்லாம் செய்து விட்டு அம்மாவின் மடியில் தலைவைத்துப் படுத்திருந் தேன். பார்வதியக்கா வீட்டுக்குள் வந்தார். பார்வதியக்கா வருகிறார் என்றால் ஏதோ ஒரு செய்தி வருகிறதென்று பொருள். ஒரு செய்தி பார்வதியக்காவின் காதில் வந்து சேர்ந்து விட்டால், அதை ஊரெல்லாம் கொண்டு போய் கொட்டி விட்டால்தான் மனுசிக்கு சாப்பிட்டது சமிபாடாகும்.*

*„பிள்ளை, கணபதிப்பிள்ளையும் சங்கரப்பிள்ளையும் சின்னத்துரையை என்னத்துக்கு அடிச்சவங்கள் எண்டு தெரியுமே?'*

*பார்வதியக்காவின் கதை சொல்லும் நேரம் ஆரம்பம் ஆயிற்று. அம்மாவுக்கு இந்த விசயம் தெரிய வாய்ப் பில்லைஎன்று பார்வதியக்காவிற்குத் தெரியும். ஆனாலும் தான் கொண்டு வந்த கதையை அவர் ஆரம்பிக்கும் விதமே இப்படித்தான் இருக்கும்.*

*„அதுபார் பிள்ளை..' கதையைத் தொடங்கிய பார்வதி யக்கா இடையில் நிறுத்தி விட்டுக் கேட்டார். 'இவன் சின்னவன் நித்திரைதானே?'*

*படுத்திருந்த எனக்கு விளங்கி விட்டது ஏதோ ஒரு அடல்ஸ் ஒன்லி கதை வரப் போகின்றது என்று. கண்களை மூடிக் கொண்டேன். கதை கேட்பதில் என்ன தப்பு இருக்கப் போகிறது? அபிமன்யு தன் தாயின் வயிற்றிலிருந்து கதை கேட்கவில்லையா? நான் தாயின் மடியிலிருந்து கதை கேட்கிறேன் அவ்வளவு தான்.*

*„இவள் பூமணி இருக்கிறாளே, அவளுக்கும், சின்னத் துரைக்கும் முந்தியிருந்தே தொடர்பாம். கனகனுக்கு*

கொழும்பிலைதானே வேலை. எப்பவாவதுதான் வந்து போவான். அது பூமணிக்கு வாச்சுப் போச்சு. ஊத்தைத் துணி எடுக்க வந்தவனிட்டை இவள் கட்டி இருக்கிற துணியையும் கழட்டிப் போட்டுட்டாள் போலை. அண்டைக்கு கனகன் சொல்லாமல் கொள்ளாமல் இரவு பயணத்தாலை வந்திருக்கிறான். இவையள் சந்தோசமா இருக்கிறது காட்சியோடை பிடிபட்டுப் போச்சு. பூமணிக்கு நல்ல அடியாம். அடுத்தநாள் அவள் பாயை விட்டு எழும்பவே இல்லையாம் எண்டால் பாரன். சமையல் கிமையல் ஒண்டும் நடக்கேல்லையாம். பிள்ளைகளுக்குச் சாப்பாட்டை கடையிலை இருந்து தான் கனகன் வாங்கிக் கொண்டு வந்து குடுத்திருக் கிறானாம். கனகன் கடைக்குப் போன நேரம் ஆளைவிட்டு தம்பிமாரைக் கூப்பிட்டு மனுசன் அடிச்ச விசயத்தை பூமணி சொல்லி இருக்கிறாள். என்னதான் பிழை விட்டிருந்தாலும் இரத்த பாசம் சும்மா இருக்க விடுமே. கறுவிக் கொண்டு போனவங்கள் போய் நல்லா கள்ளு அடிச்சுப் போட்டு திரும்பி வரக்கை துணைக்கு சின்னத்துரையையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாங் கள். வீட்டுத் திண்ணையிலை படுத்திருந்த கனகரை உலக்கையாலை அடிச்சுப் போட்டுட்டாங்கள்'

„அடப் பாவமே'
அம்மாவின் கொமன்ட்ஸ் காதில் கேட்டது.

„கேளடி மிச்சத்தை. விடிஞ்சால் மாட்டுப் பட்டுப் போவினம். என்ன செய்தாங்களெண்டால் கொஞ்ச உடுப்புகளோடை சேர்த்து ஆளையும் மூட்டை கட்டி சின்னத்துரையின்ரை தோளிலை கட்டிவிட்டிட்டாங்கள். அவனும் துணி வெளுக்கக் கொண்டு போற போலை வயல் காணிக்குள்ளாலை ஆனை விழுந்தான் சுடலைக் குள்ளை கொண்டு போய்ப் போட்டு, இரவோடு இரவா கனகனை எரிச்சுப் போட்டு வந்திட்டான்'.

*'சின்னத்துரை அப்பிடிக் கொண்டு போகக்கை யாரும் பாக்க இல்லையாமே?'*

*என்னைப் போல் அம்மாவுக்கும் கதை கேட்பதில் ஆர்வம் இருந்திருக்க வேண்டும்.அதனால்தான் இந்தக்கேள்வியை அவர் பார்வதியக்காவிடம் கேட்டிருக்கின்றார்.*

*„இருட்டு பிள்ளை. யாராவது கண்டிருந்தாலும் சின்னத் துரை உடுப்புகளை வெளுக்கிறதுக்கு கொண்டுபோறான் எண்டுதானே நினைப்பினம். அதோடை ஊரடங்குச் சட்டமும் இருந்தது. ஆமி சுட்டுப் போடுவான் எண்ட பயத்திலை குருவி குஞ்சுகள் கூட வெளியிலை வர மாட்டுதுகள். இது அவங்களுக்கு சாதகமாப் போட்டுது. அடுத்தநாள் பிள்ளைகள் எழும்பி அப்பா எங்கை எண்டு கேக்கக்கை, அப்பா கோவிச்சுக் கொண்டு வீட்டை விட்டுப் போட்டார் எண்டு தாய் சொல்லி இருக்கிறாள். அதைப் பிள்ளைகளும் நம்பீட்டினம். ஊரும் நம்பீட்டுது'*

*„இந்தக் கதை என்னெண்டு இப்ப வெளியிலை வந்தது' அம்மாவின் கேள்வியில் அர்த்தம் இருந்தது.*

*„அதுவோ கொஞ்ச நாளா கணபதிப்பிள்ளைக்கும், சின்னத்துரைக்கும் ஏதோ பிரச்சனை. „உலக்கையாலை நீயும் அடி வாங்கப் போறாய்'' எண்டு கணபதிப்பிள்ளை சின்னத்துரையை வெருட்டி இருக்கிறான். சின்னத்துரை கள்ளுக்குடிச்சுப்போட்டு என்னை என்ன கனகன் எண்டு நினைச்சானோ எண்டு விசயத்தை கள்ளுக் கொட்டி லிலை வாந்தி எடுத்திட்டான். இப்ப விசயம் ஊருக்குத் தெரிஞ்சு, எல்லாம் நாறிப் போச்சு.'*

*„அதுக்கே இண்டைக்கு சின்னத்துரைக்கு அடிச்சவங் கள்?'*

*„பின்னை வேறெதுக்குப் பிள்ளை? அதுக்குத்தான்''*

*பார்வதியக்கா கதையைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அதை என்னால் முழுதாக உள்வாங்க முடியாமல் இருந்தது. என் எண்ணம் வேறு எங்கேயோ போய் விட்டிருந்ததே அதற்கான காரணம்.*

*ஆக வத்சலாவின் தகப்பன் ஊரைவிட்டு ஓடிப் போக வில்லை. இவர்கள் அவரை உலகத்தைவிட்டே ஓட்டி விட்டார்கள். தகப்பன் வருவார் எனக் காத்திருக்கும் வத்சலா ஒரு இலவு காத்த கிளிதான். பாவம் வத்சலா. இந்த விடயத்தை அவளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அதுக்கு துரைலிங்கம்தான் சரியான ஆள்.*

*பார்வதியக்கா அம்மாவுக்கு இன்னும் ஏதேதோ சொல் லிக் கொண்டிருந்தார். நான் உண்மையிலேயே நித்திரை யாகிப் போனேன். திங்கட்கிழமை காலை பாடசாலைக்கு வழமையை விட முன்னராக வந்து விட்டேன்.*

*துரைலிங்கம் வகுப்பறையில் இருந்தான். அவனிடம் விடயத்தை சொல்வதற்கு நான் வாயைத் திறப்பதற்கு முன் அவன் சொன்னான், „வெள்ளிக் கிழமை வத்சலா வின்ரை மாமன்மார் குடுத்த அடியோடை பயத்திலை சின்னத்துரை ஊரை விட்டே ஓடிட்டானாம்'*

*சின்னத்துரை ஊரை விட்டு ஓடிட்டாரா? இல்லை உலகத்தை விட்டே ஓட்டி விட்டார்களா?*

*நீண்ட வருடங்களாக நான் அவரைக் காணவேயில்லை.*

***10.11.2015***
*இருவாட்சி - பொங்கல் சிறப்பு வெளியீடு*
*(January 2016)*

# கிறுக்கன் என்கின்ற பண்டிதர் வீரகத்தி

„இடையறாது புலவர்கள் ஒலி கேட்டுக் கொண்டு இருந்ததால்தான் இந்த ஊருக்குப் புலவர் ஒலி எனப் பெயர் வந்தது. பின்னர் அது மருவி புலோலி ஆனது' எங்கள் ஊரின் காரணப் பெயரைப் பற்றி புலவர் கந்தமுருகேசனார் சொன்ன விளக்கம் அது. ஆனாலும் சரித்திரச்சான்று வேறாக இருந்தது பின்னாளில் எனக் குத் தெரிய வந்தது.

புலவர் கந்தமுருகேசனார் வாழ்ந்த காலத்தில் அவரிடம் தமிழ் பயின்றவர்கள் ஏராளம். அவரின் வீட்டைச்சுற்றி இருந்த சிறார்களுக்கு கோப்பெருந்தேவி, மணிமேகலை, மங்கையற்கரசி, திருவருட்செல்வி, கலையரசன், இளங் கோவன், மணிமாறன் என்று அழகழகான பெயர்கள் இருக்கும்.

புலவர் கந்தமுருகேசனாரின் உபயத்தில் ஊரில் பல பால பண்டிதர்கள் இருந்தார்கள். புலவர் பட்டம் வாங்கினா லும் இந்தப் பால பண்டிதர்கள் பெரும் பாலும் அரச உத்தியோகங்களில் இருந்தனர். ஒருவர் மட்டும் விதி விலக்காக பால பண்டிதர் பட்டத்தோடு ஊரில் விவ சாயம் செய்து கொணடிருந்தார். அவர் பெயர் வீரகத்தி. அதில் என்ன தப்பு விவசாயி படத்தில் பட்டப் படிப்பு முடித்து விட்டு எம்ஜிஆர் விவசாயம் செய்யவில்லையா என்று தயவு செய்து கேட்டு விடாதீர்கள். நடிப்பு வேறு நான் சொல்ல வருகிற வீரகத்தியின் நிஜம் வேறு.

மசில்கள் இறுகி இரும்பு போல் இருக்கும் கறுத்த தேகம். நாலு பேரைத் தூக்கி அடிக்கக் கூடிய அசுர பலம். துருத்தி நிற்கும் பற்கள். தோளில் இணை பிரியாமல்

*ஒரு மண் வெட்டி. சேர்ட்டோ பனியனோ அணியாமல் மடித்துக் கட்டிய நாலு முழ வெள்ளை என்று சொல்ல முடியாமல் நிறம் மாறி இருக்கும் வேட்டி. ஏறக்குறைய ஐந்தடி ஆறங்குல உயரம். இவ்வளவையும் சேர்த்து வீரகத்தியைக் கற்பனையில் கொண்டு வரப் பாருங்கள்.*

*பண்டிதர் வீரகத்தி என்று கேட்டாலோ, விவசாயி வீரகத்தி என்று கேட்டாலோ ஊரில் யாருக்குமே தெரியாது. கிறுக்கன் என்று விழித்தால்தான் பண்டிதர் வீரகத்தியை ஊருக்குள் தெரியும். இந்தக் கிறுக்கன்பற்றி எனது அனுபவம் ஒன்று, அப்பொழுது கல்விப்பொதுத் தராதரம் படித்துக் கொண்டிருந்தேன். தமிழ், சமயம் தவிர மற்றைய பாடங்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் எனக்கு இருந்தன.*

*„தமிழுக்கும் ரியூசன் வைத்துக் கொண்டால் என்ன?' என்று எனது பாடசாலை நண்பன் இராஜகுலசிங்கம் கேட்டான். எனக்கும் அது தேவைப்பட்டது. யாரைப் போய்க் கேட்கலாம் என்று ஆராய்ந்த பொழுது நினைவுக்கு வந்தவர் இந்தக் கிறுக்கன்.*

*ஒரு மாலைப்பொழுது அவரைத் தேடிப் போனோம். தனது தோட்டத்தில் அவர் வேலை செய்து கொண்டி ருந்தார். நாங்கள் சொல்வதை எல்லாம் கேட்டார்.*

*„உங்களுக்குத் தமிழ் சொல்லித் தரவேணும்' சொல்லிக் கொண்டே வரப்பில் அமர்ந்து கொண்டார். நாங்கள் இருவரும் மாணவர்களாக கை கட்டி அவரது அடுத்த வார்த்தைக்காக காத்து நின்றோம்.*

*„உங்களுக்கு லகர ழகர பேதங்கள் எப்பிடி?' பேசிக் கொண்டிருந்தவர் என்னைப் பார்த்துச் சொன்னார்*

„எதுக்கும் நான் இப்ப சொல்லுறதை வேகமாகச் சத்தமாகச் சொல்லிக் காட்டு'

சின்னவயதில் விளையாட்டின்போது „கடற்கரையிலை உரள் உருளுது' என்று வேகமாகச் சொல்லி நாக்குக்குள் வார்த்தைகள் உருண்ட நினைவு வந்து போனது. அவரது வாயில் இருந்து வரப்போவது அதுதான் என நினைத்து இருந்தேன் ஆனால் வந்து விழுந்ததோ இது,

„அக்காளைக்கு மேல் ஏறும் அந்நஞ்சு உண்ணியை எக் காலமும் காண்பது அரிது'

மனதுக்குள் வேகமாக ஒப்புவித்துப்பார்த்தேன். வார்த்தை களில் இருந்த குளறுபடி தெரிந்தது. வாயைஇறுக மூடிக் கொண்டேன்.

கிறுக்கன் எனது வாயையே பார்த்துக் கொண்டிருந்தார். இவன் வாயையே திறக்க மாட்டான் என்ற முடிவு அவருக்கு வந்த பிறகுதான் பேச்சை ஆரம்பித்தார்.

„அப்போ உனக்குத் தமிழ் வராது„ சொல்லி விட்டு இராஜகுலசிங்கத்தைப் பார்த்தார்.

„இப்ப நான் சொல்லுறதைக் கவனமாக் கேட்டிட்டு நீ பதில் சொல்லோணும். புலவர் சண்முகநாதன் ஒரு விருந்துக்குப் போனார். அவருக்குச் சாப்பிட இலை போட்டிச்சினம். இலையைப் பார்த்த புலவர் சண்முக நாதன்,

´புண்ட இலை என்று சொல்ல அண்டை இலை போட அதுவும் புண்ட இலை´'

சொல்லி விட்டுக் கொஞ்சம் அமைதி காத்தார். பிறகு

*இராஜகுலசிங்கத்தைப் பார்த்து, „புலவர் சண்முக நாதன் என்ன இலை என்று சொன்னவர்?' என்ற அதி உன்னத கேள்வியை முன் வைத்தார்.*

*இந்தத்தமிழ் எங்களுக்கு வேண்டாம் என்று வரம்பில் விழுந்து எழுந்து ஓடி வந்து விட்டோம். இப் பொழுது சொல்லுங்கள் கிறுக்கன் என்ற அவரது காரணப்பெயர் முற்று முழுதாகச் சரியானதுதானே?*

*கிறுக்கனைக் கொஞ்ச நேரத்துக்கு மறந்து விட்டு சிங்கப்பூர் சிங்காரியைப் போய்ப் பார்ப்போம்.*

*முழங்கையளவு நீண்ட சட்டை போட்டுக் கொண்டு „மாலைப் பொழுதின் மயக்கத்திலே கனவு கண்டேன் தோழி' என்று சௌகார் ஜானகி பாடிக் கொண்டு வந்த காலகட்டம் அது.*

*தோள்பட்டையுடன் நின்றுபோன சட்டை அணிந்து, நெஞ்சுக்கும், இடுப்புக்கும் ஒரு சாண் இடைவெளி விட்டு சேலை கட்டி, கைப்பை தோளில் தொங்க ஒரு சிறிய குடையுடன் நடந்து வருபவர்தான் அந்தச் சிங்கப்பூர் சிங்காரி. என்றாவது ஒரு நாள் கார் போகும் அந்த வீதியில் 'டொக்கு டொக்கு' என குதிரைக் குளம்பொலி எழுப்பி அவர் நடந்து வரும் பொழுது வீதியின் ஓரத்தில் படுத்திருக்கும் நாய் தலையைத் தூக்கிப் பார்த்து விட்டு பயந்து போய் எழுந்து கொஞ்சம் தள்ளிப் போய் படுத்துக் கொள்ளும்.*

*எங்கள் ஊரில் இவர் மட்டும் ஏன் இப்படி என்று வாசிகசாலைப் பொறுப்பாளர் கந்தையாப்பாவிடம் ஒருநாள் கேட்டேன். அவர் சொன்ன தகவல்களின் படி, சிங்காரி படித்தது சிங்கப்பூரில். அவரது கணவன் ஒரு வைத்தியர். இரண்டு ஆண்கள், ஒரு பெண் என மூன்று பிள்ளைகள். கந்தையாப்பா சொன்ன இந்த சிறிய*

*தகவல்களோடு ஊரில் இருந்து வேறு சில அபூர்வ தகவல்களையும் திரட்டிக் கொண்டேன்.*

*சிங்காரிக்கும், கணவனுக்கும் வயது வித்தியாசம் ஏணி வைத்தால் எட்டக்கூடிய தூரமாக இருந்தது. அநேகமாக இரவு நேரங்களில் கணவன் வைத்திய சாலையில் வேலையில் இருப்பார். சிங்காரி வீட்டில் லீலைகளில் இருப்பார். அந்த லீலைகள் செய்யும் கண்ணன்களில் ஒருவனாக எங்கள் கிறுக்கனும் இருந்தார் என்பது ஆச்சரியமான ஒரு விடயம். அடிக்கடி சிங்காரி வீட்டுக்கு போய் வந்து கொண்டிருந்த கிறுக்கனுக்கு, சிங்காரியின் மகள் கண்ணில் பட்டு விட்டாள். ,,மயங்கி விட்டேன் உன்னைக் கண்டு' என்ற நிலையில் கிறுக்கன் இருந்தார். யாரும் அறியாமல் சிங்காரியின் மகள் மேல் கண்களை ஓட விட்டார். இரவில் அவள் நித்திரை கொள்ளும் அழகை வெளியே இருந்து யன்னல் ஊடாகப் பார்த்து இரசிக்கத் தொடங்கினார்.*

*கிறுக்கனின் இந்தச் செயல் சிங்காரிக்குத் தெரிந்து போனது. நயமாகப் பேசியும் ,,பொலிசிட்டை பிடிச்சுக் குடுத்திடுவன்' என மிரட்டியும் பார்த்தாள். கிறுக்கன் கிறங்கவேயில்லை.*

*ஊர்அடங்கிற்று. அன்றும் வழக்கம் போல் கிறுக்கன் தன் தேவதையைக் காண யன்னலை நோக்கிப் போனார். ஆனால் யன்னலை நெருங்கும் முன் ஏற்கெனவே வெட்டப் பட்டு அதற்குள் முட்கள், உடைந்த போத்தல் துண்டுகள் எனப் போடப் பட்டிருந்த பொறிக் கிடங்குக்குள் விழுந்து விட்டார். விழுந்தவர் எழுந்து இருக்க முன்னரே நாலைந்து பேர் சாக்குக் கொண்டு கிறுக்கனை மூடிக் கட்டி விட்டார்கள்.*

*,,இனி அவளைப் பார்க்க வரமாட்டேன் என்று நீ சொல்லுற வரை விடமாட்டோம்' என்று சொல்லிக்*

கொண்டே சிங்காரியின் வீட்டில் ஒரு தனியறையில் கிறுக்கன் மேல் தாக்குதல் தொடங்கியது. ஒரு சிறு நகர்வும் கிறுக்கன் பகுதியில் இருந்து தெரியவில்லை.

எல்லோரையும் ஒதுங்கச் சொல்லிவிட்டு சிங்காரியே சித்திரவதை செய்ய ஆரம்பித்தாள். கிறுக்கனின் கை பத்து விரல் நகங்களுக்குள்ளும் குண்டூசிகள் ஏற்றிக் கொடுமைப் படுத்தினாள். வலியால் கிறுக்கன் கத்தி னாரே தவிர வேறெதுவும் சொல்லவில்லை. ,,அவளைப் பார்க்க இனி வரமாட்டேன்,, என்ற வார்த்தைகளை மட்டும் அவர்தனக்குள் தணிக்கைசெய்து வைத்திருந்தார்.

ஒருநாள் போய் மறுநாளும் ஆயிற்று தொடர் சித்திர வதைகளால் கிறுக்கன் நிலைதளர்ந்து போயிருந்தார். இனி கிறுக்கன் பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலை வந்து விட்டது. மீண்டும் கிறுக்கன் சாக்குக்குள் திணிக்கப் பட்டார்.

இரவானதும் ஏதோ ஒன்று நடக்கப் போகிறது. அது என்ன? காணாமல் போகப் போகிறாரா? ஆழ்கிணற் றுக்குள் மிதக்கப் போகிறாரா? சவுக்கம் தோப்புக்குள் இறந்து விழுந்து கிடக்கப் போகிறாரா? உடல் உப்பி கடற்கரையில் கரை ஒதுங்கி இருக்கப் போகிறாரா? இல்லை எரியுண்டு சாம்பலாகப் போகிறாரா? இந்தக் கேள்விகள் அவருக்கு நிச்சயமாக வந்திருக்கும்.

மூன்றாம்நாள், ஊரெல்லாம் உலை வைத்தார்களோ தெரியாது. இந்த விசயத்தைப் பற்றியே நாள் முழுவதும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

,,நல்ல வேளை பொலிஸ் வந்தது. அவங்கள் மட்டும் வராட்டில் கிறுக்கனை முடிச்சிருப்பாங்கள். கடைசி நேரத்திலை வந்து பிடிச்சிட்டாங்கள்'

*கிறுக்கன் விடயத்தில் சிங்காரி உட்பட ஐந்து பேர் கைதாகியிருந்தார்கள்.*

*இது நடந்து ஒரு கிழமையில் மடித்துக் கட்டிய வேட்டி யோடு, மண்வெட்டி தோளில் இருக்க, கிறுக்கன் தனது தோட்டப்பக்கம் போய்க் கொண்டிருந்தார்.*

*„இவன் கிறுக்கனில்லை இரும்பன்' என்று ஊரில் சொல்லிக் கொண்டார்கள்.*

*இப்போதெல்லாம் வீதியில் டொக்கு டொக்கு என குதிரைக்குளம்பொலி எழுப்பி யாரும் நடந்துவரும் சத்தம் கேட்பதில்லை. வீதி ஓரத்தில் படுத்திருக்கும் நாய்கள் பயந்து எழுந்து ஓடாமல் அமைதியாகப் படுத்திருந்தன. சிங்காரியின் பிள்ளைகள் ஒழுங்காகப் படித்துக்கொண்டு இருந்தார்கள். அவளது கணவன் பகலில் மட்டுமல்ல இரவு வேளைகளிலும் வீட்டில் இருந்தார்.*

*அன்று வாசிகசாலையில் கந்தையாப்பா தனியாகத்தான் இருந்தார்.*

*„கந்தையாப்பா, அது என்ணெண்டு சினிமாப்படம்மாதிரி கடைசியிலை பொலிஸ் வந்தது?'*

*„யாரோ பொலிசுக்குப் போன் பண்ணினவையளாம்'*

*„யார் அதைச் செய்திருப்பினம்?'*

*„இஞ்சை சுருட்டுத் தம்பையர் வீட்டிலைதான் போன் இருக்கு. அங்கை இருந்து போன் செய்ய வாய்ப்பில்லை. தம்பையர் இஞ்சை இல்லை. அவர் இப்ப குருநாகலிலை. அவரின்ரை வீட்டிலை இருந்து பெண்டுகள் பொலி சோடை கதைக்க மாட்டினம். சப்போஸ்ரொபிஸ் கந்தப்*

*பருக்கு இந்த விசயம் தெரிய வாய்ப்பில்லை. அப்பிடித் தெரிஞ்சிருந்தாலும் மினக்கெட்டு இரவு ஒரு மைல் சைக்கிளோடி வந்து தபால் கந்தோரைத் திறந்து அங்கை இருந்து போன் பண்ணுறதுக்கும் சரிப்பட்டு வராது. அப்பிடிப் பாத்தால் ஆஸ்பத்திரியிலை இருந்துதான் யாரோ போன் பண்ணியிருக்கோணும்'*

*„யாரா இருக்கும்?'*

*„இரவிலை வேலை செய்யிற யாரோ தான் செய்திருப் பினம்'*

*யாரா இருக்கும் என்ற என் சிந்தனையில், அவராக இருக்குமோ என்ற எண்ணம் வந்தது.*

*அதைக் கந்தையாப்பாவிடமே கேட்டேன். „ஒருத்தருக்கும் இந்தவிசயம் தெரிய வாய்ப்பில்லைத்தானே. ஒருவேளை சிங்காரியின்ரை புருசனா இருக்குமோ?'*

*„உனக்கு சோதனை வருதெல்லோ? இந்த ஆராய்ச்சி எல்லாத்தையும் விட்டிட்டு படிக்கிற அலுவலைப் போய்ப் பார்' என்று அடிக்காத குறையாக என்னைத் துரத்தி விட்டார்.*

*இன்றும் எனக்குள் கேட்டுக் கொண்டிருக்கிறேன் „அது அவராக இருக்குமோ?'*

***24.02.2016***

# கிராமக்கோட்டு சந்தி மதவு

*மழை பெய்து வெள்ளம் வந்தால் அதை கடலுக்குள் கொண்டு சேர்ப்பதற்கான வாய்க்கால் எங்கள் ஊரிலே இருந்தது. எங்கள் ஊர் கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்த மதவின் கீழாக அந்த வெள்ள வாய்க்கால் வடிவமைக்கப் பட்டிருந்தது. கனமழை பெய்தால் அந்த வெள்ளவாய்க்காலில் வெள்ளம் கரைபுரளும். பலவித மான பொருட்கள் அந்த வெள்ளத்தில் மிதந்து வரும். கூடைகள், பெட்டிகள், பாய்கள் என்று ஏகப்பட்ட பொருட்களுடன் சிலவேளைகளில் கோழிகள், பாம்பு களைக் கூட அந்த வெள்ள ஓட்டத்தில் காணலாம். கோடைகளில் தண்ணீர் இன்றி வாய்க்கால் காய்ந் திருக்கும். உடைந்த போத்தல் துண்டுகள், கற்கள் என பல குப்பைகள் அங்கே குவிந்திருக்கும்.*

*வெள்ளவாய்காலின் மேலே இருந்த சந்தி மதவை எப்பொழுது பார்த்தாலும் அழுக்காகவே தெரியும். எங்கள் ஊர் இளம்காளையர்கள் அதாவது கட்டுக் குள்ளே அடங்காத காளைகள் ஒரு காலை மடித்து வைத்து மதிலுக்கு முண்டு கொடுத்துக் கொண்டும் மறு காலை நிலத்தில் ஊன்றியும் ஆட்சி செய்யும் பீடம் அது. காலையில் எட்டில் இருந்து ஒன்பது மணிக்கும் பின்னர் மாலை நான்கு மணியில் இருந்தும் அந்த மதவில் காளைகளின் அரசதர்பார் அமர்க்களமாக இருக்கும். ஊரில் இருந்த இரண்டு பிரதான பெண்கள் பாடசாலை களே அவர்களது அரச தர்பாருக்கான காரணிகள். காலையில் பாடசாலை கடைசி பஸ் போனதன் பின்னர் காளையர் கூட்டம் மெதுவாக கிழக்கு நோக்கி சந்தா தோட்டத்திற்கோ, அல்லது மேற்கு நோக்கி கூவிலுக்கோ நகரும். சந்தாதோட்டமும், கூவிலும் கள்ளுக்குப் பேர் போன எங்கள் ஊர் கிராமங்கள். மாலை நான்கு மணிக்கு மீண்டும் மதவில் களைகட்டும். காளையர்களின்*

தர்பார் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கால நேரத்தை முடிவு செய்து கொள்ளும். கருத்துக்களில் உடன்பாடு ஏற்படாமல் அவர்களுக்குள் வாக்குவாதங்களுடன் சிலவேளைகளில் அடிதடிகளும் அங்கே இடம் பெறுவதும் உண்டு. என்னதான் வாக்குவாதங்களும், கைகலப்புகளும் அவர்களுக்குள் ஏற்பட்டாலும் அடுத்த நாள் காலையில் எதுவுமே நடக்காத மாதிரி ஒற்றுமை யாகவும் சந்தோசமாகவும் மதவில் இருந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். குடிகாரன் பேச்சு மட்டுமல்ல, அவர்கள் சண்டையும் 'விடிஞ்சால் போச்சு' என்பது அங்கே நான் தெரிந்து கொண்ட ஒரு உண்மை.

இந்தக் காளையர்கள் கூட்டத்தின் முரட்டுக் காளைதான் கனகலிங்கம். அவன்தான் காளையர்களின் தளபதி. திருமணம் ஆனவன். மற்றவர்களின் காசில் குடித்துக் கொண்டும், மனைவி சமைத்துப் போட மாமியார் வீட்டில் இருந்து உண்டி நிரப்பிக் கொண்டும் உருண்டு திரண்டிருப்பான். ஊரில் இருப்பவர்கள் இவனிடம் எட்டியே நின்றிருந்தனர். பசுமாடுகள் கூட பயம் கொண்டு இவனிடம் இருந்து தள்ளியே நடந்தன. இப்படியானவனிடம் அவள் ஏன் மயங்கினாள் என்பதை இன்றுவரை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவள் பெயர் கோகிலா. பத்தாவது படித்துக் கொண்டி ருந்தாள். ஒரு சீவல் தொழிலாளியின் மகள். அவளது சமூகத்தில் நான் அறிந்தவரையில் படித்தவர் நாகேந்திரம் மட்டும்தான். அவர், கபொத சதாரணதரத்தில் வெற்றிகர மான சித்திகளைப் பெற்று விட்டு சீவல் தொழிலையே செய்து கொண்டிருந்தார். அன்றைய காலத்தில் கபொத சதாரண தரத்துடனேயே அரச வேலைக்குள் சுலபமாக நுளைந்து விடலாம். ஆனால் நாகேந்திரமோ தங்கள் குலத்தொழிலையே செய்து கொண்டிருந்தார். ஒருநாள் அவரிடமே இதைப் பற்றிக் கேட்டேன். சிரித்துக் கொண்டே சொன்னார், 'அரச வேலை எண்டாலும்

*சுத்தி நிக்கிறவையளுக்கு கூனிக் குறுகி வளைஞ்சு நிக்கோணும். பள்ளிக்கூடத்திலை நான் இருக்கிற வாங்கிலிலை இருக்கவே சங்கடப் படுறாங்கள். வேலை இடத்தில என்ன மரியாதை தருவாங்கள் என்று யோசிச்சுப் பார்த்தன். குலத் தொழிலுக்கே வந்திட்டன். எனக்கு இது பரவாயில்லை"*

*அன்று இப்படியான ஒரு நிலமை இருந்தும் தனது மகளை படிக்க வைத்துப் பார்க்க கோகிலாவின் தந்தை கனகனுக்கு ஆசை வந்திருக்க வேண்டும். அல்லது படித் துச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கோகிலாவுக்கு வந்திருக்க வேண்டும். அவர்களின் அந்த உந்துதல்தான் இன்று கோகிலாவை பத்தாவது வகுப்புவரை கொண்டு வந்து சேர்த்திருக்கவேண்டும். கோகிலாவுடன் இணைந்து பாடசாலைக்குச் செல்ல மேட்டுக்குடி விரும்பவில்லை என்றே நினைக்கிறேன் அவள் தனியாகத்தான் பாட சாலைக்குச் செல்வாள். அதுவே அவளுக்கு பின்னாளில் தொல்லையாகிப் போனது.*

*பாடசாலைக் கடைசி பஸ் போன பின் கூவிலுக்கு கள்ளுக்குடிக்கச் செல்லும் காளையர் கூட்டத்தினரின் கண்களில் கோகிலா அடிக்கடி தனியாகத் தென்பட, காளையர் கூட்டம் சந்தாதோட்டப் பக்கம் கள்ளுக்குப் போவதை விடுத்து கூவிலுக்குப் போவதையே வாடிக்கை யாக்கி விட்டது. கோகிலாவை முன்னே விட்டு இவர்கள் பின்னாலேயே போவார்கள். அவள் மருண்டு அடிக்கடி திரும்பிப் பார்க்க "அவள் என்னைத்தான் பார்கிறாள்" என்று காளையர்களுக்குள் பிரச்சனையாகிப் போனது. தலைவனுக்குத்தானே பலம் அதிகம். கனகலிங்கத்துடன் பிரச்சனையை வளர்த்துக் கொள்ள மற்றவர்கள் விரும்பவில்லை. ஆளாளுக்கு ஒதுங்கிக் கொண்டார்கள். இப்பொழுது சந்தி மதவில் கனகலிங்கமும் அவனது வலதுகையான சிவாவும்தான் எஞ்சி இருந்தார்கள். கூவிலுக்கு போகும் பாதையிலிருந்து வலது பக்கம்*

*திரும்பும் பாதையில் போனால் பாடசாலையின் பின்புற வாசலால் பாடசாலைக்குப் போய்விடலாம். ஆனால் கோகிலாவின் பாதை இப்பொழுது மாறிப் போனது. அவள் வலது பக்கம் திரும்பாமல் நேர் பாதையால் போனாள். அந்தப் பாதையில்தான் கனகலிங்கம் தனது ஆட்சிக்குள் ஒரு பாழடைந்த வீட்டை வைத்திருந்தான். அந்த வீட்டின் காவலனாக சிவா இருந்தான். பாட சாலைப் பதிவேட்டில் கோகிலாவின் வரவு குறைந்து கொண்டு போனது. இதைப் பாடசாலை நிர்வாகம் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. ஆகவே கனகனுக்கு இந்த விடயத்தை தெரியப்படுத்த ஆட்களில்லை. ஆனாலும் கனகனுக்கு ஒருநாள் எப்படியோ விடயம் தெரிந்து போயிற்று. அதன் பிறகு கோகிலாவுக்கு வீடே சிறையானது. காளையர்களுக்கு இது ஒரு சம்பவம் மட்டுமே. எதுவுமே நடக்காததைப் போல கனகலிங்கமும் சிவாவும் சந்தி மதவில் இருந்து வழமையான தங்களது வேலைகளைத் தொடர்ந்தார்கள். மேட்டுக்குடி அத னோடு சேர்ந்து மெகாகுடி, சண்டியர் என பல கவசங்கள் அவர்களைக் காத்து நின்றன. தங்களை யாருமே எதுவும் கேட்க முடியாது, அசைக்க முடியாது என்ற அவர்களின் இறுமாப்பு ஒருநாள் இத்துப் போனது.*

*அன்று சனிக்கிழமை. சந்தி மதவில் சிவா மட்டுமே தனியாக அமர்ந்திருந்தான். மதவின் எதிர்த்திசையில் இருந்த நாகலிங்கம் தேனீர் கடையின் முன்பாக இருந்த தூணில் தனது சைக்கிளை சாத்தி வைத்து விட்டு மடித்துக் கட்டிய சாரத்துடன் நாகேந்திரம் கைகட்டி நின்றார். அவர் கனகலிங்கத்தைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றார் என்கிற விடயம் மதவில் அமர்ந்திருந்த சிவாவின் சிற்றறிவுக்கு புரியாமல் போயிற்று. நேரம் போனதே தவிர கனகலிங்கம் சந்திக்கு அன்று வரவே யில்லை. காத்திருந்து சலித்துப்போன நாகேந்திரம், சைக்கிளை எடுத்துக் கொண்டுபோய் மதவின்முன்*

நிறுத்தினார். சைக்கிளில் இருந்தபடியே இடது காலை மதவில் ஊன்றி, "சைக்கிளிலே ஏறு" என்றார். சிவா இதை எதிர்பார்க்கவில்லை. சைக்கிளின் முன் சில்லு அவனது இடதுபுறமும் நாகேந்திரத்தின் கால் வலது புறமும் அவனை அசைய விடவில்லை. போதாதற்கு நாகேந்திரம் மடியில் சொருகி வைத்திருந்த பாளை சீவும் கத்தி சிவாவுக்கு மேலும் பயத்தைக் கூட்டியிருக்கலாம். மதவில் இருந்து வெள்ளவாய்காலுக்குள் குதித்து ஓடி விடலாம் என்ற அவனது எண்ணத்தை வாய்க்காலில், வெளியே நீட்டிக் கொண்டிருந்த உடைந்த போத்தல் துண்டுகள் தடுத்திருக்கலாம். அத்தோடு சேர்த்து காலை யில் சில்வா பேக்கரியில் பாண் வாங்க வந்தவர்களின் பார்வைகள் சந்தி மதவுப்பக்கமாகத் திரும்பியிருந்ததால் அது தனியாக சண்டியர் சிவாவிற்கு சங்கடத்தை அதிகரித்திருக்கலாம். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பாரத்திருப்பான் போலும், பேசாமல் சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

ஒரு நண்பனை ஏற்றிக்கொண்டு செல்வது போலவே நாகேந்திரம் சிவாவை சைக்கிளில் வைத்து சந்தா தோட்டப்பக்கமாக சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தார். ஆனால் சைக்கிள் பாரில் இருந்து கொண்டு எத்தனை தெய்வங்களை தனக்குத் துணையாக சிவா அழைத் திருப்பான் என்பது யாருக்குமே தெரியப் போவதில்லை. அன்று பிற்பகல் இரண்டு மணியளவில் வீதியில் ஆரவாரம் கேட்டது. சந்தாதோட்டத்து ஆண்கள் எல்லாம் திரண்டு வந்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஊர்வலம் போகிறார்கள் என முதலில் நினைத்தேன். கொஞ்சம் கூர்ந்து பார்த்த பொழுதுதான் தெரிந்தது ஊர்வலத்தின் முன்னால் சிவா வந்து கொண்டிருந்தான். அவன் நடந்து வந்தான் என்று சொல்வது தவறு. அவன் தவழ்ந்து வந்தான் என்பதே சரியாக இருக்கும். ஆளாளுக்கு முறை வைத்து அடித்தார்கள், உதைத் தார்கள். "என்னாலே இதுக்கு மேலே நடக்க முடியாது"

*என்று சொன்ன சிவாவின் மடியைப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து கிராமக்கோட்டுச் சந்தியில் போட்டு ஒரு கதகளி ஆடி விட்டுப் போனார்கள்.*

*கட்டியிருந்த சாரம் கிழிந்து, சண்டியர் என்ற சாயம் அழிந்து சந்தி மதவில் நீண்ட நேரம் இருந்த சிவாவை யாருமே கண்டு கொள்ளவில்லை. அந்த நிகழ்வுக்குப் பிறகு சந்தி மதவு எதுவித தொந்தரவும் இல்லாது அமைதியாக இருந்தது. இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று நகரசபையும் மதவுக்கு வெள்ளை வர்ணம் அடித்து விட்டிருந்தது.*

*'றோட்டிலைதான் ஆம்பிளைகள் அடிச்சாங்கள். நாகேந்திரம் கொண்டே விட்டவுடனேயே அங்கையிருந்த பொம்பிளைகளெல்லாம் விளக்குமாறாலை அடிச்சாளுகள்" என்று தனது சகாக்களுக்கு சிவா சொன்னது மெதுவாக வெளியே கசிந்து கொண்டிருந்தது. இது நடந்தன்பின்னர் கனகலிங்கத்தை யாருமேகாணவில்லை. ஊரைவிட்டே போய்விட்டான் என்று கதைஉலாவியது. ஆனால் பகல் முழுதும் தாய் வீட்டில் அடைந்து கிடந்து விட்டு இரவானதும் தனது மனைவி வீட்டுக்கு கனகலிங்கம் போய் வருவது இரகசியமாகவே இருந்தது.*

*ஒரு மாதம் போயிருக்கும். ஒருநாள் காலை நேரம். சந்தாதோட்டத்துக் குப்பை மேட்டில் பலத்த அடி காயங்களுடன் மயக்கமாகக் கிடந்த கனகலிங்கத்தை அவனது மனைவியும், மச்சானும் சோமசெற் வாடகைக் காரில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிக் கொண்டு போனார்கள்.*

*கிராமக்கோட்டுச் சந்தி மதவு வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து அமைதியாக இருந்தது.*

***20.05.2017***

# சந்தி வாடகைக்கார்

*இராமநாதனும் நடேசனும் நல்ல நண்பர்கள். வாரந் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாது வல்லிபுர ஆழ்வாரை தரிசிக்கப் போன இடத்தில் அவர்களுக்குள் ஏற்பட்ட பழக்கம் நட்பாக மாறியிருந்தது.*

*எங்கள் ஊரின் சங்கக்கடை முகாமையாளராக இருந் தவர்தான் இராமநாதன். சங்கக்கடை முகாமையாளராக இருந்த பொழுதிலும் மேலதிக வருமானத்திற்காக கிராமக் கோட்டுச்சந்தியில் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றையும் அவர் வைத்திருந்தார். அவரது கடையில் நான்கு சைக்கிள்கள் வாடகைக்கும் இருந்தன. இலவசம் என்ற சொல்லை அவர் அறவே மறந்து விட்டிருந்தார் என்றே சொல்லலாம். தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்ற பேதமும் அவரிடம் கிடையாது. அவரது கடைக்குப் போய் சைக்கிளுக்கு காற்றடித்தால் அது யாரானாலும் ஐந்து சதம் அறவிட்டு விடுவார். "காசு கொண்டு வர மறந்து போனேன் பிறகு தாறன்" என்று சொன்னால், "சைக்கிளை வைச்சிட்டு வீட்டை போய் காசை எடுத்திட்டு வா" என்று அவரிடமிருந்து பதில் வரும். அவரது கடைக்குப் பக்கத்தில் இருந்த தாமோதரத்தாரின் தேத்தண்ணிக்கடையில் அவர் தேநீர் வாங்கிக் குடித் ததைக்கூட கண்டவர்கள் எவருமில்லை என்று அடித்துச் சொல்லலாம்.*

*நடேசன் சொந்தமாக ஒரு ஹில்மன் கார் (Hillman car) வைத்திருந்தார். காலையில் மாணவிகளை பாடசாலை க்கு அழைத்துச் செல்வதும், மாலையில் வீட்டில் திரும்ப கொண்டு வந்து சேர்ப்பதும் அவரது வேலை. ஒரு மாணவிக்கு மாதாந்தம் பத்து ரூபா முதல் பதினைந்து ரூபாவரை அவரவர்கள் வசதிக்கேற்ப கட்டணம் வாங்கிக் கொள்வார்.*

*அந்தச் சிறிய ஹில்மன் காரில் ஒரு தடவைக்கு குறைந்த பட்சம் பன்னிரண்டு மாணவிகளை உள்ளே அடைத்து காரை ஓட்டிச் செல்வார். வெளியில் இருந்து பார்த்தால் சிலவேளைகளில் கார் ஓட்டும் நடேசனைத் தெரியாது அந்தளவுக்கு உள்ளே நெருக்கமாக இருக்கும். கோணல் மாணலாக உள்ளே அடைந்திருக்கும் மாணவிகளின் தலைகள், அவர்களது வெள்ளை ஆடைகள், கறுத்த றிபனால் மடித்துக் கட்டிய பின்னல்கள்... தான் தெரியும்.*

*அந்தக் காட்சியைப் பார்க்கும் பொழுது மாணவிகளை இப்படி பனங்கிழங்குகள் போல அடுக்கி கசங்க விடுகிறாரே என்று இளசுகளான எங்கள் மனங்கள் கசங்கிப் போகும். பாடசாலைக்குப் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் நேரம் தவிர மற்றைய நேரங்களில் நடேசனின் கார் வாடகைக்குப் போய்விடும். எது வித ஓட்டமும் இல்லை என்றால் நடேசன் வல்லிபுர ஆழ்வாரைத் தரிசிக்க வந்து விடுவார்.*

*வல்லிபுரக்கோவிலுக்குப் போகும் வீதியில் இபோச (இலங்கை போக்குவரத்து கூட்டுஸ்தாபனம்) நாகர் கோவிலுக்கு ஒன்றும், தாளையடி/செம்பியன் பற்றுக்கு ஒன்றுமாக இரண்டு பஸ்களை போக்கு வரத்துக்கு விட்டிருந்தது. அதுவும் மணிக்கு ஒரு பஸ்தான். பஸ் போகும் நேரம் தவிர மற்றும் படி அந்த வீதி எப் பொழுதும் அமைதியாக வெறிச்சோடி இருக்கும். அந்த வீதியில்தான் இராமநாதனுக்கு நடேசன் கார் ஓட்டப் பழக்கிக் கொடுத்தார்.*

*சைக்கிள்கடை, சங்கக்கடை என்று சிறுகச்சிறுக சேர்த்த காசு மற்றும் கடைகளில் தேநீர்கூட வாங்கிக் குடிக்காமல் சேமித்த காசு என கொஞ்சப் பணம் இராமநாதனிடம் இருந்தது. காரும் ஓட்டப் பழகியாயிற்று. இனி, ஒரு காருக்கு சொந்தக் காரனாக இருந்தால் நல்லாயிருக்குமே*

*என்ற எண்ணம் இராமநாதனுக்கு வர, அந்த அவரது எண்ணத்துக்கு உதவ நடேசன் முன் வந்தார்.*

*நடேசனின் மாமன் ஒருவர் கார் திருத்தும் நிறுவனம் ஒன்றை மருதடிச் சந்தியில் நடத்திக் கொண்டிருந்தார். சிறுவயதில் இருந்து சொந்தமாகக் கார் வாங்கும் வரை மாமனாரின் நிறுவனத்தில்தான் நடேசன் வேலை செய்தார். அதனால் கார் திருத்துவதில் நடேசனுக்கு நல்ல அனுபவம் இருந்தது. எந்தக் காரானாலும், அதை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் போட்டாலும் மீண்டும் கச்சிதமாகப் பொருத்தி விடும் ஆற்றலும் நடேசனுக்கு இருந்தது.*

*நடேசனின் திறமையை இராமநாதன் நன்கு அறிந்து வைத்திருந்ததால் தனக்கான கார் வாங்கும் பொறுப்பை நடேசனிடமே விட்டு விட்டார்.*

*தனது நண்பன் இராமநாதனுக்காக நடேசன் தெரிவு செய்தது தன்னிடம் உள்ளது போன்ற ஹில்மன் கார் ஒன்றைத்தான். அந்தக் கார்தான் கிராமக்கோட்டுச் சந்தியில் முதன் முதலாக நின்ற வாடகைக்கார்.*

*இராமநாதனது கார் எப்பொழுதும் 'பளிச்' என்றிருக்கும். நண்பர்களின் கார்கள் வாடகைக்குப் போகாத மாலை நேரங்களில் இருவரும் வல்லிபுர ஆழ்வாரிடம் போய் விடுவார்கள். அங்கே குளத்தில் தங்கள் கார்களைக் கழுவி பின்னர் கேணியில் சுத்தமான தண்ணீர் எடுத்து மீண்டும் கார்களை புனித நீராட்டி, ஆழ்வார் நாமமும் போட்டு அழகு படுத்துவார்கள்.*

*சிலவேளைகளில் தங்க ளது கார்களை கிராமக்கோட்டுச் சந்தியிலே நிறுத்தி வைத்து விட்டு, சைக்கிள் கடைக்கு முன்னால் இரண்டு கதிரைகளைப் போட்டு அதில் பெருமையாக உட்கார்ந்திருப்பார்கள்.*

யார் கண்பட்டதோ தெரியவில்லை. நடேசனது காருக்கு நோய் ஒன்று வந்து சேர்ந்தது. நன்றாக ஓடிக் கொண்டு இருந்த கார் 'மக்கர்' பண்ணத் தொடங்கியது. ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் எதையோ நினைத்து விட்டு திடீரென வீதியிலே நின்று விடும். பிறகு நாலு பேர் சேரந்து தள்ளி விட்டால்தான் கார் மறுபடி ஓட ஆரம்பிக்கும்.

பாடசாலை மாணவிகளோடு நடேசனது கார் வீதியிலே நின்று போனால் இளைஞர்களான எங்க ளுக்கு சப்பரத் திருவிழா. அம்பிகைகள் எல்லாரும் காரைவிட்டு இறங்கி தெருவில்நின்று காட்சி தருவார்கள். நடேசன் எங்களை உதவி என்று கேட்கவே தேவையில்லை. அவர் ஒரு பார்வை பார்த்தாலே போதும். நாங்கள் ஓடிப்போய் காரைத் தள்ளி விடுவோம். சிலவேளைகளில் நேரம் எடுத்து மெதுவாகத் தள்ளுவோம்.

காருக்குள்ளே ஸ்ரேரிங்கை பிடித்திருக்கும் நடேசனது முகம் எரிச்சலைக் காட்டினால் மரியாதை நிமித்தமாக வேகமாகத் தள்ளி விடுவோம்.

பாடசாலைக்குப் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் போது கார் நின்று விட்டால் தள்ளிவிட நாங்கள் எப்பொழுதும் தயாராகவே இருந்தோம். ஆனால் மற்றைய நேரங்களில் குறிப்பாக சினிமா இரண்டாவது காட்சியின் போது நடேசன் பலத்த சிரமங்களுக்கு ஆளானார்.

நடேசனது சிரமத்தைக் குறைக்க அவரது ஆத்ம நண்பன் இராமநாதன் முன் வந்தார். தனது காரை மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாடகையாக நடேசனுக்கு கொடுத்தார்.

நடேசனுக்கு அது நிறைந்த வசதியாக இருந்தது. மாமனாரின் நிறுவனத்தில் தனது காரை திருத்த

வேலைக்கு விட்டு விட்டு இராமநாதனின் காரில் தனது தொழிலைத் தொடர ஆரம்பித்தார்.

இராமநாதன் பெருந்தன்மையுடன் தனது காரை நடேச னுக்கு வாடகைக்குக் கொடுத்ததில் ஒரு உள்நோக்கமும் இருந்தது.

இரண்டு தேநீர்கடைகள், ஒரு சைக்கிள் திருத்தும் கடை, ஒரு பேக்கரி, ஒரு யூனியன்கடை, ஒரு பெற்றோல் நிரப்பும் நிலையம், எப்பொழுதாவது நடைபெறும் கிராம(கோட்) நீதிமன்றம், ஒரு ஆயுள்வேத நிலையம், ஒரு முடிதிருத்தும் நிலையம், என்று ஒரு சிறிய வட்டத்துக்குள்ளேயே கிராமக்கோட்டுச் சந்தி அடங்கி இருந்தது. கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்து, மந்திகை ஆஸ்பத்திரிக்கோ அல்லது பருத்தித்துறை நகரத்துக்கோ ஐந்து சதத்துடன் ஐந்து நிமிடங்களுக்குள் பஸ்ஸில் போய்விடலாம். அப்பொழுது பிரதானமாக சைக்கி ளையே எல்லோரும் பயன் படுத்தினார்கள். பெண்களும் வீதிக்கு வந்து சைக்கிள் ஓட ஆரம்பித்திருந்த காலம் அது.

அப்பொழுது ஆண்களுக்கு நிகராக சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்த மகேஸ்வரியை எங்கள் முழுக் கிராமமே 'பெடியன் மகேஸ்' என்று விழித்ததை இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன்.

நான் அறிந்து முதன் முதலில் எங்கள் கிராமத்தில் சைக்கிள் ஓடியவர் மிஸிஸ் வேலாயுதம் ரீச்சர்தான். அவர் 'அடுத்த வீட்டுப் பெண்' திரைப்படத்தில் 'கன்னித் தமிழ்மணம் வீசுதடி காவியத் தென்றலுடன் பேசுதடி..." பாடல் காட்சியில் அஞ்சலி தேவியோடு சைக்கிள் ஓடிக் கொண்டு நடித்ததை பலர் அன்றும் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆக எங்கள் கிராமத்தில் போக்குவரத்துக்கு சைக்கிளே பிரதானமாகப் பயன் படுத்தப்பட்டதால் வாடகைக்குக் காரை எடுத்துப் பயன்படுத்த ஆட்களில்லை. இது இராமநாதனுக்கு ஒரு பின்னடைவாகவே இருந்தது. நடேசனது கார் 'மக்கர்' செய்யத் தொடங்கிய அந்தச் சந்தர்ப்பத்தை தனது வருவாய்க்கு இராமநாதன் பயன் படுத்திக் கொண்டார்.

கிராமக்கோட்டுச் சந்தியில் சும்மா காட்சிப்பொருளாக நின்ற இராமநாதனது கார் இப்பொழுது காசு சம்பா திக்கத் தொடங்கியது. வல்லிபுரக் கோவிலுக்குப் போகும் பெற்றோல் செலவும் இராமநாதனுக்கு இப்பொழுது மிச்சமானது. இராமநாதனது காரை நடேசன் வைத்திருந் ததால் எரிபொருள் தொடங்கி இதர செலவுகளையும் நடேசனே பார்க்க வேண்டியதாயிற்று.

இப்படியே எல்லாம் நல்லபடியாக நடந்தால் இன்னும் ஒரு கார் வாங்கி விடலாம் என்ற எண்ணம் கூட இராமநாதனுக்கு வந்திருக்கலாம். அவர் மகிழ்ச்சியாகவே காணப்பட்டார். அவரது முகத்தில், பேச்சில், நடையில் ஒரு முதலாளிக்கான களை தென்பட ஆரம்பித்தது.

ஒருபக்கம் தொழில் அத்தோடு சேர்ந்து வல்லிபுரஆழ் வார் தரிசனம் என்றிருந்தாலும் மறுபுறம் தனது காரைத் திருத்தி எடுப்பதில் நடேசன் மும்முரமாக இருந்தார். தனக்கு நேரம் கிடைக்கும் பொழுதுகளில் மாமனது வாகனம் திருத்தும் நிலையத்தில் தனது காரோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தார். கார்பற்றிய நடேசனது ஆழ்ந்த அறிவு ஏனோ அவரது ஹில்மன் காரோடு மட்டும் பலிக்கவில்லை. ஆனாலும் மனம் தளராது மீண்டும் மீண்டும் முயற்சி செய்து தனது ஹில்மன் காரை மூன்று மாதங்களில் மறுபடியும் உயிரத்தெழ வைத்தார்.

*இராமநாதனதுக்குத்தான் மாதாந்தம் வாடகையாகக் கிடைத்த பணம் இல்லாது போயிற்று. மீண்டும் அவரது கார் கிராமக்கோட்டுச் சந்தியில் அமைதியாக நின்றது. எதுவித சிரமங்களும் இல்லாமல் நடேசனது கார் இப் பொழுது தனது சேவையைச் செய்து கொண்டிருந்தது.*

*இராமநாதனுக்கோ கிரகமாற்றத்தில் சனி பிடித்துக் கொண்டது. ஒருநாள் வல்லிபுரக்கோவிலுக்கு ஆழ்வாரை தரிசிக்க இராமநாதன் போன பொழுது அவரது கார் எஞ்சின் இயங்காமல் வீதியில் நின்று விட்டது. காரைத் தள்ளி விட்டால்தான் மீண்டும் எஞ்சின் இயங்கும் நோய் இராமநாதனது காருக்கும் தொற்றி விட்டிருந்தது.*

*"எஞ்சின் அடிக்கடி நின்று போறது ஹில்மன் காருக்கு பிடிக்கிற ஒரு நோய் போலை. நடேசன் உனக்கு வேறை கார் வாங்கித் தந்திருக்கலாம்"*

*"உன்ரை கார் கிராமக்கோட்டுச் சந்தியிலை நின்றால் என்ன, கராச்சுலை நின்றால் என்ன? இரண்டும் ஒண்டு தானே. வாடகைக்குப் போகாமல் சும்மாதானே நிக்கப் போகுது"*

*என்று சிலர் அமுத வாக்குகள் சொல்ல ஆரம்பித்தார்கள்.*

*எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த இராமநாத னுக்கு யாரோ ஒரு புண்ணியவான் சொன்னதுதான் நித்திரையையே இல்லாமல் செய்து விட்டது.*

*அந்தப் புண்ணியவான் இராமநாதனிடம் சொன்னது இதுதான், "ஒருவேளை நடேசன் உன்ரை கார்எஞ்சினை தன்ரை காருக்கு மாத்தி இருப்பானோ? கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பக்கூடாது. நடேசனின்ரை மாமன்காரனும் ஒரு எம்டன்தான்"*

*இராமநாதனைச் சந்தேகம் பிடித்துக் கொண்டது. ஆனாலும் நடேசனிடம் நேரடியாக இதைப் பற்றிப் பேச அவருக்கு ஏனோ துணிவு வரவில்லை. நாள் தவறாமல் வல்லிபுர ஆழ்வாரைப் போய்ப் பார்த்து முறையிட்டும் பார்த்தார். பலன் கிடைக்கவில்லை.*

*உண்மையில், இராமநாதனது கார் எஞ்சினை நடேசன் தனது காருக்கு மாற்றியவிடயம் வல்லிபுர ஆழ்வாருக்குத் தெரியாமலா போயிருக்கும்?*

*ஆனால் ஆழ்வாரோ வழமைபோல எதுவுமே நடக்காதது மாதிரி அசைவின்றிச் சயனித்திருந்தார்.*

***2.06.2017***

# மார்க்கிரேற் அன்ரி

*சைவர்களையும் கிறிஸ்தவர்களையும் எது பிரித்து வைக்கிறது என்று என்னைக் கேட்டால் ஒரு வீதிதான் என்று சொல்வேன். எனது கிராமத்தில் அப்படித்தான் இருந்தது. கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்து ஆனை விழுந்தான் வரை செல்லும் வீதியொன்று, ஒரு பக்கம் புலோலி கிழக்கு என்றும் மறுபக்கம் புலோலி தெற்கு என்றும் பிரித்து வைத்திருந்தது. புலோலி கிழக்கில் சைவர்களும் புலோலி தெற்கில் கிறிஸ்தவர்களும் இருந் தார்கள். (ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் கிறிஸ்தவர் கள் இருந்தார்கள்)*

*கிராமக்கோட்டில் இருந்து ஆனைவிழுந்தானுக்குச் செல்லும் வீதி தொடங்கும் இடத்தில் இருந்து சிறிது தள்ளி சூசையப்பர் தேவாலயம் இருந்தது. அதை ஒட்டியே அனேக கிறிஸ்தவக் குடும்பங்கள் இருந்தன. விதிவிலக்காக வீதியின் இந்தப் பக்கம் அதாவது புலோலி கிழக்குப் பக்கம் சைவர்களுடன் இணைந்து நாலுகிறிஸ்தவக் குடும்பங்களும் இருந்தன.*

*வீதியோ, மதங்களோ இடையில் குறுக்கிட்டாலும் இரண்டு பக்க பழக்க வழக்கங்களும் ஏறக்குறைய ஒன்றாகத்தான் இருந்தன. அவர்கள் ஞாயிற்றுக் கிழமை களில் தேவாலயம் போவார்கள். இவர்கள் வல்லிபுரக் கோவிலுக்குப் போவார்கள். அவர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவார்கள். இவர்களிலும் சிலர் மாட்டிறைச்சி சாப்பிடுவார்கள் (வெளியே தெரியாத வண்ணம் கொஞ்சம் ஒளிவு மறைவாக). சைவக்கார வீட்டுப் பெண்களை கிறிஸ்தவர்கள் 'சைற்' அடிக்க முடியாது. கிறிஸ்தவர்கள் வீட்டுப் பெண்களை சைவக்காரர் தாராளமாக 'சைற்' அடிக்கலாம். இப்படியான ஒற்றுமை களும், சின்னஞ்சிறு வேறுபாடுகளும் இருந்தாலும் ஏதோ*

ஒன்று அவர்கள் நெருக்கத்தை தடுத்து நின்றது. நேரில் கண்டால் மரியாதையாக சிரித்துக் கொள்வார்கள். மற்றும்படி ஒட்டுதல், உறவாடுதல்கள் எல்லாம் கிடையாது.

புலோலி கிழக்கில் வசித்தவன்தான் சூசைதாசன். எனது பள்ளித் தோழன். அவனுடன் பழகுவதை சைவர்கள் மட்டுமன்றி அவனுடைய மதம் சார்ந்தவர்களும் தவிர்த்தி ருந்தார்கள்.

சூசைதாசன் சிறு வயதில் தந்தையை இழந்தவன். அவ னது தந்தை மார்ட்டின் ஒரு மகா குடிகாரன். ஒருநாள் குடிபோதையில், குளிக்கும் போது கிணற்றுக்குள் தவறி விழுந்து செத்துப் போனான். அவனது தாய் மார்க்கிரேற் அன்ரி பற்றி ஊரில் நல்லவிதமான கதைகளை நான் கேட்டதில்லை. மார்க்கிரேற் அன்ரியை தெருவில் கண்டால், „அங்கை என்ன பார்வை‟ என்று புருசன் மாரை அதட்டி இழுத்துச் செல்லும் மனைவிகள் எங்கள் ஊரில் அதிகம் இருந்தார்கள்.

சூசையுடன் விளையாடுவதற்கு அவனது வீட்டுக்குப் போனால், „வா ராசா, சூசையோடை விளையாட வந்தனீயே?‟ என்ற அன்பான உபசரிப்பு மார்க்கிரேற் அன்ரியிடம் இருந்து வரும். விளையாடி முடிந்த பிறகு எங்கள் இருவருக்கும் கை கால்களைக் கழுவி விட்டு, சாப்பிடுவதற்கு பலகாரங்கள், தேனீர் தந்து, „விளையா டுறதோடை நிக்காமல் நல்லா படிக்கவும் வேணும்‟ என்று அறிவுரையும் தருவார். அவரைப் பற்றி எதற்காக சனங்கள் இப்படி அவதூறகப் பேசுகிறார்கள் என்று எனக்கு சிலர் மீது கோபமும் இருந்தது. அதிலும் மரியநேசன் மீது எனக்கு அதிக கோபம் இருந்தது.

மரியநேசனிடம் குடி கிடி கிடையாது. சிகரெட்

பிடிப்பான். எந்த மொக்கைப் படமானாலும் முதல் காட்சிக்கு முதல் ஆளாக போய் நிற்பான். இப்பொழுது உள்ளது போன்று அங்கங்கே கமரா பொருத்தி கண்காணிக்கும் வசதி எல்லாம் அப்பொழுது கிடையாது. ஆனால் ஊரில் எது நடந்தாலும் எப்படியோ மரியநேசனது காக்காக் கண்ணுக்குத் தெரிந்துவிடும். வீதியில் போய் வருபவர்களை வழி மறித்து தான் அறிந்த விசயங்களைச் சொல்லிக் கொள்வதில் அவனுக்குப் பெருமை. தான் பார்க்காத விசயங்களைக் கூட நேரில் நின்று பார்த்தது போன்று காட்சிகளாக விவரித்துச் சொல்லும் ஆற்றல் அவனிடம் இருந்தது. நான் சூசையோடு விளையாடி விட்டு மார்க்கிரேற் அன்ரி வீட்டிலிருந்து வருவதைக் கண்டால், என் வயதைப் பற்றிக் கூட யோசிக்காமல், „என்ன, நீச்சல் பழகிட்டு வாறாய் போல" என்று நக்கலாகக் கேட்பான்.

ஒருநாள் நான் சூசையோடு விளையாடி விட்டு வரும் போது மரியநேசன் என்னை வழி மறித்தான். நான் சூசையோடு விளையாட அவனது வீட்டுக்குப் போவது மரியநேசனுக்குப் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும்.

„விளையாடுறதுக்கு உனக்கு வேறை இடம் கிடைக்க இல்லையோ?" என்று கேட்டான். நான் ஒன்றும் பேசா மல் நின்றேன்.

மரியநேசனே தொடர்ந்தான். "உனக்கு மார்க்கிரேற்றைப் பற்றி என்ன தெரியும்? பிழையான பொம்பிளையவள். அவள் புருசனையே கொலை செய்தவள். நீ இனி சூசையோடை விளையாட அங்கை போகாதை" என்றான்.

„மரியநேசனை, இந்தப் பக்கம் வரக்கூடாது என்று ஒரு நாள் அம்மா துரத்திவிட்டவ" என்று சூசை ஒரு தடவை

*என்னிடம் சொன்னது ஞாபகத்தில் வந்தது. உடனேயே மரியநேசனைக் கேட்டும் விட்டேன்.*

*“உங்களை வரவேண்டாம் என்று சொன்ன கோவத்திலை தானே என்னை அங்கை விளையாடப் போக வேண்டாமெண்டுறீங்கள்“ நான் இப்படிக் கேட்டதும் மரியநேசனுக்கு கோபம் கண்டிப்பாக வந்திருக்கும். ஆனாலும் அதை அவன் வெளியே காட்டிக் கொள்ள வில்லை. “விசர்க்கதை கதைக்கிறாய்“ என்றவன், மேற்கொண்டு சொல்ல ஆரம்பித்தான். அவன் சொன்னதைக் கேட்ட பொழுது நம்ப முடியாமல் இருந்தது. ஆனாலும் சிறிதாக ஒரு பயம் என்னிடம் ஒட்டிக் கொண்டது.*

*மார்ட்டின் ஒரு தண்ணீர் பிரியன். அவனுக்கு கள்ளை விட சாராயம்தான் அதிகம் பிடிக்கும். நேரம் கிடைக்கிற பொழுதெல்லாம் குடிக்க வேண்டும் என்ற வெறி அவனுக்கு இருந்தது. அதுவும் தனியாக தண்ணி அடிக்க அவனுக்கு சரிப்பட்டு வராது. யாராவது கூட்டு வேண்டும். அதற்கு மூன்று கூட்டாளிகள் அவனுக்கு இருந்தார்கள். “304 கார்ட்ஸ்” விளையாட்டோடு தான் அவர்கள் தண்ணி அடிக்க ஆரம்பிப்பார்கள். ஆரம்பத்தில் சந்தோசமாக, சிரித்துக் கொண்டே அவர்களது சீட்டுக்கட்டு விளையாட்டு தொடங்கும். போதை ஏற ஏற அவர்களுக்குள் சண்டைகள், சத்தங்கள் மெதுவாக ஆரம்பிக்கும்.*

*’நீ கலாவரை மணலைப் போட்டிருந்தால் கதை வேறைமச்சான்", "ஆடித்தன்தான் துரும்பு எண்டு எனக்கு அப்பவே தெரியும். ஒரு துரும்பும் மாட்ட மாட்டன் எண்டுட்டுது", "நீ அடிச்ச கம்மாறிஸ் பிழை", "விசர் விளையாட்டு விளையாடுறாய், முதலிலை ஜக்கை அடிச்சு ஒன்பதை விழுத்தி இருந்தால் கதை வேறை.*

கையிலை கம்மாறிஸ்'' என்று பலவித உரையாடல் களோடு அவர்களது சீட்டுக் கச்சேரி நகரும். ஒரு கட்டத்தில் போதையின் உச்சத்தில் ராஜா எது ராணி எது என்று தெரியாமல் கலாவரையும், ஆடித்தனும் ஒன்றாகக் கலந்து தெரிய, சீட்டுக்கட்டு சிதறி நிலத்தில் கிடக்க அதன் மேல் விழுந்து கிடப்பார்கள். என்னதான் போதையில் விழுந்தாலும் அதிலும் உசாரான ஆட்களும் இருந்தார்கள். மார்ட்டினின் நிறைந்த போதையில் அவனது வீட்டில் தவறு நடக்க ஆரம்பித்தது.

அன்றொருநாள் ஏதோ ஒரு அவசரமாரன விடயமாக வேலையில் இருந்து வீட்டுக்கு வந்த மார்ட்டினுக்கு மார்க்கிரேற்றின் விளையாட்டு தெரிந்து போயிற்று. தனது நண்பர்களின் நட்பும் மார்ட்டினுக்குப் புரிந்து போயிற்று. சாராயம் குடிக்கும்போது வரும் போதையை விட அதிகமான வெறி கண்டான். விளைவு, மார்க்கிரேற் றின் உடம்பு பல காயங்களை கண்டது.

துரோகம், கோபம், இயலாமை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து மார்ட்டினை சோர்வடையச் செய்திருந்தது. இந்த நிலையை மறக்க அவனுக்கான மருந்து சாராயம்தான். துரைசிங்கம் கடைக்குப் போய் சாராயம் வாங்கிக் கொண்டான். மதியம் அவன் வீட்டுக்கு வரும் போது அவனது தள்ளாட்டத்தை ஊர் நின்று வேடிக்கை பார்த்தது.

வீட்டுக்கு வந்தவன் நேரடியாகக் கிணற்றடிக்குப் போய் குளிக்க ஆரம்பித்தான். துலாவில் கட்டியிருந்த கயிறு சற்றுச் சிறிதாக இருந்ததால், கிணற்றில் தண்ணீர் அள்ளும் ஒவ்வொரு தடவையும் துலாவை நன்றாகக் கீழே தாட்டுத்தான் அவனால் தண்ணீரை அள்ள முடிந்தது. தண்ணீர் அள்ளுவதில் சிரமமும், அதிகமாகக் குடித்ததால் தள்ளாட்டமும் அவனிடம் இருந்தன. ஆனாலும் தொடரந்து குளித்துக் கொண்டிருந்தான்.

கிணற்றில் இருந்து எடுத்து தலையில் ஊற்றிய தண்ணீர் மார்ட்டினை சிறிது குளிர வைத்துக் கொண்டிருந்தது.

குளித்துவிட்டு வந்தவுடன் மார்ட்டினுக்கு சூடாக உணவு பரிமாறுவது மார்க்கிரேற்றின் வழமை. மார்க்கிரேற் குடத்தைப் பார்த்தாள். அது வெறுமையாக இருந்தது. சாப்பிட்டு முடிந்தவுடன் குடிக்க தண்ணீர் கொடுக்க வில்லை என்றால் அது இன்னுமொரு பிரச்சனையை உருவாக்கி விடலாம் என்று நினைத்தாள். இப்பொழுது குடத்தைக் கொண்டு போய் கிணற்றடியில் வைத்தால் குடத்தில் தண்ணீர் ஊற்றி விடுவானா? இல்லை தன்னை எட்டி உதைப்பானா? என்ற கேள்வியும் மார்க்கிரேற்றிடம் இருந்தது. ஆனாலும் மார்ட்டினுடைய கோபத்தை ஆழம் பார்க்க இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த மார்க்கிரேற் எண்ணினாள்.

குடத்தைக் கொண்டுபோய் கிணற்றடியில் வைத்தாள். மார்க்கிரேற்றையோ, குடத்தையோ மார்ட்டின் கண்டு கொள்ளவில்லை. அவன் தன்பாட்டுக்கு குளித்துக் கொண்டிருந்தான். மார்க்கிரேற் பொறுமையோடு பார்த் துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்று விளங்கியது. அது, மார்ட்டினுக்கு இன்னமும் கோபம் தணியவில்லை. அத்தோடு அவனது கோபம் இனி தணியுமா? என்றும் அவளுக்குத் தெரிய வில்லை. ஒவ்வொரு நாளும் குடித்து விட்டு வந்து உதைப்பானோ என்ற பயமும் அவளுடன் சேர்ந்து கொண்டது.

மார்ட்டினோ எதுவித உணர்ச்சிகளையும் காட்டாமல் துலாவை நன்குதாட்டு கிணற்றில் இருந்து தண்ணீர் அள்ளிக் குளித்துக் கொண்டிருந்தான். அவனது செயலை சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மார்க்கிரேற் மார்ட்டினை நெருங்கி வந்தாள். துலாவை தாட்டு தண்ணீரை அள்ள மார்ட்டின் எத்தனித்த அந்தத் தருணத்தில் அவனைத் தள்ளிவிட்டாள்.

*ஆழமான அந்தக் கிணற்றுக்குள்ளிருந்து மார்ட்டினின் உடலை வெளியே எடுத்துப் போடும் பொழுது, மார்க்கிரேற்றைச் சுற்றி இருந்து பெண்கள் கூட்டம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தது. சோகம் பகிர வந்தவர்களில் பக்கத்து வீட்டு மாணிக்கத்தின் பார்வை மட்டும் மார்க்கிரேற்றை தலைகுனிய வைத்தது. "ஒரு வேளை பாரத்திருப்பானோ?" என்று அவளுக்கு அச்சம் வந்தது.*

*மரியநேசன் சொன்ன மார்க்கிரேற்றின் கதை இதுதான். எல்லாவற்றையும் நேரில்நின்று பார்த்தது போல் அவன் இந்தக் கதையைச் சொன்னதில் எனக்கு அவன் மீது துளியும் நம்பிக்கையில்லை.*

*மந்திரி குமாரி திரைப்படத்தில் மலை உச்சியில் இருந்து நாயகி தனது கணவனை கீழே தள்ளி விடும் காட்சியை மார்க்கிரேற் அன்ரியின் கதையோடு சேர்த்து அவன் எனக்கு கதை விட்டிருக்கலாம்.*

*இல்லாவிட்டால் தூக்குத் தூக்கி திரைப்படத்தில் சிவாஜி கணேசன் பேசும் "தருணத்தில் கொலையும் செய்வாள் பத்தினி" என்ற கலைஞர் கருணாநிதியின் வசனத்தை தனது கதையோடு பொருத்திப் பார்த்திருக்கலாம்.*

*„என்ன நடந்தது என்று யாருமே பார்க்காத போது, இதுதான் என்று எப்பிடி உங்களால் சொல்லேலும்?" எனது அந்தக் கேள்விக்கும் மரியநேசனிடம் பதில் இருந்தது.*

*„பக்கத்துவீட்டு மாணிக்கம்தான். அவன்தான் விசயத்தை வெளியே விட்டவன்" மரியநேசனே தொடர்ந்து சொன்னான் „அண்டைக்கு நடந்த சம்பவத்தை வேலிக் குள்ளாலை பாத்தவன் அவன். எதுக்கு வம்பு எண்டு*

*பேசாமல் இருந்திட்டான். ஒருநாள் மார்க்கிரேற்றுக்கும் அவனுக்கும் வந்த ஒரு காணிப் பிரச்சினையிலை, "நீ புருசனையே கிணத்துக்குள்ளை தள்ளிக் கொண்டவள் தானே" எண்டு ஆக்களுக்கு முன்னாலே மாணிக்கம் கேட்டபொழுது வாயை மூடிக்கொண்டு போனவள்தான் மார்க்கிரேற். அதுக்குப் பிறகுதான் ஊருக்கே விசயம் தெரிஞ்சுது"*

*மார்ட்டின் இறந்து 53 வருடங்களாயிற்று. எனக்குக் கதை சொன்ன மரியநேசனும், இந்தக் கதையின் நாயகி மார்க்கிரேற் அன்ரியும் இப்பொழுது உயிரோடு இல்லை.*

*„விளையாடுறதோடை நிக்காமல் நல்லா படிக்கவும் வேணும்" என்று, அன்று அன்போடு என்னைப் பார்த்துச் சொன்ன மார்க்கிரேற் அன்ரி உண்மையில் ஒரு கொலையாளிதானா?*

*என்னுள் இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறது இந்தக் கேள்வி.*

***19.06.2017***

# முத்து அக்கா

*முத்து அக்காவிடம் கனக்க மஞ்சள் பைகள் இருந்தன. அழுக்கின் கறைகள் இல்லாமல் 'முருகா முருகா' என்ற பெரிய சிவப்பு நிற எழுத்துக்களுடன் பளிச்சென்று தூய்மையாக எப்போதும் ஒரு மஞ்சள் பை அவர் கையில் தொங்கிக் கொண்டிருக்கும்.*

*பால் வியாபாரம்தான் முத்து அக்காவின் குடும்பத்துக் கான ஆதாரம். எங்கள் தெருவில் அநேகமான வீடு களுக்கு முத்து அக்காதான் பால் கொண்டு வந்து கொடுப்பார். சாரயப்போத்தல் – 'முழுப் போத்தல்', எலிபன்ற் பிராண்ட் சோடாப்போத்தல் – அரைப் போத்தல் என்ற அளவில் அவரது பால் வியாபாரக் கணக்கு இருக்கும்.*

*காலையில் ஆறு மணிக்கே எங்கள் தெருவிலுள்ள ஒவ்வொருவர் வீட்டு அடுப்பிலும் பால் கொதிக்க ஆரம் பித்து விடும். அதிலும் எங்கள் வீட்டில்தான் முதலில் பால்பொங்க ஆரம்பிக்கும். எங்கள் வீட்டிற்குத்தான் முத்து அக்காவின் அன்றாட முதல் பால் விநியோகம். அதற்குக் காரணம் நான்தான். என்னை அவருக்கு நிறையப் பிடிக்கும்.*

*முத்துஅக்காவிற்கு இரண்டு பெண்பிள்ளைகள். மூத்தவள் பெயர் ராணி. இரண்டாமவள் கிளி. கிளி பிறந்த சில நாட்களில் கணவன் இறந்து போக, பிள்ளைகளை வளர்த்தெடுக்க மாடுகளை வாங்கி பால் வியாபா ரத்தைத் தொடங்கினார். அந்தத் தொழிலில் அவர் காட்டிய நேர்மை அவரது வியாபாரத்தை பெரிதாக்கி விட்டிருந்தது. யாரிடமும் தங்கியிருக்காமல் நேரடியாக அவரே எல்லா வீடுகளுக்கும் போய் பால் விநியோகித்து*

*அளவளாவிப் போவதால் தாய்க் குலங்களுக்கு அவரை நிறையப் பிடித்துப் போயிருந்தது.*

*தனக்கு ஆண்பிள்ளை இல்லாததால், என்னை அவர் மனதளவில் தன் பிள்ளையாக தத்தெடுத்திருக்க வேண்டும். அப்பொழுது எனக்கு வயது ஏழு. உரிமையோடு என்னை 'சின்னவன்' என்றே முத்து அக்கா அழைப்பார். "சின்னவன் எழும்பிட்டானே?" என்ற அவரது குரலே பல காலைகளில் என்னைக் கண் விழிக்க வைத்திருக்கிறது. ஐஞ்சு நிமிசமாவது என்னுடன் இருந்து கதைத்து விட்டே எங்கள் வீட்டை விட்டுப் போவார். மாதம் முடிய பால் வாங்கிய பணத்தை அம்மா கொடுக்க மறந்து போனாலும் கூட முத்து அக்கா அதைப் பற்றிக் கேட்கவே மாட்டார்.*

*"நான்தான் மறந்துபோனன். நீயாவது கேட்டிருக்கலாம் தானே?" என்று அம்மா முத்து அக்காவைக் கேட்டால், "சின்னவன் குடிக்கிற பாலுக்கு கணக்கெதுக்கு?" என்பது அவரது பதிலாக இருக்கும்.*

*ஒருநாள் முத்து அக்காவின் வரவு நின்று போய்விட்டது. வீட்டுக்கான பால் கூட வேறொரு இடத்தில் இருந்து தான் வந்தது. கூடிக் கூடிக் கதைத்தவர்களின் வாயில் இருந்து "முத்து" என்ற வார்த்தை அடிக்கடி உதிர்ந்து கொண்டிருந்தது. கதைப்பவர்கள் நடுவே 'சிறுவன்' என்று எனக்கு இடம் கிடைக்கவில்லை. அவர்கள் பேசும் போது சிலவேளைகளில் அவர்களின் குரல்கள் ஆரோ கணத்தில் வரும். அப்பொழுது கிடைக்கும் வார்த்தை களை எல்லாம் எடுத்துக் கோர்த்துப் பார்ப்பேன்.*

*"வெறி, அடி, கொலை, பொலீஸ் என்று நான் சேர் த்த வார்த்தைகளை அந்த வயதில் என்னால் இணைத்துப் பார்க்க முடியவில்லை. ஆனாலும் முத்து அக்காவுக்கு*

ஏதோ நடந்து விட்டது என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

என்னுடன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த தேவராஜன் முத்து அக்கா வீட்டுக்கு அயலில்தான் இருந்தான். அவன்தான் என்ன நடந்தது என்பதை எனக்குச் சொன்னான்.

எங்கள் நகரத்து பெரியமுதலாளிதான் முத்து அக்காவின் சகோதரியைத் திருமணம் செய்திருந்தார். பரம்பரைச் சொத்தை விற்பதில் முதலாளிக்கும் முத்து அக்காவிற்கும் இடையில் பல காலங்களாக அனுமார் வால் போல் இழுபறி நீண்டு கொண்டே இருந்தது. பிரச்சனையை முடித்து, சொத்தை விற்று, பணத்தைப் பார்க்க எல்லா விதமான வியாபார தந்திரங்களையும் முதலாளி செய்து பார்த்தும் காரியம் நடைபெறவில்லை.

இங்கே முதலாளியைப் பற்றி கொஞ்சம் சொல்லி விட்டு விசயத்துக்கு பிறகு வருவது நல்லது என்று நினைக்கிறேன்.

முதலாளிக்கு வியாபாரம் மட்டுமல்ல அடிதடியும் நன்றாக வரும். அவருக்கு 'சண்டியர்' என்ற பட்டமும் இருந்தது. 'அஞ்சேன்' என்பது அவரது சுபாவம். 'வணங்கா முடி' என்பது அவரது இறுமாப்பு. பிரச்சனை என்று வந்தால் முதலில் பேசிப் பார்ப்பார். சரிவரவில்லை என்றால் சண்டிக்கட்டுடன் களத்தில் குதித்து விடுவார். போதிய அடியாட்கள், நகரத்தின் காலிகள் என்று ஏகப்பட்டோர்கள் அவரைச் சுற்றி ஒரு வட்டம் அமைத்திருந்ததால் அவர் தன் பாதுகாப்புக்கென்று பிரத்தியேகமாக நாய் ஒன்றும் வளர்க்க வேண்டிய தேவை இருக்கவில்லை. கொஞ்சமாக இவருடன் சத்தமாகப் பேசிய விதானை யார் ஒருவர் சூடு விழுந்து ஒருநாள் செத்துப் போயிருந்தார். சற்றுக் கவனியுங்கள் இது போராட்டத்துக்கு

*முந்திய காலம். சுட்டது யாரென்று மன்றில் நின்று சொல்ல எவருமே முன் வராததால் விதானையார் மரணம் சட்டத்தின் பார்வையில் மர்மமாகவே போயிற்று. இப்பொழுது முதலாளியின் தன்மை எப்படி யானது என்பது ஓரளவுக்கு உங்களுக்குப் புரிந்திருக்கும்.*

*சரி இனி முத்து அக்கா விடயத்துக்கு வருவோம்.*

*அன்று மதியம் சாப்பிட்டு விட்டு திண்ணையில் சற்று அயரலாம் என்று படுத்திருந்த முத்து அக்காவை வீட்டின் தகரப்படலையில் இருந்து வந்த சத்தம் திடுக்கிட்டு எழ வைத்தது. தகரப் படலையை உதைத்துத் தள்ளிக் கொண்டு ஒரு நடுத்தர வயது ஆண் வீட்டு முற்றத்தில் வந்து நின்றான். வந்தவனின் தள்ளாட்டத்தை விட அவன் நிர்வாணமாக நின்றதுதான் முத்து அக்காவை அதிக திகைப்புக்கு உள்ளாக்கியது.*

*“உங்களுக்கு அவ்வளவு திமிரோடி. இண்டைக்கு.... இண்டைக்கு இப்ப... இப்பவே உங்கடை திமிரை அடக்கிறன். வாங்கோடி வெளியாலை” ஒலிபெருக்கி கூட அவனது சத்தத்துக்கு நேர் நிற்காது.*

*சாரய வெறியோடு அம்பு ஒன்று அம்மணமாக எய்யப் பட்டிருக்கிறது என்பது முத்து அக்காவுக்கு விளங்கி விட்டது. அநேகமான ஆண்கள் வேலைக்குப் போய் விட்டதால், அந்த மதியநேரம் ஊரில் பெண்கள் தான் வீடுகளில் இருந்தார்கள். வெறியில் சுதி தவறி, செந்தமிழில் வந்த ஒரு ஆணின் குரலைக் கேட்டவுடன், ஓட்டுக்குள் தலையை உள் இழுத்துக் கொண்ட ஆமைகள் போல ஊர்ப் பெண்களின் தலைகள் காணாமல் போயின. முத்து அக்காவின் அயல்வீடுகள் எல்லாம் யன்னல்களை மூடிவிட்டு இடுக்குகளுக்குள் ளாலே விடுப்புகள் பார்க்கத் தொடங்கி விட்டன.*

உதவிக்கு யாரும் வரப் போவதில்லை. குஞ்சுகளைக் காக்க தாய்க் கோழி தயாரானது.

ராணியையும், கிளியையும் விழுந்திருந்த படலைக் குள்ளாலே வீட்டுக்கு வெளியே ஓடச் சொல்லி விட்டு, முத்து அக்கா வந்தவனிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

“ஆரடா நீ? ஆம்பிளை இல்லாத வீட்டுக்குள்ளை வந்து சண்டிதனம் காட்டுறாய். தெரியுமடா உன்னை யார் அனுப்பின தெண்டு. தைரியம் இருந்தால் அவனை நேரே வரச் சொல்லடா”

முத்து அக்கா நினைத்தது நடந்து கொண்டிருந்தது. அவனது கவனம் முத்து அக்காவின் பக்கம் திரும்பி இருந்ததால் படலையை நோக்கி ஓடும் ராணியும் கிளியும் அவனது கண்களில் படவில்லை. ஆனால் அவர் நினைக்காத ஒன்று நடந்தது.

ராணி படலையைத் தாண்டி ஒழுங்கைக்குள் ஓடிக் கொண்டிருந்தாள். கிளியோ தாயைப் பார்த்து, “அம்மா வாங்கோ... நீங்களும் வாங்கோ.. ஓடி வாங்கோ..“ என்று தன் கவனத்தை தாயில் வைத்துக் கொண்டு, பின்புறமாக ஓடியதில் நிலை தடுமாறி தரையில் விழுந்தாள். விழுந்தவள் எழும்ப எத்தனிக்கும் போது அவள் முன்னால் நிர்வாணமாக அவன் நின்றான். தள்ளாட்டத்தோடு நின்றவன் அப்படியே கிளி மீது விழுந்து விட்டான். தன்மேல் விழுந்திருந்த அவனை தள்ளிவிட்டு எழுந்து விட அவளுக்கு ஏது பலம்? நிர்வாணமாக தன் மேல் படுத்திருக்கும் ஆண், தரையை விட்டு அசைய விடாமல் அழுத்தி இருக்கும் அவனது பாரம் எல்லாம் அவளுக்கு பெரிய அதிர்ச்சியாகவே இருந்தன. முத்து அக்காவின் கையில் இப்பொழுது

உலக்கை இருந்தது. தன் மகளுக்கு அடி பட்டுவிடக் கூடாது என்று மிகக் கவனமாகப் பார்த்துப் பார்த்து அவனை உலக்கையால் அடித்துக் கொண்டிருந்தார். அடியின் வேதனையில் கிளியை விட்டுவிட்டு தரையில் அவன் உருண்டபோது அவனது முழங்காலின் சில்லை குறிவைத்து கடைசி அடியைப் போட்டு, உலக்கையை எறிந்து விட்டு, "இனி உன்னாலை எழும்பி நடக் கேலாது. உன்னை அனுப்பினவன் வந்துதான் உன்னைத் தூக்கிக் கொண்டு போகோணும்" சொல்லிக் கொண்டே கிளியை அழைத்துக் கொண்டு ராணியைத் தேடுவதற் காக ஒழுங்கைக்குள் இறங்கினார். கிளிக்கு இன்னமும் அதிர்ச்சியாக இருந்தது. வெறித்துப் பார்த்த படியே தாயோடு நடந்து கொண்டிருந்தாள்.

அடிபட்டவன் அன்று மாலை ஆதார வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருந்தான். அவனிடம் பொலீஸ் வாக்கு மூலம் எடுத்துக்கொண்டிருந்தது. "அப்பாவியானஎன்னை தாயும், மகளும் சேர்ந்து உலக்கையாலை அடிச்சுப் போட்டாங்கள்" என்று திரும்பத் திரும்ப கிளிப் பிள்ளையைப்போல் அவன் சொல்லிக்கொண்டிருந்தான். அடுத்த நாள் காலையில் அவன் வைத்தியசாலைக் கட்டிலிலேயே செத்துப் போயிருந்தான். பலமாகத் தாக்கப்பட்டதால் மரணம் நிகழ்ந்திருக்கிறது என வைத்தியஅதிகாரி பொலிஸுக்கு அறிக்கை கொடுத்தார்.

"காலில் அடிபட்டதுக்காக ஒருவன் செத்துப்போவானா? அக்கம் பக்கம் பார்த்து, ஊரில் மிக அவதானமாக பலரது கேள்வி ஒலித்தது.

"காசு விளையாடிட்டுது. ராவோடராவா ஊசியைப் போட்டு ஆளின்ரை கதையை முடிச்சிட்டாங்கள்" இப்படியும் ஒரு கதை ரகசியமாக இருட்டுக்குள்ளே உலா வந்தது.

*மரணவிசாரணை அதிகாரிவிசாரணையில் "கொலை" என எழுதி விட்டு, உடலை உறவினரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். அன்று மாலையே அவசர அவசரமாக அவனது உடல் தகனம் செய்யப் பட்டுவிட்டது.*

*கொலை செய்த குற்றத்துக்காக முத்து அக்காவும், கிளியும் கைதாகினார்கள்.*

*"தாய்க்கும் மகளுக்கும் 14 நாட்கள் றிமான்ட்" நீதிபதி சொன்னார்*

*ஒவ்வொரு வழக்குத் தவணையிலும் மேலும் மேலும் இரண்டு கிழமைகள் தடுப்புக்காவல் விசாரணை என அதிகரித்துக் கொண்டே போனது. வழக்கின் காலங்கள் நீண்டு கொண்டிருந்தன. முத்து அக்காவினால் துன்பங் களில் இருந்து மீண்டுவர முடியவில்லை. வழக்குச்செலவு கட்டுக்குள் அடங்காமல் அவரை தொல்லைப் படுத்திக் கொண்டிருந்தது.*

*சில வருடங்கள் கழித்து நண்பன் ஒருவனோடு வீட்டு வாசலில் நின்று கதைத்துக் கொண்டிருந்தேன்.*

*"சின்னவா"*

*முத்து அக்காவின் குரல். திரும்பிப் பார்த்தேன்.*

*அவர் கையில் பளிச்சென்றிருக்கும் மஞ்சள்பை இல்லை. உடையில் கூட சுத்தம் குறைந்திருந்தது. பக்கத்தில் அவரது மகள் கிளி நின்றாள்.அவளது பார்வை எங்களை விடுத்து வானத்தை நோக்கி இருந்தது. யாரையும் பார்க்கவோ, பேசவோ அவள் விரும்ப வில்லை என்று தெரிந்தது.*

*“சின்னவா வளந்திட்டாய். மீசை எல்லாம் முளைக்க ஆரம்பிச்சிட்டுது. பெரிய ஆம்பிளை ஆயிற்றாய்.”அவரின் குரல் பாசத்தோடு ஒலித்தது.*

*என்ன நினைத்தாரோ, அவரது குரல் திடீரென சோக மானது. “ஏன்டா சின்னவா இந்த முத்து அக்காவை மறந்து போட்டியே?”*

*“இல்லை” என்று வாய் திறந்து ஏனோ நான் சொல்ல வில்லை. ஆனால் இல்லை என்ற அர்த்தத்தில் வேகமாக தலையை மட்டும் ஆட்டினேன்.*

*“தெரியும் நீ என்னை மறக்க மாட்டாய் எண்டு. முத்து அக்கான்ரை நிலைமைதான் இப்பிடி ஆகிப் போச்சு. பார் கிளியை. அவளுக்கும் செய்யாத வைத்தியமில்லை. பேந்த பேந்த முளிச்சுக் கொண்டு இருக்கிறாள். இந்தக் கோலத்திலை இவளைப் பாத்திட்டு ஆர்தான் கலியாணம் கட்டப் போறாங்கள். எப்பிடித்தான் இவளைக் கரை சேர்க்கப் போறனோ?”*

*முத்து அக்காவை நான் அரை நூற்றாண்டாக மறக்கா மல் இருக்கிறேன். அதனால்தான் இதை எழுதுகிறேன்.*

*இன்று முத்து அக்கா உயிரோடு இல்லை. கிளியை கல்யாணம் செய்ய எவருமே முன்வரவில்லை. அவள் தனது நாற்பதாவது வயதில் செத்துப் போனாள்.*

*அந்த முதலாளி?*

*சொல்கிறேன்*

***04.05.2018***

# எங்கள் ஊர் முதலாளி

*ஒரு காலத்தில் நகரத்தையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த ஆளுமை மிகுந்தவர் முதலாளி. எங்கள் துறைமுகப் பகுதியில் கடலின் ஆழம் போதாது, வணிகக் கப்பல்கள் அங்கு வர முடியாது என்ற நிலை இருந்த போது, துறைமுகத்துக்கு ஒரு மைல் தள்ளி வணிகக் கப்பல்களை நிறுத்திவிட்டு, படகுகளில் போய் பொருட் களை ஏற்றி, கரைக்கு கொண்டு வரலாம் என்று செய்து காட்டி பலருக்கு நகரத்தில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை முதலாளியினுடையது.*

*முதலாளிக்கு வணிகத்திறமை மட்டுமல்ல பெண்களை வசியப்படுத்தும் கலையும் நன்றாக வரும். முதலாளி யுடன் நெருக்கமாகப் பழகும் அவரது நண்பர்களுக்கு, குழந்தை பிறக்கும் போது, தங்களது குழந்தை முதலாளி யைப் போல இருந்து விடுமோ என்ற அச்சம் ஒட்டிக் கொள்ளும். அந்த விசயத்தில் எந்தப் பாகுபாடும் பார்க் காமல் உடல் உதவி செய்வதில் முதலாளி ஒரு கண்ணன்.*

*நகரத்தின் பெரிய கட்டிடமே முதலாளிக்குத்தான் சொந்தம். இலங்கை வங்கி, யாழ் கூட்டுறவு ஸ்தாபனம், குமார் அச்சகம்... என்று பல கடைகள் அந்தக் கட்டிடத்தில் இருந்தன. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையம் ஒன்றை அந்தக் கட்டிடத்திலேயே முதலாளியும் தன் பங்குக்கு நடத்திக் கொண்டிருந்தார். அந்தக் கட்டிடத்துடன் சேர்ந்து வடக்குப் பக்கமாக இரண்டு சின்னக்கடைகள் இருந்தன. அந்தக் கடைகளை அகற்றி, அதன் நிலத்தை வாங்கி தன் கட்டிடத்துக்கு மேலும்அழகூட்ட முதலாளி விரும்பினார்.*

*அந்தக் கடைகளில் ஒன்று யுனைற்ரெட் ஸ்ரோர்ஸ்*

*(புத்தகக் கடை), மற்றது ஜெமினி பன்ஸி பலஸ். இந்த இரண்டு கடைளையும் வல்வெட்டித் துறையைச் சேரந்த அண்ணன் தம்பிகளே நடத்திக் கொண்டிருந்தார்கள். வல்வெட்டித்துறையாரோடு நேரடியாக மோத முதலாளிக்குத் தயக்கமாக இருந்தது. எப்படியாவது அந்தக் கடைகளிலிருந்து அவர்களை வெளியேற்றி விட வேண்டும் என பல கணக்குகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டார். முதலாளி போட்ட கணக்கு சிக்கலாக இருந்தது. அடிமானங்கள் பல போட்டுப் பார்த்தும் அண்ணனும், தம்பிகளும் அசைந்து கொடுக்கவில்லை.*

*தனது அடியாட்களை விட்டு 'பீ முட்டி' அடித்தும் பார்த்தார். பீ முட்டி' என்றால் சிலருக்கு அது என்ன என்று புருவங்கள் மேலே எழலாம் என்பதால் அது பற்றிய ஒரு சிறு விளக்கம்.*

*அப்பொழுது வாளிக் கக்கூஸ்தான் பரவலாக வீடுகளில் இருந்தன. அப்படியான கக்கூஸ்களில் இருந்து பானை (முட்டி)க்குள் மலங்களை அள்ளி வந்து வேண்டப் படாதவர்கள் வீடுகளுக்கு முன்பாகவோ, கடைகளுக்கு முன்பாகவோ எறிந்து விட்டுப் போவதுதான் 'பீ முட்டி அடித்தல்' என்பது.*

*பீ முட்டி அடிக்கும் திருவிழா இரண்டு கடைகளுக்கும் முன்னால் ஒவ்வொரு இரவும் நடந்து கொண்டிருந்தன.*

*அண்ணன் தம்பி இருவரும் சளைக்காமல் கூலிக்கு ஆட்களைப் பிடித்து காலையில் கடைவாசலைத் துப்பர வாக்கி சாம்பிராணி காட்டி தங்கள் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.*

*ஒரு கட்டத்தில், பொறுமை இழந்து 'போதுமடா சாமி' என்று ஒதுங்க நினைத்தவர்களுக்குத் தொல்லை தந்து*

*கொண்டிருந்த பிரச்சனை ஒரு நாள் சிறைச்சாலைக்குப் போய் விட்டது.*

*முதலாளிக்கு கொஞ்சம் தமிழ்ப் பற்று இருந்தது. அவரின் இந்தத் தமிழ்ப்பற்றை ஆரம்பகாலப் போராளிகள் தங்கள் பக்கம் எடுத்துக் கொண்டார்கள்.*

*பத்மநாதன்(சுங்கான்) முதலாளியின் கட்டிடத்துக்கு அருகேதான் றேடியோ திருத்தும் கடை வைத்திருந்தார். அதற்கு அடுத்ததாக இருந்தது சிறீமுருகன் மெடிக்கல் ஸ்ரோஸ். அதன் உரிமையாளர், ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்தினத்தின் அண்ணன் கந்தசாமி. பத்மநாதனும், கந்தசாமியும் இணைந்து என்னென்ன செய்தார்கள் என்பது தெரியாது. ஆனால் தாங்களே கைத்துப்பாக்கிகளை உருவாக்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்கான பொருள் உதவிகள் முதலாளியிடம் இருந்து தான் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆயுதப் போராட்டம் பலமாக இருக்கும் போதே அச்சமில்லாமல் காட்டிக் கொடுக்க ஆட்கள் இருந்த போது, அன்றைய காலத்தில் ‘மொட்டைக் கடுதாசி’ எழுதிப் போட ஆளில்லாமல் போகுமா?*

*சுங்கான், அவரது கடை ஊழியரொருவர், கந்தசாமி இவர்களுடன் முதலாளியும் சிஐடி பஸ்ரியாம்பிள்ளை யின் விருந்தினர்களாக நாலாம் மாடிக்குப் போனார்கள். அதன்பிறகு புத்தகக் கடைக்கும் பன்ஸிக்கடைக்கும் பீ முட்டி அடிக்கப்படுவது நின்று போனது.*

*செல்வாக்குகளைப் பாவித்து கொஞ்சக் காலத்துக்குப் பிறகு பஸ்ரியாம்பிள்ளையின் விருந்தினர் மாளிகையில் இருந்து முதலாளி வெளியே வந்தார். ‘சிறை சென்று வந்த செம்மல்’ என்று குரல் எழுப்பிக் கொண்டே அவருக்கு மாலை போடப்போன அடிவருடிகள், “என்ன முதலாளி இப்பிடி புத்தர் மாதிரி அமைதியாப் போனார்”*

*என்று சலித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள்.*

*சிறைக்குப் போய்வந்த பின்னர் முதலாளி எந்தவித அடிதடிகளும் இல்லாமல் அமைதியாக இருந்து கொண்டு பிரபலமான மனிதர்களை தனது கட்டிடத்துக்கு அழைத்து விருந்தளித்து மகிழ்ந்து கொண்டிருந்தார். அப்போது நாட்டுக்கு வந்த சீர்காழி கோவிந்தராஜனை யும் அவர் விட்டு வைக்கவில்லை. அவரையும் தன் கட்டிடத்துக்கு கூட்டி வந்து விருந்தளித்தார். இவர் அவருக்கு பருகப் பால் கொடுக்க, அவர் இவரைப் பார்த்து, "அமுதும் தேனும் எதற்கு? நீங்கள் அருகினிலே இருக்கையிலேயே எனக்கு" என்று கணீர் குரலில் முதலாளியைப் பார்த்துப் பாட, முதலாளி உள்ளம் உருகிப் போய் நின்றார். தந்தை செல்வா, ஜி.ஜி பொன்னம்பலம் இருவரது மரண ஊர்வலங்களையும் அவர்களது கட்அவுட்டுகளை வைத்து நகரத்தில் வரலாறு காணாத இறுதி ஊர்வலங்களாக நடத்தி எல்லோரையும் வியக்க வைத்தார்.*

*„அட முதலாளிக்கு வேறுமுகமும் இருப்பது இது வரை தெரியாமல் போயிற்றே" என்று பலர் பேசிக் கொண் டார்கள். அப்படி நினைத்தவர்களுக்கு மட்டுமல்ல, யாருக்குமே தெரியாத ஒன்று முதலாளியின் மனதுக்குள் இருந்தது. 1977ல் நடக்க இருந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது, அதுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிடுவது என்பதே முதலாளியின் மனதிலிருந்த ஆசை. சிறைக்குப் போய் வந்திருக்கிறார். தமிழ் தலைவர்களின் இறுதி நிகழ்வுகளை முன்னின்று நடத்தியிருக்கிறார். பலருக்கு வேலை வாங்கித் தந்திருக் கிறார். போதுமான பணமும் மக்களிடத்திலான அறிமுக மும் நிறையவே இருக்கிறது. ஆகவே தேர்தலில் போட்டி யிடலாம் என்ற எண்ணம் அவருக்கு வந்ததில் தவறு இல்லைத்தான்.*

அவருக்குத்தான் அந்த முறை போட்டியிட வாய்ப்பு கூட்டணியில் இருப்பதாக நகரில் பேச்சு இருந்தது. ‘‘நீங்கள்தான் எங்களது வேட்பாளர்’’ என்று அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கமும் வாக்குக் கொடுத்திருந்தார். இருவரும் நெருக்கமாகவே இருந்ததார்கள்.

இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை. தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழமையான போட்டியாளர் க.துரைரத்தினத்துக்கே போய்ச் சேர்ந்தது. ஐந்து தடவை போட்டியிட்டு நாலு தடவைகள் வென்று பாராளு மன்றம் போய் வந்துகொண்டிருந்த க.துரைரத்தினத்தின் மேல் முதலாளிக்கு மட்டுமல்ல, பலருக்கும் அதிருப்தி இருந்தது. ஆனால் அதைப் பற்றி கூட்டணித் தலைமை கண்டு கொள்ளவில்லை.

அபிமானிகள் தந்த ஆலோசனையில் ‘உண்மையே வெல்லும்’ என்று சுயேட்சையாக போட்டியிட முதலாளி முடிவு செய்தார். தேர்தலில் போட்டியிட விண்ணப்பம் செய்துவிட்டு நகரத்தில் வடக்கே கடலைப் பார்த்துக் கொண்டிருந்த காந்திசிலைக்கு மாலைபோட்டு அபிமானி களோடு ஊர்வலமாக வந்தார். அவர் நடத்திய தேர்தல் கூட்டங்களில் மேடைகளில் கதிரைகள் எதுவுமே கிடை யாது. எல்லோரும் மேடைகளில் சப்பாணி போட்டே அமர்ந்தார்கள். முதலாளியின் பேச்சும்,செயலும் பலருக்கு பிடித்துப் போனது.

தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்று உதய சூரியன் சின்னத்தில் முதன் முதலாகப் போட்டியிட்டதாலும், இளைஞர்களிடையே அப்பொழுது இருந்த எழுச்சியும், மேடைகளிலே இரத்தப் பொட்டுகளை புன்னகையுடன் அமிர்தலிங்கம் வாங்கிக் கொண்டிருந்ததாலும் தேர்தலின்

முடிவு முதலாளிக்கு முரணாகவே போனது. அந்தத் தேர்தலில் முதலாளியால் 13 சதவீத வாக்குகளையே பெற முடிந்தது.

தேர்தல்முடிவுக்குப் பிறகு அரசியல்என்பது தன்னை விடப் பெரிய பெரிய முதலைகள் வாழும் இடம் என்பதை முதலாளி புரிந்து கொண்டார். வியாபாரம், ஆன்மீகம் இரண்டும் தனக்குப்போதும் இனி அரசியலில், அடிதடிகளில் எல்லாம் இறங்க முடியாது என்று ஒதுங்கி இருந்தவரை மீண்டும் பிரச்சினை தேடி வந்தது.

தனது கட்டிடத்தின் மேல் தளத்தில் இளைஞர்கள் கராட்டி பழகுவதற்கென முதலாளி இடம் ஒதுக்கிக் கொடுத்திருந்தார். ரட்ணசோதி என்பவரே அந்த கராட்டி வகுப்பை நடத்திக் கொண்டிருந்தார். இந்த ரட்ணசோதி தான் பின்னாளில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் கராட்டி சொல்லிக் கொடுத்தவர்

"போராளிகளுக்கு முதலாளியின் கட்டிடத்தில் பயிற்சி நடக்கிறது" என யாரோ ஒருவர் புலனாய்வுத்துறைக்கு மொட்டைக்கடுதாசி எழுதிப் போட ஒரு நாள் கட்டிடத் தைச் சுற்றி நிறைய அதிரப்படை.

அதிலிருந்து ஒருவாறு தன்னைக் காப்பாற்றிக் கொண் டாலும் கட்டிடத்தின் தெற்குப் பக்கமாக இருந்த அச்சகத்தால் அவருக்குப் பிரச்சனை வந்தது. அந்த அச்சகத்தின் உரிமையாளரின் தம்பிதான் கிட்டு என்கிற கிருஷ்ணகுமார்.

ஒரு இரவு அதிரடிப்படை இராணுவத்துடன் வந்து அச்சகத்தை தீ வைத்து முற்றாக அழித்து விட்டுப் போயிற்று.

*இதற்குள் மாணவர் பேரவை பகலிலேயே கட்டிடத்தின் மேற்குப் பக்கமாக இருந்த இலங்கை வங்கியை கொள்ளையடித்து காவலுக்கு நின்ற ரிசேர்வ்பொலிஸை சுட்டுக் காயப்படுத்தி விட்டும் போனது.*

*கட்டிடத்தின் மேலே கராட்டிப் பிரச்சினை, தெற்கே அச்சகப் பிரச்சினை, மேற்கே வங்கிக் கொள்ளை. முதலாளிக்கு ஒன்று விளங்கி விட்டது. அரசியலும், வியாபாரமும் இனிவரும் காலங்களில் தனக்கு சரிப்பட்டு வராது என்று. அரசியலும், வியாபாரமும் காலைவாரி விட அடுத்து அவரது கையில் இருந்தது ஆன்மீகம் மட்டுமே. இவ்வளவு பிரச்சினைகளுக்குள் முதலாளி சிக்குண்டு இருக்கையில் அவரது மகன் போராட்டக் குழுவில் போய் சேர்ந்து விட்டான்.*

*இந்திய அமைதிப்படை முற்று முழுதாக நகரத்தை ஆக்கிரமித்திருந்த பொழுது, சமூகத்தில் மேல்நிலையில் இருந்தவர்களோடு அவர்கள் தங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களின் தொடர்பில் முதலாளியும் இருந்தார்.*

*முதலாளி இந்தியப்படைக்கு, போராளிகளைப் பற்றி தகவல்கள் கொடுக்கிறார் என்று யாரோ புண்ணியவான் கதையைக் கிளப்பிவிட முதலாளியின் நிலை கவலைக் கிடமாகிப் போனது. வெளிநடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்.*

*முதலாளிக்கு வேண்டிய ஒருவர் காலமாகிப் போன பொழுது தனது அஞ்ஞாதவாசத்தைத் துறந்து, அந்த மரண வீட்டுக்குப் போனார். அந்த மரண வீட்டுக்கு அவரது மகன் சைக்கிளில் வந்தான். போராடப் போன மகன் நீண்ட நாட்களுக்குப் பின் தன்னை வந்து சந்தித்ததில் முதலாளிக்கு மகிழ்ச்சி.*

*“அப்பா, உங்களோடை கதைக்கோணும். வாங்கோ” என்று சைக்கிளில் முதலாளியை ஏறச்சொன்னான்.*

*“போட்டு இப்ப வந்திடுறன்” என்று முதலாளி சொல்லிப்போட்டுப் போனதால் உடலத்தை எடுக்காமல் முதலாளிக்காக எல்லோரும் மரண வீட்டில் காத்துக் கொண்டிருந்தார்கள்.*

*“என்ன போனவரை இன்னும் காணேல்லை” என்ற படி காத்திருந்தவர்களுக்கு சற்று நேரத்துக்குப் பின் ஒரு செய்தி வந்தது.*

*“முதலாளி செத்துப் போனார்”*

*ஏற்கெனவே தோண்டியிருந்த கிடங்குக்குள் படுக்கச் சொல்லி விட்டு, அவரை அவரது மகனே சுட்டான் என்று ஒரு கதையும், மகன் கூட்டிக் கொண்டு போனது மட்டும்தான், முதலாளியைச் சுட்டது வேறையொரு போராளி என்று இன்னொரு கதையுமாக ஊருக்குள் இரண்டு கதைகள் வந்தன.*

*முதலாளி முதலாளி என்று மரியாதையாக இந்தப் பத்தியில் நான் எழுதியதால் அவரது பெயரை இங்கே நான் விழிக்கவில்லை.தேர்தலில்வென்று பாராளுமன்றம் போகா விட்டாலும் அவரது பெயருக்கு முன்னால் M:P (மு.பொ)என்ற முதலெழுத்துக்கள் எப்போதும் இருந்தன.*

***06.05.2018***

# வடையும் மோதகமும் அண்ணன் தம்பிகள்

*சூசை ஒரு Bci பட்டதாரி. அந்தப் பட்டப் படிப்பு க்காக அவன் பல்கலைக்கழகம் எங்கும் போகவில்லை. அந்தப் பட்டத்திற்கான தகுதியை அவன் சினிமா தியேட்டர் களில் இருந்துதான் பெற்றுக் கொண்டான்.*

*பருத்தித்துறை சென்றல், நெல்லியடி மகாத்மா, லக்சுமி, வல்வெட்டித்துறை யோகநாயகி, புலோலி காசில் தியேட்டர்கள்தான் அவனை (Bachelor ofCinema) பட்டம் பெறவைத்த முக்கிய கூடங்கள். எவ்வளவு கேவலமான படங்களாக இருந்தாலும் முதல்நாள் முதல் காட்சியில் பிரதம விருந்தினராக சூசை இருப்பான். அவனிடம் சினிமா சம்பந்தமாக எது கேட்டாலும் பதில் கிடைத்து விடும்.*

*அறுபதுகளின் பிற்பகுதியிலேயே வானொலியில் பாடல் களை ஒலிபரப்பும் போதே அதை எழுதியவர், இசை அமைத்தவர், பாடியவர்கள் விபரங்களையும் சேர்த்தே இலங்கை வர்த்தக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் அறிவிக்கும் நிலை வந்துவிட்டது. இங்கு நான் சொல்ல வருவது அதற்கு சற்றுமுந்தியது.*

*அப்பொழுது திரைப்பட இசையமைப்பாளர்கள் பலர் இருந்தாலும், கே.வி.மகாதேவன், விஸ்வநாதன்-ராம மூர்த்தி ஆகியோரே முன்ணணியில் இருந்தார்கள். பாடல்கள் இனிமையாக இருக்கும் ஆனால் அதை யார் இசையமைத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. எனது இந்தப் பிரச்சனையை சூசையிடம் சொன்னேன். சற்றும் யோசிக்காமல் அவன் பதில் தந்தான்,*

"பாட்டு தொடங்கைக்கேயே 'டும் டும்' எண்டு மேளச் சத்தம் கேட்டால் அது கே.வி.மகாதேவன் பாட்டு. மேளச் சத்தம் கேக்கேல்லையோ அப்பிடி எண்டால் அது விஸ்வநாதன்-ராமமூர்த்தி பாட்டு"

நான் மேலே சொன்ன இசையைப்பாளர்கள் இசை யமைத்த ஏதாவது ஒன்று இரண்டு பாடல்களை கேட்டு விட்டுச் சொல்லுங்கள். சூசையின் சினிமா அறிவு உங்களுக்கும் தெரிந்து விடும்.

மகாத்மா தியேட்டருக்கு அருகே இருக்கும் தேநீர் கடையில் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் பொரித்த மோதகம் சூசைக்கு மிகவும் விருப்பமானது. படத்துக்கான ரிக்கெற்றை வாங்கிக் கொண்டு நேராக தேநீர் கடைக் குத்தான் முதலில் போவான்.

பொரித்தமோதகத்தையும் பிளேன்ரீயையும் உள்ளே தள்ளிவிட்டால் அடுத்து அவனுக்குத் தேவையானது ஒரு *Sportsman* சிகரட். எல்லாவற்றிற்கும் நேரம் கணித்து வைத்தே அவன் நடந்து கொள்வான். சிகரெட் எரிந்து பில்டர் வரை வந்து அதை கட்டை, சுண்டு விரல்களின் நுனியில் பிடித்து கடைசி இழுப்பு இழுத்து அவன் புகை விடும் அதே நேரம் படம் தொடங்கு வதற்கான மணி அடிக்கும். தியேட்டருக்கு உள்ளே போனால் தியானத்தில் இருப்பது போல் ஆடாமல் அசையாமல் அப்படியே படத்துடன் ஒன்றி விடுவான். ஆனால் அவன் வாய் மட்டும் அகலத் திறந்திருக்கும்.

நானும் அவனுடன் சில தடவைகள் படத்துக்குப் போயிருக்கிறேன். தன்னுடன் படம் பார்க்க வருபவருக்கு அவனே படத்துக்கான ரிக்கெற்றுக்கு பணம் கொடுத்து விடும் நல்லகுணம் அவனிடம் இருந்தது. ஆனாலும் அவனிடம் ஒரு குறை இருந்தது. படம் முடிந்து வரும்

போது அவனை வைத்து சைக்கிள் ஓட வைத்து விடுவான். அத்தோடு சைக்கிளின் பாரில் இருந்து கொண்டு, வேதாளம் கதை சொல்லி விட்டு விக்கிரமாதித்தனிடம் கதை பற்றி ஏதாவது கேள்வி கேட்குமே அதேபோல படத்தை பார்க்க வைத்து விட்டு அது பற்றி கேள்விகள் கேட்டுக் கொண்டே வருவான். சாதாரணமான நிலையில் அவனது கேள்விகளுக்குப் பதில் கொடுத்து விடலாம். அவனை வைத்து சைக்கிள் ஓடும் போது அதுவும் நெல்லியடியில் இருந்து மாலிசந்திவரை உள்ள வயல் வெளியில் எதிர்க் காற்றில் எம்பி எம்பி பெடலை உழக்கும் போது அவனது கேள்விகளால் மண்டை உடைந்து சுக்கு நூறாகச் சிதறி விடும். ஒருதடவை அப்படியான சூழலில் நான் வேதாளமாக மாறி அவனுக்கு ஒரு கதை சொல்லத் தொடங்கினேன்.

இற்றைக்கு ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகள் கடந்து போன கதை அது.

பருத்தித்துறை நகரில் உள்ள தேனீர்க்கடை ஒன்று நித்திரை கொள்ளாது. சினிமா இரண்டாம் காட்சி பார்த்து விட்டு வருபவர்கள், கடற்தொழிலாளர்கள், மற்றும் பருத்தித்துறையின் கிழக்குப் பக்கமாக இருந்து மாட்டு வண்டிகளில் விறகு, தேங்காய், தென்னோலை, அலம்பல் கட்டிக் கொண்டு அதிகாலையில் நகரத்துக்குள் நுழையும் வியாபாரிகள், காலையில் முதல் பஸ் பிடிக்க வருபவர்கள் போன்றவர்களுக்காகவே அந்தக் கடை உறங்குவதில்லை.

நான் சொல்லும் கடையின் வாரிசுகள் புலம்பெயர்ந்து ஐரோப்பியா அல்லது கனடாவில் கண்டிப்பாக இருப் பார்கள். ஆகவே என் நலன் கருதி கடையின் பெயரை இங்கே தவிர்த்து விடுகிறேன். கடையில் ஒரு கண்ணாடிப் பெட்டி, அதனுள்ளே மெது வடைகள்,

அவைகள் காலையில் நகருக்குள் நுழையும் வண்டி வியாபாரிகளுக்காக காத்திருக்கும்.

“தம்பி, ஒரு பிளேன் ரீயும் இரண்டு நூல் வடையும் தா”

அதிகாலையில் வியாபாரிகள் நூல் வடையை ரசித்து சாப்பிட்டுக் கொண்டே, யார் யார் எந்தத் திசையில் போய் வியாபாரம் பார்ப்பது என்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொள்வார்கள். கடையை விட்டு வெளி யேறும் போது தங்கள் தங்கள் குடும்பங்களுக்கும் நூல் வடைகளை மறக்காமல் வாங்கிக் கொள்வார்கள். அநேகமாக நூல் வடைகள் எல்லாவற்றையும் அந்த வியாபாரிகள், அதிகாலையிலேயே முடித்து விடுவார் கள். சில வேளைகளில் அவர்கள் வரும் போது நூல் வடைகள் கடையில் இல்லாமல் போனால், “சரி, அடுத்த முறை பாப்பம்” என்று தங்களைத்தாங்களே சமாதானம் செய்து கொள்வார்கள். அந்தளவிற்கு அவர்கள் நூல் வடைப்பிரியர்கள்.

இந்தக் கதையைத்தான் சைக்கிள் ஓட்டிக் கொண்டே சூசைக்கு அன்று நான் சொன்னேன்.

“இப்ப இதை ஏன் எனக்கு சொல்லுறாய்?”

“நெல்லியடியிலை நீ சாப்பிடுற பொரிச்சமோதகம், முதல்நாளோ இல்லாட்டில் அதுக்கு முதல் நாளோ மிஞ்சிப்போனதா இருக்கலாம். புதுசா எண்ணையிலை போட்டு பொரிச்சு எடுத்து வைச்சிருப்பாங்கள்” நான் சொன்னதைக் கேட்டு, சூசை தனது வாய்க்கு இடை வேளை அறிவித்து விட்டான். அத்தோடு, என்னுடன் படத்துக்கு வருவதையும் அன்றோடு தவிர்த்து விட்டான்.

*இந்தச் சம்பவத்தை நான் வெளியே சொல்லப் போக, ஆளாளுக்கு சூசையைக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். படம் பார்த்து விட்டு, யாராவது சூசையை வைத்து சைக்கிள் ஓட்டும் போது, சூசை ஏதாவது கேட்டால், "ஏன் சூசை பொரிச்ச மோதகம் முதல்நாள் மிஞ்சினது எண்டு சொல்லுறாங்கள் உண்மையோ?" என்று சொன்னால் போதும் சூசை அமைதியாகி விடுவான்.*

*அவனுக்கு 'சூசைதாசன்' என்று அவனது தந்தை மார்டின் வைத்த பெயர் நாளடைவில் மறைந்து போய் PM (Poricha Mothagam) என்ற பெயர் நிலைத்து விட்டது.*

*சூசைக்கு என்மேல் கோபம் இருந்ததை நான் அறிவேன். அதை அவன் காட்டிக் கொள்ளவில்லை. நானும் கண்டு கொள்ளவில்லை.*

*ஆங்கிலப் படங்களுக்காக அப்பொழுது மாலையில் நாலு மணிக்கும் காட்சி இருக்கும். பாடசாலை முடிய பிரத்தியேக வகுப்பு என்று போகும் மாணவர்களை குறிவைத்து அந்தக் காட்சி இருக்கும். Adults only என்று போட்டிருப்பார்கள். ஆனாலும் தாராள மனதுடன் மாணவர்களான எங்ளையும் படம் பார்க்க அனுமதிப்பார்கள். ஒரு தடவை முக்கியமான வகுப்பு இருந்ததால் புதுப் படம் ஒன்றுக்கு நாலு மணிக் காட்சிக்கு எங்களால் போக முடியவில்லை. படம் பார்த்து விட்டு வந்து கொண்டிருந்த சூசையிடம் „படம் எப்பிடி?" என்று கேட்டோம்.*

*"அநேகமா உங்களை உள்ளை விட மாட்டாங்கள். அந்த மாதிரிக் காட்சி எல்லாம் இருக்கு. நானே கஸ்ரப் பட்டு, கெஞ்சிக் கூத்தாடித்தான் உள்ளை போனனான். இன்னுமொருக்கால் படத்தைப் பாக்கோணும். இப்ப*

*வேலை ஒண்டு இருக்கு. செக்கன்ட் ஷோவுக்கு கட்டாயம் வந்து பாப்பன்" எங்களுக்குப் படம் பார்க்கும் ஆசையை உண்டாக்கி விட்டு சூசை போய்விட்டான்.*

*நேரம் கழித்து வீட்டுக்குப் போனால் ஏதாவது சாட்டுச் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்ற துணிவோடு தியேட்டருக்குள் நுளைந்து விட்டோம். படம் ஓடிக் கொண்டிருந்தது. படத்தில் கிளுகிளுப்பான காட்சிகள் எதையுமே காணவில்லை. படம் முழுதும் கதைத்துக் கொண்டே இருந்தார்கள். மொழி தெரிந்தால்தானே கதை விளங்க. இதோ வரும், அதோ வரும் என்று ஒன்றரை மணித்தியாலமும் போய் விட்டது. படம் முடிந்து வெளியே வந்தால், சூசை சைக்கிளில் சாய்ந்த படி தியேட்டர் வாசலில் நிற்கிறான்.*

*"படம் எப்பிடி? நான் பட்ட துன்பம் மற்றையவையளும் பட வேண்டாமோ, அதுதான்.."*

*பொரித்த மோதகத்துக்காக. சூசை எங்களைப் பழி வாங்கி விட்டது விளங்கியது.*

*மூன்று வருடங்களுக்கு முன்னர், சூசையப்பர் பங்குனி திருவிழாவுக்கு தேவாலயத்தைச் சுத்தம் செய்யும் போது ஏணியில் இருந்து தவறிக் கீழே விழுந்து முதுகெலும்பு உடைந்து சூசை இப்பொழுது படுக்கையில் இருக் கிறான். ஆனாலும் தன் முயற்சியில் சிறிதும் மனம் தளராமல், பார்த்த படங்களென்றாலும் படுக்கையில் இருந்து கொண்டே அவற்றையெல்லாம் மீண்டும் மீண்டும் ரிவியில் போட்டு சலிக்கமல் பார்த்துக் கொண்டிருக்கிறானாம்.*

***24.03.2018***

# பார்க்காதே பார்க்காதே

*புலம்பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்த பொழுது "நாட்டுக்கே திரும்பிப் போய்விடலாமா?" என்ற நினைப்புதான் ஓங்கி நின்றது. குளிர் ஒரு காரணமாக இருந்தது என்றாலும், குளிரில் வரும் நடுக்கத்தை விட டொச் மொழியை கேட்கும் போது ஏற்பட்ட உதறல் அதிகமாக இருந்தது.*

*ஜேர்மனியர்கள் கதைக்கும் வார்த்தைகளுடன் 'ஸ்ஸ்ஸ்' என்று காற்று வரும் பொழுதெல்லாம் என்னுள் இருந்து தன்னம்பிக்கைக் காற்று தானாக வெளியேறிக் கொண்டிருக்கும்.*

*"என்ன பாஷை இது. தமிழுக்கு வசப்பட்ட நாக்கு டொச்சுக்கு பிரளமாட்டுதாம்" என்னுடன் ஊரில் இருந்து யேர்மனிவரை கூட வந்த ரத்தினம் இப்படி என்னுடன் அடிக்கடி சலித்துக் கொண்டிருப்பான்.*

*ரத்தினம் என்னைவிட இரண்டு வயது இளமை யானவன். அவனது தமையன் சந்திரன் என்னுடன் ஒன்றாகப் படித்தவன். நான் ஜேர்மனிக்கு வெளிக்கிடப் போகிறேன் என்று கேள்விப் பட்டு, "தம்பியையும் உன்னோடு ஜேர்மனிக்குக் கூட்டிக் கொண்டு போ மச்சான்" என்று ரத்தினத்தையும் என்னுடன் சேர்த்து விட்டான்.*

*எங்களது பயணம் எயார் பிரான்ஸில் தொடங்கியது. பரிஸில் இடைத்தங்கல். அங்கிருந்து கிழக்கு ஜேர்மனி சென்று பின்னர் ரெயின் எடுத்து மேற்கு ஜேர்மனி புகுந்து அரசியல் தஞ்சம் கேட்பதாகத் திட்டம். பயணத்தின் போது விமானத்தில் இன்னும் இரண்டுபேர் எங்களுடன் ஒட்டிக் கொண்டார்கள். பரிஸில் இறங்கி*

கிழக்கு ஜேர்மனிக்குப் பறப்பதற்கு விமானத்தில் ஏறுவதற்காகச் சென்றுகொண்டிருக்கும் போது, எங்கள் நான்கு பேரையும் பிரான்ஸ் காவல்துறையினர் பிடித்துக் கொண்டார்கள்.

முதலில் எங்களிடம் இருந்த கடவுச்சீட்டுக்களை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். பிறகு நீண்ட தூரம் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

“எங்கையண்ணை கூட்டிக்கொண்டு போறாங்கள்?” ஒட்டிக் கொண்டவர்களில் ஒருவன் என்னிடம் கேட்டான். திருப்பி நாட்டுக்கு அனுப்பி விடுவார் களோ என்ற பயம் அவனிடம் தெரிந்தது. அந்தப் பயம் அவனுக்கு மட்டுமல்ல எனக்கும் கூட இருந்தது. நான் வாய்திறப்பதற்கு முன்னர் ரத்தினம் முந்திக்கொண்டு அவனுக்குப் பதில் கொடுத்தான்.

“பார்த்தியா, முன்னுக்கும் பின்னுக்கும் பொலீஸ்காரர்கள் வர, சனங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்க பிரான்ஸ் எயர்போட்டிலை அழைச்சுக் கொண்டு போறாங்களே, இதுதான் இராஜமரியாதை. இப்பிடியே திருப்பி சிறிலங்காவுக்கு அனுப்பினாங்கள் எண்டால், லலித் அத்துலக்முதலியே நேரிலை வந்து இதை விட அமோகமான ஒரு பெரியவரவேற்பை அங்கை தருவார்”

என்ன நடக்கிறது என்று தெரியாமல் பயந்தபடி நடந்து கொண்டிருக்கும் போது ரத்தினத்தின் அந்தப் பேச்சு சூழ்நிலையின் அழுத்தத்தைக் கொஞ்சம் குறைத்தது.

இறுதியாக ஒரு அறைக்குள் கொண்டு போய் விட்டார் கள். என்ன கேட்டாலும் அவர்கள் எங்களுக்காக வாயைத் திறக்கவேயில்லை. அதிலும் மறந்தும் ஆங்கிலத் தில் ஒரு வார்த்தைகூட அவர்களிடம் இருந்து வரவே

இல்லை. தங்களுக்குள் பிரெஞ்சில் கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

எங்களை அழைத்து வந்தவர்கள் காவலுக்கு நிற்க மேலும் இரு போலீஸ்காரர்கள் உள்ளே வந்தார்கள். வந்தவர்கள் எங்களுடன் பயணித்த ஒருவனை அழைத் துச் சென்றார்கள். பதினைந்து நிமிடங்கள் போயி ருக்கும். கூட்டிக்கொண்டு போனவனை கொண்டு வந்து விட்டுவிட்டு மற்றவனை அழைத்துப் போனார் கள். முதலில் போய் வந்தவன் எதையோ இழந்து விட்டவன் போல முகத்தில் கவலையோடு காணப் பட்டான். ரத்தினம் அவனருகில் போய் தனது பார்வையால் விசாரித்தான்.

“உடுப்பெல்லாம் கழட்டிப் பார்த்தாங்கள்”மிகுந்த கவலை அந்த இளைஞன் முகத்தில் தெரிந்தது.

“எதைப் பார்த்தாங்கள்?”

ரத்தினம் அந்த இளைஞனை விசாரிப்பதைப் பார்த்த ஒரு பொலீஸ்காரன் இளைஞனிடமிருந்து ரத்தினத்தை பிரித்து வைத்தான். திரும்பி வந்த மற்றைய இளைஞனும் ஏறக்குறைய முதலாவது இளைஞனைப் போலவே முகத்தை வைத்திருந்தான். இப்பொழுது எனது முறை.

இருவர் இருந்த அறையில் நின்றேன். உடுப்புகள், சப்பா த்துக்களை எல்லாம் கழட்டச் சொல்லி சைகையால் காட்டினார்கள். அவர்கள் முதலில் உடுப்பு, சப்பாத்துக் களை தடவி, தட்டி எல்லாம் பார்த்தார்கள். அடுத்ததாக எனது உடம்புக்கு வந்தார்கள். தலைதொட்டு உள்ளங் கால் வரை எல்லாம் ஆராய்ந்தார்கள். பிறகு குனி என் றார்கள். குனிந்தேன். அவர்களுடைய ‘டோர்ச் லைற்’ றின் வெளிச்சம் என்னுடைய விம்பத்தை அறைச்சுவரில்

*காட்டியது. மீண்டும் சைகயால் உடுப்பைப் போடு என்றார்கள்.*

*எண்பதுகளில் நன்றாக பொதியிட்டு, பாகிஸ்தானில் இருந்து மலவாசலுக்குள் வைத்து ஐரோப்பிய நாடு களுக்குப் போதைப் பொருட்கடத்தல் நடந்து கொண்டி ருந்ததுதான் எங்களை விமானநிலையத்தில் தடுத்து. வைத்ததற்கும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த சோதனைக்குமான காரணம்.*

*இப்பொழுது ரத்தினத்தின் முறை. எதற்காக அழைத்துப் போகிறார்கள் என்பதில் அவனுக்குத் தெளிவு இருந்தது. சிரித்தபடியே அவர்களுடன் போனான். ஐந்துநிமிடங்கள் கூட ஆகி இருக்காது. போனவன் அதே சிரிப்புடன் திரும்பி வந்தான்.*

*“எங்களுக்கெல்லாம் பதினைந்து நிமிசங்கள் எடுத்தது. அதெப்படி உன்னை உடனேயே விட்டிட்டாங்கள்?”*

*“இப்பிடி ஒரு சூத்தை பிரெஞ்சுக்காரன் ஒருநாளும் கண்டிருக்க மாட்டான். வாழ்க்கையிலை இனி ஒருத்த னின்ரை சூத்தையும் பார்க்கவே மாட்டான்”*

*இப்பொழுது ரத்தினம் நான் இருக்கும் இடத்தில் இருந்து அறுபது கிலோ மீற்றர் தூரத்தில்தான் வசிக்கிறான். எனக்கும் அவனுக்குமான தொடர்புகள் குறைந்து குறைந்து இன்று இல்லாமலேயே போய் விட்டது. ஆனால் அவனது நினைவுகள் என்னுடன் இன்றும் இருக்கின்றன.*

***10.03.2018***

# பெண் பார்க்கப் போறேன்

*அவர் ஒரு அங்கீகாரம் பெற்ற சீட்டுப் பிடிப்பாளர். சொந்தமாக கார், அதை ஓட்டுவதற்கு ஒரு ஆள், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர எடுபிடிகள் என எல்லாமே அவரிடம் இருந்தன. அத்தோடு முக்கியமாகப் பல பெண்களும் அவருக்கு நெருக்கமாக இருந்தார்கள். ஒருநாள், தனது குடும்பத்தார், நெருக்கமானவர்கள், எடுபிடிகள், பழகிய பெண்கள், சேர்த்து வைத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மாரடைப்பு வந்து தனியாளாகச் செத்துப் போனார்.*

*தந்தையின் இறப்புக்குப் பின் அவரது மூத்தமகன் கோபாலகிருஸ்ணன் அரியணை ஏறினான். தகப்பனைப் போலவே எடுபிடிகளுடன் மகனும் தொழிலை நடத்தத் தொடங்கினான். மிக விரைவிலேயே தந்தையை விட அதிதீவிரமாகப் பல பெண்களோடு நெருக்கமானான். தொழிலை விரிவாக்க, நகரத்தில் அடைவுக் கடை ஒன்றையும் பகவான் கிருஷ்ணர் பெயரில் தொடங் கினான்.*

*சீட்டுக்காசை நேரத்துக்கு கட்ட முடியாத பெண்கள், அவனை நேரில் சந்தித்து கண்ணீர் கசிந்தால் போதும். நெஞ்சுருகி, மனம் வருந்தி, "ஒரு பிரச்சினையும் இல்லை. அடுத்த மாசம் சேர்த்துக் கட்டுங்கோ" என்று ஆறுதல் சொல்வான்.*

*சீட்டுக் கட்டுவதில்தான் இந்த நிலை என்றில்லை. அடகுக் கடையிலும் ஒரு விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. நகை அடகுவைத்து பணம் எடுக்கும் பெண்கள், "அண்ணா, ஒருஅவசரம். ஒரு கலியாண வீடொண்டுக்குப் போகோணும். இண்டைக்கு ஒருநாள் அடகு வைச்ச நகையைத் தந்தால், கலியாண*

வீட்டுக்குப் போட்டிட்டு காலைமை முதல் வேலையா கொணர்ந்து தந்திடுவன்'' என்று விண்ணப்பம் வைத் தால், மனது இளகி விடுவான்.

அதற்கான காரணம், பெண்கள் அவனை 'அண்ணா.. அண்ணா..' என்று அழைக்கும் போது அவனுக்கு மட்டும் அது 'கண்ணா.. கண்ணா..' என்று கேட்கும். அதனால் தான் மறுபேச்சு இல்லாமல் கருணைமிகுந்து நகைகளை அவர்களிடம் கொடுத்து விடுவான்.

கோபாலகிருஷ்ணனின் தாய்க்கு கவலை பிடிக்க ஆரம்பித்து விட்டது. தந்தை குடும்பமாக இருந்து கொண்டுதான் அவ்வப்போது வெளியே சாப்பிடப் போய்க் கொண்டிருந்தார். மகனோ வெளிச் சாப்பாட்டி லேயே விழுந்து கிடந்தான்.

அதற்கான தீர்வு ''கல்யாணம் கட்டிவை'' என்று நெருங்கியவர்கள் ஆலோசனை சொல்ல, கோபால கிருஸ்ணனுக்கு வசதியான குடும்பத்தில் அவனது தாய் திருமணம் செய்து வைத்தார்.

புதுப் பெண்டாட்டியோடு, கோபாலகிருஸ்ணனுக்கு வாழ்க்கை இனிக்க ஆரம்பித்து விட்டது. தனது எடுபிடி களிடம் வேலைகளை எல்லாம் பகிர்ந்து கொடுத்துவிட்டு மனைவியோடு அந்தப்புரத்தில் உல்லாசமாக இருக்க ஆரம்பித்தான்.

''உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை'' என்பார்கள். சீட்டுக்களுக்கான காசுகள் சரியாக வந்து சேரவில்லை. அடகு கடையிலும் திருப்பித் தருகிறோம் என்று வாங்கிய நகைகள் பல வராமலேயே போயின. எடுபிடிகள் மெதுமெதுவாக குட்டி முதலாளிகளாக உருவெடுக்க ஆரம்பித்தார்கள். அதில் ஒரு எடுபிடி

தானும் ஒரு சீட்டுப் பிடிப்பாளனாகவே மாறிப் போனான்.

அநேகமாக முழுவதுமாக எல்லாம் சுரண்டப் பட்டதுக்குப் பின்னரே கோபாலகிருஸ்ணனுக்கு  நிலைமை புரிந்தது.

முதலாளிக்கு விபரம் போய் விட்டது என்பது தெரிந்த போது, இனி இருப்பது பயனில்லை என்பதைப் புரிந்து கொண்ட எடுபிடிகள் சுருட்டியதோடு காணாமல் போனார்கள்.

அவர்கள் எல்லோரும் எங்கே போய் ஒளிந்தார்கள் என்று தேடிப்பார்க்கக் கூட கோபாலகிருஸ்ணனிடம் இப்பொழுது காரும் இல்லை அதை ஓட்டுபவரும் இல்லை.

கோபாலகிருஸ்ணனின் வீட்டில் சீட்டுக்கு பணம் கொடுத்தவர்களின் முற்றுகை ஆரம்பமாயிற்று. ஆளா ளுக்கு ஏதாவது ஒரு பதிலைச் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் இரவு, மனைவியை மட்டும் விட்டு விட்டு எடுபிடிகள் போல் அவனும் காணாமல் போய்விட்டான்.

ஒவ்வொருநாளும் வீட்டுக்கு முன்னால் திரளும் கூட்டம் தரும் அரச்சனைகளைத் தாங்க முடியாமல் கோபால கிருஸ்ணனது மனைவி தன் தாய்வீட்டுக்குப் போய் விட்டாள்.

சீட்டுக் கட்டி பணத்தை இழந்தவர்கள் மட்டுமல்ல சீட்டுத் தவணைக்கு பணம் கட்டாமல் ஏய்த்தவர்களும் கோபாலகிருஷ்ணனைப் பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

“கொழும்புக்கு ஓடிட்டான்” என்றொரு கதை வந்தது.

*“இல்லை இல்லை அவன் கொழும்புக்கு ஓடியிருக்க மாட்டான். இந்தியாவுக்குப் போயிருப்பான்”ஒரு சிலர் மறுதலித்தனர்.*

*“அவன் கொழும்புக்கும் போகேல்லை. இந்தியாவுக்கும் போகேல்லை. அவன்ரை மனுசி வீட்டிலைதான் பதுங்கி இருப்பான்” பலரின் கருத்து இப்படி இருந்தது.*

*“அதுதான் சரியா இருக்கும். அவனாலை பெண்சாதியை விட்டுட்டு ஐஞ்சு நிமிசம் கூட இருக்கேலாது. எல்லா ருக்கும் போக்குக் காட்டுற போலை, மனுசியை தன்ரை வீட்டிலை இருக்க விட்டுட்டு அவன் போய் மனுசி வீட்டிலை ஒழிச்சிருப்பான். பேந்து மனுசியும் அவ னோடை போய்ச் சேர்ந்திட்டாள்”*

*“அவன்ரை மனுசி வீட்டை சரியா நோட்டம் விட்டால். அவனை கோழிக்குஞ்சு பிடிக்கிற மாதிரி அமத்திப் போடலாம்”*

*பலர் இப்படி ஆளாளுக்குப் புலம்பித் திரியும் போதுதான் இந்தப் பத்திக்குள் ஒரு அப்பாவியாக நான் உள்ளே நுளைகிறேன்.*

*கோபாலகிருஷ்ணனின் மனைவியின் தம்பி என்னைச் சந்திக்க வந்ததில் இருந்து என் பங்கு இங்கே ஆரம்பமாகிறது.*

*“ஒருக்கால் தன்னை வந்து சந்திக்கச் சொல்லி உங்களிட்டை அக்கா சொல்லச் சொன்னவ”*

*கோபாலகிருஷ்ணனுடன் எனக்கு நல்ல பழக்கம் இருந் திருக்கிறது.*

அவனது வீட்டுக்குப் போயிருந்த பொழுதுகளில் அவனது மனைவியைப் பார்த்திருக்கிறேன். அமைதியான, அடக்கமான, வெள்ளையான, அழகான பெண் அவள்.

கணவன் எங்கே இருக்கிறான் என்று தெரியாத நிலையில் எதற்காக என்னை வந்து சந்திக்கச் சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறாள்?

இப்பொழுது உங்களிடம் எழும் கேள்விகளைப்போலவே என்னுள்ளும் அன்று பல கேள்விகள் பிறந்தன.

அன்று மாலையே கோபாலகிருஷ்ணனின் மனைவியை அவளது வீட்டில் தனியாகப் போய்ச் சந்தித்தேன்.

என்னிடம் கேட்பதில் ஒரு கூச்சம் இருப்பது அவளது வார்த்தைகளின் தடுமாற்றத்தில் தெரிந்தது. தயக்கத் துடன் நிலத்தைப் பார்த்தபடியே என்னுடன்கதைத்தாள். அவள் என்னிடம் அப்படிக் கேட்ட போது எனக்கு கொஞ்சம் திகைப்பாகத்தான் இருந்தது. ஊருக்குத் தெரிந்தால், என்னை எல்லோரும் பிடித்து உதைப் பார்களே என்ற பயமும் சேர்ந்து கொண்டது.

ஆனாலும் அவளது நிலையை நான் உணர்ந்திருந்ததால், அவள் அப்படிக் கேட்ட பொழுது என்னால் அன்று அதை மறுக்க முடியவில்லை.

தெரிந்தவர் ஒருவர் ஒருநாள் வீதியில் என்னை மறித்தார். அவருக்கு எனது தந்தை வயதிருக்கும்.

“செல்வா, நீ பயங்கரமான ஆளடா. பாத்தால் அப்பாவி மாதிரி இருக்கிறாய். வேலையைக் காட்டிட்டாய்”

எனக்கு அவர் சொன்னதன் அர்த்தம் விளங்கவில்லை.

*"என்ன முழிக்கிறாய்? அறைக்குள்ளை நடந்தாலும் அம்பலத்துக்கு வராமல் போகுமே?" அவரது பேச்சில் ஏளனம் தெரிந்தது.*

*"நீங்கள் என்ன சொல்ல வாறீங்கள் என்று சத்தியமா எனக்கு விளங்கவேயில்லை"*

*"டேய்..டேய் சும்மா சுத்தாதை. கோபாலகிருஷ்ண னின்ரை பெண்சாதி நேற்று, வயித்தைத் தள்ளிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துட்டுப் போறாளாம். கோபாலகிருஷ்ணனும் ஊரிலை இல்லை. நீதானே இராப் பகலா அவளை காரிலை ஏத்திக் கொண்டு திரியிறியாம்" சொல்லும் போதே அவரது இடது கண் சிமிட்டியது.*

*இப்படி நடந்து விடும் என்று முன்னரே நான் கணித் திருந்தால், அன்று அவள் என்னிடம் கேட்ட போது நான் உடன்பட்டிருக்க மாட்டேன்.*

*அவள்தான் கவனமாக இருந்திருக்க வேண்டும். யாருக் கும் தெரியக்கூடாது என்பதற்காகவே இரவில் ஒன்பது மணிக்குப் பிறகும் அதிகாலை நான்கு மணிக்கு முன்ன தாகவும் அவள் வீட்டுக்கு என் போக்குவரத்து இருந்தது. யாருமே காண மாட்டார்கள் என்று நான் இருட்டிலே போய் வந்தது இப்பொழுது சந்தியில் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.*

*எண்ணையை ஊற்றிக்கொண்டு எத்தனை கண்கள், முதலை போல் வாய் பிளந்து எவ்வளவு பெரிய பெரிய வாய்கள், எங்களுடைய ஊருக்குள் இருக்கின்றன என்பது அபோதுதான் எனக்கு நன்றாகத் தெரிய ஆரம்பித்தது.*

*என் வீட்டுக்குப் போனால், அம்மாவின் பார்வையில் குளிர்ச்சி குறைந்திருந்தது.*

*“இராத்திரி லேற்றா வாறாய். விடிய வெள்ளென எழும்பி ஓடுறாய். ஏன் வீட்டிலை பேசாமல் இருக் கேலாதோ? சாதகம் பார்த்ததிலே சபாபதிப்பிள் ளையாரின்ரை பேத்தியின்ரை சாதகம் பொருந்தி வந்திருக்கு”*

*ஆக வீட்டில் எனக்குப் பெண்பார்த்து விட்டார்கள்.*

*கோபாலகிருஷ்ணனின் மனைவி வீட்டுக்கு நான் போன பொழுது அன்று நடந்ததை யாருக்கும் நான் சொல்லவில்லை.*

*அன்று நான் அவளது வீட்டுக்குப் போன போது, அவள் தயங்கியபடியேதான் என்னிடம் கேட்டாள் “அவர் என்னைச் சந்திக்க விரும்புறார். ஐஞ்சு கிலோ மீற்றர் தள்ளித்தான் இருக்கிறார். அவர் இஞ்சை வரேலாது. நான்தான், அதுவும் யாராவது கூட்டிக் கொண்டு போனால்தான்... வேறை ஆரையும் கேக்க வேண்டாம் எண்டும். உங்களிட்டை மட்டும் கேக்கச் சொல்லியும் எனக்கு கடுதாசி குடுத்து அனுப்பி இருக்கிறார். அதுதான்...”*

*யாருடைய துணையுமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த அவளது நிலையைக் கண்டதும் என்னால் மறுக்க முடியவில்லை.*

*அன்று மாலையே எனது காரில் அவளை ஏற்றி, அவள் சொன்ன இடத்தில் இருந்த வீட்டில் கொண்டு போய் விட்டேன்.*

*இந்த வேலை என்னுடன் ஒட்டிக் கொண்டது. இரவில் கூட்டிக் கொண்டு போய் கோபாலகிருஷ்ணனிடம் விடுவதும் மறுநாள் காலையில் அதுவும் கோழி கூவும் நேரம் மீண்டும் போய் கூட்டிக் கொண்டு வந்து அவளது வீட்டில் விட்டு விடுவதுமாக அந்த விளையாட்டு பல நாட்கள் தொடர்ந்தன.*

*முப்பத்தைந்து வருடங்களாயிற்று, இன்றும் வீட்டில் எனது மனைவிக்கும் எனக்கும் சண்டை வரும் பொழு தெல்லாம் ''உன்னாலைதானடா நான் கலியாணம் கட்ட வேண்டி வந்தது'' என்று கோபாலகிருஷ்ணனைத் திட்டிக் கொண்டிருக்கிறேன்.*

***19.03.2018***

# கடன் வாங்கிக் களியாட்டம்

*கள்ளன் பொலீஸ் விளையாட்டில் கள்ளனாக இருப் பதை விட பொலீஸாக இருப்பதைத்தான் அதிக மான சிறார்கள் விரும்புவார்கள்.*

*வடமராட்சியில் அதுவும் குறிப்பாக வல்வெட்டித் துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் கடமையாற்ற அன்று சிங்களப்பொலிஸார் பெரிதும் விரும்பினார்கள். அதிலும் வல்வெட்டித்துறை என்றால் பொலிசுக்கு சொர்க்கபுரி. குசேலனாக வரும் பொலிஸ்காரனை குபேரனாக மாற்றி விடும் மந்திர பூமி அது.*

*எதுவுமே இல்லாமல் பொலிஸ் சேவைக்கு வந்த வர்கள் கூட அங்கிருந்து மாற்றலாகிப் போகும் பொழுது இனி வாழ்க்கையிலே எதுவுமே தேவை இல்லை என்ற நிலையிலேயே திரும்பிச் செல்வார்கள்.*

*அன்று வல்வெட்டித்துறைக்கும், தமிழ்நாட்டுக்கும் சட்ட பூர்வமற்ற வியாபாரம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்த வியாபாரத்திற்குத்தான் 'கள்ளக் கடத்தல்' என்று ஒரு குறியீட்டுப் பெயர்.*

*எம்ஜிஆர் படம் தமிழ்நாட்டில் வெளியாகும். அதே தினத்தில் வல்வெட்டித்துறையில் இருந்து தமிழகம் சென்று அதைப் பார்த்து விட்டு, படம் முடிய முட்டைத் தோசை சாப்பிட்டு, பயணத்தின் இடைநடுவே உள்ளே தள்ள எள்ளுப் பிண்ணாக்கும் வாங்கி வரக்கூடிய அளவிற்கு கடல் போக்குவரத்து வல்வெட்டித்துறையில் அப்பொழுது வெகுசிறப்பாக இருந்தது.*

*அந்த ஊரில் நடப்பதை எல்லாம் கண்டு கொள்ள வேண்டிய கடமை உணர்வோ, அவசியமோ அங்கிருந்த*

பொலிஸாருக்கு துளியளவும் இருந்ததில்லை. அதற்காகத் தான் அவர்களுக்கான கொடுப்பனவுகள் தாரளமாக நடந்து கொண்டிருந்தன. ஆனாலும் ஒரு தமிழ் இன்ஸ்பெக்டர் அங்கே பொறுப்பில் இருந்த பொழுது ‘அந்தத் தொழில்’ செய்பவர்களுக்கு பாரிய பின்னடைவு இருந்தது. அந்த இன்ஸ்பெக்டர் பெயர் குமார்.

‘இன்ஸ்பெக்டர் குமார்’ என்ற பெயரைச் சொன் னாலே போதும் அந்த இடம் அமைதியாகி விடும். கண்டிப்பும், கடமையும் நேர்மையும் இணைந்த ஆறடி உயர மனிதர் அவர். வல்வெட்டித்துறைக்கு அடுத்தநகரான வல்வெட்டி என்ற நகரத்தைச் சேர்ந்த அவர் ஓய்வு பெற்ற பின்னர் அரசியல் காரணங்களுக்காக குட்டிமணியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

வல்வெட்டித்துறையில் இருந்து ஒரு பத்துக் கிலோ மீற்றர் நகர்ந்தால் பருத்தித்துறை. விசாலமான நிலப் பரப்பைக் கொண்ட ஒரு நகரம். இலங்கையின் ஒரு முனை இங்கேதான் இருக்கிறது. அதிசயமாக அந்த முனையில் ஒரே ஒரு பனை இருந்தது. அதனால் பனைமுனை என்று பெயராயிற்று. புகையிரத சேவை யைத் தவிர ஒரு நகரத்துக்கு தேவையான அனைத்தும் பருத்தித்துறையில் இருந்தன.

பருத்தித்துறையில் இருந்த பொலிஸ் நிலையத்துக்கு முன்புறமாகவே நீதிமன்ற வளாகம் இருந்தது. காணி வழக்குகள், அல்லது கொடுக்கல் வாங்கல்களினால் வரும் பிணக்குகளைத்தான் பெரும்பாலும் அந்த நீதிமன்றத்தில் காணக் கூடியதாக இருந்தது. எப்போதாவது, நகரத்துக் காலிகளுக்குள் வந்த அடிதடி வழக்குகள் அந்த நீதி மன்றத்திற்கு வரும். அதற்கான கோப்புகளைத் தூக்கிக் கொண்டு வந்து தங்கள் நேரம் வரும் வரை தூங்கி வழிந்து நீதிபதிக்குக் காட்டிவிட்டு தூசி பறக்காமல் மூடி எடுத்துச் செல்வதே அன்றிருந்த பொலிஸாரின் முக்கிய

*வேலையாக இருந்தது. அதைத் தவிர பெரிதாகச் செய்து கொள்ள அவர்களுக்கென்று அங்கே வேலைகள் இருக்கவில்லை. குடி, கும்மாளம், விளையாட்டு என்று அவர்கள் வாழ்க்கை மிக மகிழ்ச்சியாக இருந்தது.*

*எழுபதுகளின் பிற்பகுதியில் சிறு வேளாண்மையை ஊக்குவிக்குமுகமாக சிறுகடன் உதவித்தொகை வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் அறிவித்திருந் தது. விவசாயிகளின் நன்மைக்கென கொண்டு வரப் பட்ட அந்தத் திட்டத்தில் யார் வேண்டுமானாலும் கடனைப் பெற்றுக் கொள்ள அதில் ஒரு ஓட்டை இருந்தது.*

*அந்தக் கடனை பெற்றுக் கொள்வதாயின் அதற்கு காணி ஒன்று அவசியம் இருக்க வேண்டும். கடன் பெறுபவருக்கு அந்தக் காணி சொந்தமாக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. குத்தகைக்குக் கூட அந்தக் காணியை எடுத்திருக்கலாம். அல்லது "இன்னாரான நான் எனது காணியில் சிறுபயிர் செய்வ தற்கு இன்னார்க்கு சிறிது காலத்துக்கு இலவசமாக தருகிறேன்" என்று எழுதி ஒப்பம் இட்டுக் கொடுத்தாலும் போதுமானதாக இருந்தது.*

*எல்லாவற்றுக்கும் மேலாக காணி விவசாயத்துக்கு உகந்தது என்ற விதானையாரின் சான்றிதழ்தான் முகியமாகக் கவனிக்கப் பட்டது. (விதானையார் தான் பின்னாளில் கிராமசேவையாளர் என்று அழைக்கப் படுகிறார்)*

*அரசாங்கத்தின் இந்தக் கடன் திட்டத்தால், பனை முனைக்கு அருகில் இருந்த 105 அடி உயர கலங்கரை விளக்கத்துக்கு மேலாக விதானைமார்களின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.*

பனைக்கூட்டமா? பற்றைகள் நிறைந்திருக்கின்றனவா? தென்னைகளின் சோலையா? பள்ளமான காணியா? நீர்ப்பாசனவசதி கிடையாதா? எதுவாக இருந்தாலும் தங்களுக்குத் தெரிந்தவர்கள் வேண்டியவர்களுக்கு எல் லாம் விதானைமார்கள் சான்றிதழ்கள் தந்தார்கள்.

இந்தத் திட்டத்தால் விதானைமார்கள் சம்பாதித்தார்களா, சந்தோசம் அடைந்தார்களா? என்பது இங்கே தேவை யில்லாத விசயம் என்பதால் அதை விட்டு விடுகிறேன்.

பருத்தித்துறை நகரம் ஒளிர ஆரம்பித்தது. பயிர் வளர்க் கக் கொடுத்த பணத்தில் பலர் கைகளில் தங்கமுலாம் பூசிய சிற்றிசன், சீக்கோ கடிகாரங்கள் முளைத்திருந்தன. நடந்து செல்லக்கூடிய தூரத்தில் இருந்த சென்றல் தியேட்டருக்கு வாடகைக் காரில் வந்து சினிமா பார்த்து விட்டுப் போனார்கள். புஹாரி ரெக்ஸ்ரைல், ரவி ரெக்ஸ்ரைல் இரண்டும் தங்கள் வாடிக்கையாளர்களை சமாளிப்பதற்காக புது வேலையாட்களை அமர்த்திக் கொண்டார்கள். கலாவதி நகைமாளிகையினர் தங்கள் தங்க இருப்பு முடிந்து யாழ்ப்பாணத்தில் தங்கம் கொள் வனவு செய்வதற்கு ஆள்அனுப்பினார்கள்.

எல்லாவற்றுக்கும்மேலாக துரைசிங்கம் சாராயக்கடைக்கு முன்னால் எப்போதும் ஆண்கள் கூட்டம் ஒன்று நின்றது.

இந்தக்கடன் திட்டத்தால் காலையில் ஒன்பது மணிக்குத் திறக்கும் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு முன்னால் ஆறு மணிக்கே ஒரு நீளமான வரிசை காத்து நிற்கத் தொடங்கியது. பலமணி நேரம் காத்து நின்றாலும் வங்கி திறக்கும்போது ஒரு கூட்டம் எல்லோரையும் பின்னுக்குத் தள்ளி விட்டு உள்ளே நுளைந்து விடும். எதிர்த்து யாராவது குரல் கொடுத்தால் அழகு தமிழில் அரச்சனை கள், ஆலாபனைகள் அமர்க்களமாக இருக்கும்.

பருத்தித்துறையில் மீன் சந்தை மரக்கறிச் சந்தை என்று இரண்டு சந்தைகள் இருந்தன. இப்பொழுது இலங்கை வங்கி மூன்றாவது சந்தையாக மாறிப் போயிருந்தது.

இலங்கைவங்கி மதியம் ஒருமணியுடன் வெளியாளர் களுக்கான சேவையை நிறுத்தி விடுவதால், இவ்வாறான நிலையில் வழமையான வங்கி வாடிக்கையாளர்கள் பெரும் சிரமப் பட்டார்கள். வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான முறைப்பாட்டால் வங்கி முகாமையாளர் பொலிஸின் உதவியை நாட வேண்டியதாயிற்று.

கூட்டத்தை ஒழுங்கு செய்ய இரண்டு பொலிஸ்காரர்கள் கடமைக்கு வந்தார்கள். வந்தவர்களில் ஒருவன் கருணாரட்ண.

கருணாரட்ண களுத்துறையைச் சேர்ந்தவன். தனது இளம் மனைவி, ஒரு வயது மகளுடன் ஆத்தியடி என்ற கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்துக் கொண்டு, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். யாருடனேயும் அதிகம் நெருக்கம் காட்டாமல் தான், தனது குடும்பம், வேலை என்று ஒரு வட்டத்துக்குள்ளேயே அவனது வாழ்க்கை இருந்தது.

ஒரு நாளைக்கு ஒரு குறிப்பிட்ட விண்ணப்பங்களை த்தான் பெற்றுக் கொள்வார்கள் என்பதால் வங்கியில் அன்றும் முண்டியடிப்பு பலமாக இருந்தது. பெண்கள், முதியவர்கள் என்று பாராமல் கடனுக்கான தனது விண்ணப்பத்தை முதலில் கொண்டு போய்க் கொடுப் பதற்காக எல்லோரையும் தள்ளிக் கொண்டு ஒரு இளைஞன் முன்னேறிக் கொண்டிருந்தான்.

'தவிட்டுமுட்டை' என்று அவனது நண்பர்கள் அவனை அழைப்பதால், அவனது பெயர் என்னவென்று அனேக ருக்குத் தெரியாது.

மரக்கறிச்சந்தையில் வியாபாரம் செய்து கொண்டிருந் தான். சந்தைவியாபாரம் மட்டுமல்ல சாராயமும், சண்டித் தனமும் அவனுக்கு விருப்பமானவை. அவனைத் தெரிந்தவர்கள் எச்சரிக்கையாக விலகிக் கொண்டனர். ஆனால் ஒரு சிலர் ஏற்படுத்திய சலசலப்பு கருணா ரட்ணவை அந்தப் பக்கம் பார்க்க வைத்தது.

தனக்கு முன்னால் வந்து நின்ற கருணாரட்ணாவை தள்ளி விட்டு முன்னே போக தவிட்டுமூட்டையால் முடியவில்லை. கருணாரட்ண தவிட்டு மூட்டையின் கையைப் பிடித்து இழுத்துவந்து வரிசையின் கடைசியில் விட்டு விட்டுப் போனான். அங்கே நின்றவர்கள் முகத்தில் சிரிப்பு. தவிட்டுமூட்டையின் முகத்தில் மட்டும் நெருப்பு. தவிட்டுமூட்டையின் உருட்டல், வெருட்டல் எல்லாம் கருணாரட்ண என்ற பொலீஸிடம் தோற்றுப் போயின.

மறுநாள், பத்திரகாளிஒழுங்கையும் விநாயகர் முதலியார் வீதியும் சந்திக்கும் இடத்தில் இருந்து துறைமுகம் வரை, வீதியில் 20 அங்குல அளவில் ஒரு நீண்ட சிவப்புக் கோடு இருந்தது. பலர் வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

மதியம் ஒரு மணியளவில் துறைமுகத்தில் இருந்து மெதடிஸ் பெண்கள் பாடசாலைவரை பல பொலிஸ் ஜீப்புகள் நின்றன. கரையில் இருந்து கடலில் 300 மீற்றர் உள்ளே இருந்த முருகைக் கற்களின் மேலே கூட்டமாக பறந்தபடி காகங்கள் கத்திக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு அசாதாரண நிலை அங்கே உருவாகி இருந்தது.

காற்று அதிகமாக இருந்ததால், அலைகள் வேகமாக வந்து துறைமுகத்தையே அசைத்து விடுவது போல அதன் சுவரை மோதிவிட்டுப் போய்க் கொண்டிருந்தன.

*மோசமான அலைகளால் கடலில் படகுகளை இறக்கு வதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. பொலீஸாரின் வேண்டுகோளை ஏற்று சுழியோடி ஒருவர் தன் படகில் முருகைக்கல் வரை போக ஒத்துக் கொண்டார். போய் வந்தவர் சொன்னார், ''முருகைக்கல்லுக்குள் சிக்கி ஒரு பிணம் இருக்கிறது'' என்று.*

*''நேற்று வேலைக்குப் போன என் புருசன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை'' என்ற கருணாரட்ணவின் மனைவியின்முறைப்பாடு, முருகைக்கல்லுக்குள் இருக்கும் பிணம் இரண்டையும் பொலிஸ் இணைத்துப் பார்த்தது.*

*இப்பொழுது காங்கேசன்துறையில் இருந்தும் மேலதிக பொலீஸார் வந்து சேர்ந்து கொண்டார்கள். ஏகப்பட்ட பொலீஸ்காரர்கள் இருந்தும் முருகைக்கல்வரை போக முடியாத அளவில் கடலில் எழுந்த அலைகள் அவர் களைத் தடுத்தன.*

*''முருகைக்கல்லுக்குள் இருப்பது என் புருசனாக இருக்கக் கூடாது'' என்று கருணாரட்ணவின் மனைவி கடவுளை வேண்டிக் கொண்டிருந்தாள்.*

*ஆனால் அது கருணாரட்ணவின் உடல்தான் என்பது மூவருக்கு மட்டும் தெரிந்திருந்தது. அவர்கள்தான் முதல் நாள் இரவு வேலை முடிந்து வந்த கருணாரட்ணவை அடித்து வீழ்த்தி தலையில் கல்லைப் போட்டு கொலை செய்துவிட்டு வீதியில் இழுத்துவந்து துறைமுகத்துக்குக் கீழே கடலில் போட்டு விட்டுப் போனவர்கள்.*

*அந்த மூவரில் ஒருவன் தவிட்டுமூட்டை. மற்றைய இருவரும் அவனது நண்பர்கள். பொலிஸ் துப்புகள் துலக்கி இவர்கள்தான் கொலையாளிகள் என்று கண்டறியும் முன்னரே அவர்கள் மூவரும் நகரத்தை*

*விட்டு ஓடி விட்டார்கள். யேர்மனிக்கோ, பிரான்சுக்கோ அவர்கள் போய் விட்டதாக பின்னர் நகரத்தில் பேசிக் கொண்டார்கள்.*

*இது நடந்து இப்பொழுது நாற்பது வருடங்களாயிற்று.*

*"முதன் முதலில் பருத்தித்துறையில் சிங்களப்பொலிஸை கொன்றவர்கள் நாங்கள்தான்" என்று தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில், அன்று ஓடிப் போனவர்கள் இன்று சொல்லிக் கொண்டிருக்கலாம்.*

*கருணாரட்ணவின் மனைவி "தன் பேரப்பிள்ளைகளுக்கு வேறு ஒரு கதையைச் சொல்லிக் கொண்டு இருக்கலாம்.*

***18.02.2018***

# கள்ளுக் கொட்டில் பக்கம் போகாதே

*இது ஒரு கறுப்பு வெள்ளைக்கதை. பல வருடங்களுக்கு முந்தியது. நான், பாடசாலை முடிந்து வந்து மாலையில் கிளித்தட்டோ, கிரிக்கெற்றோ விளையாடிய காலம்.*

*'ட' வடிவில் அமைந்த ஒரு காணிதான் எங்கள் விளையாட்டுத்திடல். காணியின் ஒரு பக்கம் மரங்கள் எதுவுமின்றி வெளியாக இருக்கும். மற்றைய பக்கத்தில் பனைமரங்கள் நிறைய இருக்கும். அது பீற்றர் குடும்பத்துக்குச் சொந்தமானது. கிரிக்கெற் விளை யாடும் போது பந்து பீற்றர் குடும்பத்துக் காணிக்குள் போய் விழுந்து விட்டால் பந்தை யார் போய் எடுப்பது என்பதில் எங்களுக்குள் சண்டையே வரும். பீற்றர் வீட்டில் கழிப்பிடவசதி கிடையாது. அந்த பனைக் கூடல்தான் அவர்கள் 'குடும்பத்துக்கான திறந்த வெளிச் 'சுழல் கக்கூஸ்'. (கொஞ்சம் அதிகமாக இருந்து விட்டால் இருக்கும் இடத்தில் இருந்து சுழன்று சற்று அரக்கி தள்ளிப் போய் இருப்பதால் அதற்கு 'சுழல் கக்கூஸ்' என்ற செல்லப் பெயர்) பீற்றர் குடும்பத்தின் சுழல் கக்கூஸோடு ஒட்டி இருந்ததுதான் அன்ரன் வீடு. இந்தப் பத்தியின் நாயகன் அவன்தான்.*

*அன்ரன் என்னை விட இரண்டு வயது கூடியவன். 'ஊருக்கு வீரன் உள்ளத்தில் கோழை' என்பது அவனுக் குப் பொருத்தமானது. தேவாலயத்துக்குப் பக்கத்தில் சேமக்காலை இருப்பதால் அந்தப் பக்கம் பாராமலேயே தேவாலயத்துக்குள் ஓடிவிடுவான். சேமக்காலையில் உள்ள பேய்கள் தன்னை பிடித்து விடும் என்ற பயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் என்ன காரணம் சொல்லி தேவாலயத்துக்குப் போகாமல் இருக்கலாம் என்று*

*யோசிப்பவன். அவனது தந்தை பெனடிக் மெகா குடிகாரன். வேலை முடிந்து வரும்போதோ அல்லது அந்தப் பக்கமாகப் போகும் போதோ கள்ளுக் கொட்டில் ஓரம் அவர் ஒதுங்காமல் இருந்தது கிடையாது. எப்போதும் அவர் பானை வயிறுடையோன்தான்.*

*கள்ளுத்தவறணைகள் வருவதற்கு சற்று முன்னரான காலம். ஆங்காங்கே கள்ளுக் கொட்டில்கள் இருந்தன. கள்ளுக் கொட்டில்களுக்குப் போனால், தங்கள் தரம் குறைந்து விடுமென்று கள்ளை வீட்டுக்கு வரவழைத்து மேட்டுக்குடிகள் குடிப்பார்கள். சாதாரண மெகா குடிகளுக்கு கொட்டில்தான் சுவர்க்கபுரி. கிடுகுகளால் வேயப்பட்ட அந்த சொரக்கபுரியில் நாலு பக்கமும் இருந்து குடிக்க வசதிகள் இருக்கும். நாலு பக்கத்தில் எந்தப் பக்கத்தில் இருந்தாலும் யார் யார் வருகிறார்கள் போகிறார்கள் என்பதை அவதானிப்பதற்கு கிடுகுகளில் சின்ன சின்ன யன்னல்கள் இருக்கும். மணலைக் குவித்து அதில் மெலிதான பள்ளம் ஏற்படுத்தி அதற்கு மேலே பிளா நிறைந்த கள்ளை வைத்து இன்ரெநெற் இல்லாமலே ஊர்ப் புதினங்களை நாள் முழுதும் மெண்டு கொண்டிருக்கலாம். போதாததற்கு, பொன்னையா அண்ணனின் மெதுவடை, பருத்தித்துறை வடை, மரவள்ளிக் கிழங்குப் பொரியல், பொரித்த இறால், வதக்கிய கும்பிளா மீன் எல்லாம் நாங்கள் உனக்குத் துணைக்குநிற்கிறோம் நீ எவ்வளவு கள்ளையும் உள்ளே தள்ளு என்று உற்சாகம் தரும்.*

*‘‘சொல்லுறதைக் கேள் கிட்டவா’’*

*‘‘அன்ரன், கிட்டப் போகாதையடா மனுசன் கொண்டு போடும்’’*

*‘‘பப்பா இனிச் செய்ய மாட்டன்’’*

''வாடா கிட்ட''

''அன்ரன் ஓடுடா. எங்கையாவது போய் துலை. ஓடு'' அன்று மாலை விளையாடிக் கொண்டிருந்த பொழுது அன்ரன் வீடு அமர்களமாக இருந்தது.

எங்கள் வீட்டில் என்ன குழறுபடிகள் இருந்தாலும் அடுத்தவன் வீட்டில் நடக்கும் பிரச்சனை என்றால் மழைமேகம் கண்ட மயில்கள்தானே நாங்கள்.

விளையாட்டை விட்டு விட்டு பூராயம் பார்க்கப் போனோம். நாங்கள் போன போது எல்லாம் முடிந்து விட்டது. அன்ரன் தெருவில் ஓடிக் கொண்டிருந்தான். அவனைத் துரத்திப் பிடிக்க முடியாதளவுக்கு வயதும் வயிற்றில் இருந்த கள்ளும் பெனடிக்கைத் தடுத்து விட்டன.

''எங்கை போகப்போறாய்? வீட்டுக்கு வருவாய் தானே அப்ப பாக்கிறன்'' பெனடிக் சத்தமாகச் சொன்னபடி வீட்டுக்குள்ளே போனார்.

நடந்தது என்னவென்று அறிய முடியாமல் எங்களுக்கு அன்றைய விளையாட்டு 'போர்'தான். ஆனாலும் அன்று இரவு ஊரெல்லாம் ஒரே பரபரப்பாக இருந்தது. அன்ரனை ஊரே சேரந்து தேடியது.

''என்ன இருந்தாலும் பெனடிக் இப்பிடி அடிச்சிருக்கக் கூடாது'' சிலபெண்கள் இப்படிச் சொல்லியே அன்ரனின் தாயின் சோகத்தைக் கூட்டி ''சரி சரி அழாதை. சூசையப்பர் கைவிட மாட்டார்'' என்று சமாதானமும் செய்தார்கள். அன்றைய இரவு அன்ரனின் கள்ளுக் கொட்டில் கதையோடு கழிந்தது.

அடுத்தநாள் காலையில் குருவானவர் அன்ரனின் கையைப் பிடித்து கூட்டிக் கொண்டு அவனது வீட்டுக்கு வந்தார். குருவானவர் பெனடிக்கோடு கதைத்து அவரை சமாதானம் செய்து விட்டுப் போனார்.

நட்பு ரீதியாக நலன் விசாரிக்கலாம் என்ற சாட்டில் என்னதான் பிரச்சனை என்பதை அறிய நானும் இன்னும் இரண்டு நண்பர்களும் அன்ரன் வீட்டுக்குப் போனோம். நாங்கள் அன்ரன் வீட்டுக்குப் போனபோது, "பகலிலேயே சேமக்காலை பக்கம் போகாத என்ரை பெடியன் ராத்திரி முழுக்க அப்பனுக்குப் பயந்து அதுக் குள்ளையே படுத்திருந்திருக்கிறான். சொல்லிக் குடுத்து பிள்ளை வளக்கத்தெரியாது. எதுக்கெடுத்தாலும் அடியும் உதையும் தான்" அன்ரனின் தாய் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

நாங்கள் தொடர்ந்து பல தடவைகள் கேட்டதால் அன்ரன் நடந்த விடயத்தைச் சொன்னான்.

கள்ளுக்கொட்டிலில் குடித்து விட்டு வரும் போது வீட்டில் வைத்து குடிப்பதற்கென்று ஒரு போத்தல் கள்ளு வாங்கி வருவது பெனடிக்கின் வழக்கம். அன்ரன் களவாக அதில் கொஞ்சமாக ருசி பார்க்கத் தொடங் கினான். வீட்டில் மா இடிபதற்கு அன்ரனின் தாய் வெள்ளைப் பச்சரிசி ஊறப் போட்டால் அவனுக்குச் சந்தோசம். அரிசி ஊறிய தண்ணீரை எடுத்து வைத்துக் கொள்வான். பெனடிக் கொண்டுவரும் கள்ளில் பாதிக்கு மேல் குடித்து விட்டு எடுத்து வைத்திருந்த அரிசித் தண்ணியை கள்ளோடு கலந்து வைத்து விடுவான். இந்தக் களவுக்குடி அன்ரனுக்கு பெரிய மகிழ்ச்சியை கொடுக்கவில்லை. என்றாவது ஒருநாள் கள்ளுக் கொட்டிலுக்குப் போய் ஆறுதலாக இருந்து அனுபவித்து

*பிளாவில் கள்ளுக் குடிக்க வேண்டுமென்ற ஆசை அவனுள் வளரத் தொடங்கியது.*

*அதைத்தான் முதல் நாள் அன்ரன் செய்திருக்கிறான். கள்ளுக்கொட்டிலுக்குப் போய் பிளாவில் கள்ளு வாங்கி, மண் குவித்து அதில் குழியிட்டு, பிளாவை வைத்து ஆற அமர இரசித்து இரசித்து கள்ளுக் குடிக்கும்வரை எந்தவித பிரச்சினையும் அன்ரனுக்கு இருக்கவில்லை. பிளாவை உதறி கம்பில் மாட்டும் போதுதான் பிரச்ச னையின் அரிச்சுவடி தொடங்கியது*

*"காசு எவ்வளவு?" அன்ரன் கேட்ட போது பதில் கள்ளுக் கொட்டிலுக்குப் பின்னால் இருந்து வந்தது.*

*'அன்ரன், அதொண்டும் நீ குடுக்கவேண்டாம். நான் குடுக்கிறன்"*

*வயித்துக்குள் போன கள்ளு இன்னும் போதையை ஏற்றவில்லை. அதுக்குள் உடலில் இருந்த சக்தி எல்லாம் தரையில் இறங்கியது போன்று அன்ரன் உணர்ந்தான்.*

*"கோவிந்தன், அவனிட்ட வேண்டாதை. அவன்ரை காசையும் நான் தாரன்" சொல்லிக் கொண்டே கொட்டிலின் பின்னால் இருந்து வந்த பெனடிக்கின் முகத்தைப்பார்க்காமல் அன்ரன் தலை குனிந்து நின்றான்.*

*"மீன் வேண்டினனான். நான் வரக் கொஞ்ச நேரம் பிடிக்கும். மீன் பழுதாப் போடும். நீ கொண்டு போய் கொம்மாட்டைக் குடு" பெனடிக் தந்த மீன்பையை அன்ரன் வாங்கிக்கொண்டு புறப்பட்டுப் போகும்பொழுது பெனடிக் சொன்னான், "சைக்கிளிலேயே வந்தனீ? பாத்துக் கவனமாக ஓட்டு"*

*சைக்கிள் ஓட்டும்போது காற்று முகத்தில்பட உள்ளிழுத்த கள்ளு மெதுவாக தன் வேலையைத் தொடங்க, இதுதான் போதையா என்ற உணர்வோடு, கள்ளடித் ததற்கு அவனது தந்தை தந்த அங்கீகாரமும் சேரந்து கொள்ள வேறொரு உலகத்தில் அன்ரன் இருந்தான்.*

*வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு பெனடிக் வந்து முதல் உதை விட்ட போதுதான் அன்ரனுக்கு தந்தை தனக்குத் தந்த அங்கீகாரத்தின் மதிப்பு புரிந்தது.*

*அன்ரனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.*

*''ராத்திரி முழுக்க சேமக்காலைக்குள்ளையே இருந்தி ருக்கிறாய். பயமா இருக்கேல்லையே?''*

*''அப்பன் கையிலை நேற்று மாட்டியிருந்தால் இண்டை க்கு சேமக்காலைக்குள்ளை புதைச்சிருப்பாங்கள். குருவா னவர் கூட்டிக் கொண்டு வந்ததாலை உங்களோடை கதைச்சுக் கொண்டிருக்கிறன்''*

*இவ்வளவு நேரமும் கறுப்பு வெள்ளையில் கதை சொன் னேன். கொஞ்சம் நிகழ்காலத்துக்கு வருகிறேன்.*

*இப்பொழுது அன்ரன் தனது மனைவியோடு மன்னாரில் இருப்பதாகவும் அவனது ஒரே மகனான ஜூற் வீர மரணம் அடைந்து விட்டதாகவும் அறிந்தேன்.*

*மற்றும்படி அன்ரன் இப்பொழுது கள்ளுக் குடிக்கிறானா, அவனுக்கும் தகப்பனைப் போல பானைவயிறா போன்ற விபரங்கள் எனக்குக் கிடைக்கவில்லை.*

***22.02.2018***

# நாலும் தெரிந்தவன்

*இப்பொழுதெல்லாம் அடிக்கடி சிதம்பரநாதனை நினைத்துக் கொள்கிறேன்.*

*ஸ்ரெதஸ்கோப் வடிவில் வயர்கள் காதில் இருந்து இறங்கி கைத் தொலைபேசியுடன் இணைந்திருக்கும் நிலை இல்லை என்றால், தனியாக நின்று கதைத்துக் கொண்டிருக்கும் அவர்கள் அச்சொட்டாக சிதம்பர நாதனுடன் பொருந்தி விடுகிறார்கள்.*

*எழுபதுகளில் எனது அண்ணன் நிறுவிய புத்தகக் கடை நகரத்தின் மையத்தில் இருந்தது. நான் அதிகமான புத்தகங்கள் வாசித்தது அப்பொழுது தான். கடையில் அண்ணனுக்கு உதவியாக இருந்தேன். சிலவேளைகளில் உபத்திரமும் தந்தேன் என்பதைப் பின்னர் விளங்கிக் கொண்டேன்.*

*அந்தக் கடையில் இருந்த பொழுதுதான் சிதம்பர நாதனின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. குளித்து, சுத்தமாக உடையணிந்து, மடித்துக் கட்டிய சாரத்துடன் காலை எட்டுமணிக்கெல்லாம் நகரத்துக்கு வந்துவிடுவார். காலை எட்டு மணிக்குப் பிறகு நகரம் முழுவதும் அவருக்கே சொந்தம். நகரத்தை நடை போட்டு அளந்து கொண்டிருப்பார். திடீரென நிற்பார். கைகளை காற்றில் துளாவி பஞ்ச பூதங்களில் நீர், நெருப்பு தவிர்ந்த நிலம், காற்று, ஆகாயம் ஆகிய மூன்றோடும் நிறையவே கதைப்பார்.*

*என்னதான் கதைக்கிறார் என்று கிட்டே போனால் கோவித்துக்கொண்டு தள்ளிப் போய் நிற்பார். இதனால் யாருமே அவருக்கு இடைஞ்சல்கள் தருவதில்லை. அவர்*

*தனது தனியான உலகத்தில் சுதந்திரமாக, சந்தோசமாக இருப்பார்.*

*சிதம்பரநாதனின் ஊர் வியாபாரிமூலைஎன்று சொல்லிக் கொண்டார்கள். அவருக்கு எதனால் இப்படி ஆனது என்று தெரியவில்லை. வேலைப் பிரச்சனையா? காதலில் தோல்வியா இல்லை கலியாணம் செய்ததால் இப்படி ஆனதா தெரியவில்லை. ஆரம்பத்தில் என்னைக் கண்டால் விலகிப் போவார். சில நாட்களில் எனது முகம் அவருக்கு பரிட்சயம் ஆகிப் போனது. அவரைக் கடந்து போனால் என்னை உற்றுப் பார்ப்பார். சில சமயங்களில் தூர நின்று கடையை நோட்டம் விடுவார். நகரத்தில் அவர் வலம்வரும் பொழுதெல்லாம் எங்கள் கடையை நோட்டம் விட்டுக் கொண்டே போவார்.*

*திடீரென ஒருநாள் கடைக்குள் வந்து நின்றார். கையை நீட்டினார். „காசு குடு' அப்பொழுதுதான் அவரது குரலை முதன் முதலாகக் கேட்கிறேன். குரல் உரிமைக் குரலாக இருந்தது. ஐந்து ரூபாவை எடுத்து அவர் கையில் வைத்தேன். வேகமாக அதை எடுத்து மேசையில் போட்டார். இரண்டு ரூபா, ஒரு ரூபா என அவர் கையில் வைத்த பொழுதும் அதே நிலைதான். எவ்வளவு என்னிடம் எதிர்பார்க்கிறார் என்பதை அறிய முடியாமல் இருந்தது. நூறு ரூபாத்தாளை எடுத்து அவரது கையில் வைத்தேன் அப்பொழுதும் அதே நிலைதான்.*

*ஆக ஒருருபாவிற்கு குறைவாகத்தான் எதிர்பார்க்கிறார் என்பது விளங்கியது. ஐம்பது சதத்தை எடுத்து அவரது கையில் வைத்தேன். காசை எடுத்து இரண்டு பக்கங் களையும் திருப்பித் திருப்பி பார்த்து விட்டு காதில் சொருகிக் கொண்டு வேகமாகப் போய் விட்டார்.*

*பின்னர் அதுவே வாடிக்கையாகிப் போனது. எந்த நேரம்*

*என்றில்லை ஒவ்வொரு நாளும் சிதம்பரநாதன் எங்கள் கடைக்கு சமுகமளிப்பார். கையை நீட்டுவார். அவரது கையில் ஐம்பது சதத்தை வைப்போம். போய் விடுவார்.*

*எப்போதாவது மதியநேரம் வருவார். „சாப்பாடு வாங்கித் தா' என்று விட்டு நடக்க ஆரம்பித்து விடுவார். அவர் பின்னாலேயே போக வேண்டும். சபாஸ் கபேயா? லக்சுமி பவானா? புஹாரி ஹொட்டலா அதை அவர் தான் தெரிவு செய்வார். அவர் எந்தக் கடையில் போய் நிற்கிறாரோ அங்கே அவருக்கான சாப்பாட்டுக்கான பணத்தைச் செலுத்தி விட்டு வருவேன்.*

*சிதம்பரநாதனைப் பற்றிச் சொல்லும் பொழுது ஜிவியைப் பற்றியும் சொல்லியே ஆக வேண்டும். நவீன சந்தைக் கட்டிடத்தில் அமைந்திருந்த ஒலிபரப்புக் கூடத்திற்கு ஜிவிதான் பொறுப்பு. அந்த ஒலிபரப்பி னூடாக கடை விளம்பரங்களைனச் செய்து கொண்டி ருந்தான். சந்தை இரைச்சல் வாகனச் சத்தங்கள் நடுவே அவனது ஒலிபரப்பு சிவனே என்று தன்பாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கும். நிறையத் தடவைகள் அவன் கேட்டுக் கொண்டதால் எங்கள் கடை விளம்பரமும் அவனது ஒலிபரப்பில் இருந்தது. அதனால் அவனுடன் ஏற்பட்ட சிறு பழக்கம் அவனுடன் கடைக்குப் போய் சேர்ந்திருந்து தேனீர் அருந்துவது வரை வந்து விட்டது.*

*ஜிவிக்கு போர் அடிக்கும் பொழுதெல்லாம் பதிவு செய்த கசெற்றை ஒலிக்க விட்டு விட்டு எங்கள் கடைக்கு வந்து விடுவான். ஒருநாள் என் அண்ணன் என்னிடம் சொன்னார், „சினேகிதத்தை கடைக்கு வெளியிலை வைச்சுக் கொள். வியாபாரத்துக்கு அழகில்லை. அதுவும் பள்ளிக்கூடம் விடுற நேரம் பொம்பிளைப் பிள்ளைகள் வாற பொழுது ஜிவி இங்கை வந்து இருக்கிறது எனக்கு நல்லதாத் தெரியேல்லை'. அண்ணன் அப்படிச் சொன்ன பிறகே கூர்ந்து கவனித்தேன்.*

*பாடசாலை விடும் நேரத்தில் தவறாமல் ஜீவி கடைக்குள் வந்து அமர்ந்து கொள்வான். அவன் பதிவு செய்து அந்த நேரத்தில் அவன் ஒலிக்கவிட்ட பாடல்கள் எல்லாம் காதலைப் பேசின. நாங்கள் வியாபார மும்மரத்தில் இருக்கும் பொழுது அவனது கண்கள் கண்கொத்திப் பாம்பாக மாறி இருந்தன. அண்ணனின் சொல் சரியா கவே இருந்தது.*

*ஜீவியின் மனது நோகாமல் பக்குவமாகச் சொல்லி விடு வது என்று தீர்மானித்துக் கொண்டேன். லாலா கடை கொத்துறொட்டி சுவையானது. இரவு அவனையும் கூட்டிக் கொண்டு போய் கொத்துறொட்டியோடு சொல்லுவதையும் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கணக்குப் போட்டேன்.*

*„ஆனந்தத் தேன் காற்று தாலாட்டுதே*
*அலை பாயுதே மனம் ஏங்குதே...''*

*ஜீவியின் ஒலிபரப்புக் கூடத்தில் இருந்து பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஜீவி எங்கள் கடைக்குள் இருந்தான். கடையில் பாடசாலை மாணவ மாணவிகள் கூட்டம். அந்தக் கூட்டம் அரை மணித்தியாலத்துக்குள் கலைந்து விடும். பஸ்ஸைப் பிடிப்பதற்கும், மாலை வகுப்புகளுக்குப் போவதற்குமே அவர்களுக்கு நேரம் போதாது. அந்த அரை மணித்தியாலத்துக்குள்ளேயே வியாபாரம் சில ஆயிரங்கள் ஆகி விடும். சுழன்று கொண்டிருந்தோம்.*

*திடீரென கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒருவர் ஜீவிக்கு முன்னால் வந்து நின்றார். அது எங்கள் சிதம்பரநாதன். வழக்கம் போல் அவரது கை ஐம்பது சதத்துக்காக நீளவில்லை.*

*„எப்ப வந்தனீ?' ஜீவியைப் பார்த்து சிதம்பரநாதன்*

அப்படிக் கேட்ட பொழுது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. சிதம்பரநாதனின் குரலை அப்பொழுதுதான் அங்கிருந்த பலர் முதல் தடவையாகக் கேட்கிறார்கள். சிதம்பரநாதனும் விடாமல் ஜிவியைக் கேட்டுக் கொண் டிருந்தார். ஜிவி விழி பிதுங்கி நின்றான்.

„உன்னை எப்ப விட்டவையள்?' சிதம்பரநாதனின் இந்தக் கேள்வியால் ஜிவி ஆடிப் போனான்.

சிதம்பர நாதனின் அடுத்த கேள்வியால் ஜிவி ஒடுங்கிப் போனான்.

அந்தக் கேள்வி „உனக்கு இப்ப சுகமாயிற்றே?' கேட்டதோடு மட்டுமல்லாமல் ஜிவியின் தலையைக் காட்டி அந்தக் கேள்வியைக் கேட்டதே ஜிவி ஒடுங்கிப் போனதுக்குக் காரணம்.

சிதம்பரநாதன் நகரத்தில் தனியாக நின்று கதைப்பது எல்லோரும் அறிந்ததே. அவர் ஜிவியிடம் கேட்ட கேள் வியால் அங்கிருந்தவர்களின் பார்க்கும் பொருளாக ஜிவி மாறிப் போனான். தன்னைப் பார்த்து அம்பிகைகள் புன்னகைக்க மாட்டார்களா என்று காதல் கீதங்களை ஒலிக்க விட்டு காத்து நின்றவனைப் பார்த்து கேலியாக எல்லோரும் சிரித்ததால் ஜிவியால் மேற்கொண்டு அங்கே இருக்க முடியவில்லை. கடையை விட்டு வேகமாக வெளியேறினான்.

அவனைத் தொடர்ந்த சிதம்பரநாதன், „எப்ப வந்தனீ? உன்னை எப்ப விட்டவையள்? உனக்கு இப்ப சுகமாயிற்றுதே? என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே போனார். சிதம்பரநானிடம் இருந்து விடுபட்டால் போதும் என்று ஜிவி சந்தைக்குள் போனான். சிதம்பர நாதனும் அவரது கேள்விகளும் ஜிவியைத் தொடர்ந்து கொண்டே இருந்தன. தனது ஒலி பரப்புக் கூடத்திற்குள்

*சென்று ஜிவி கதவை மூடிய பிறகே அந்தக் காட்சியும் நின்றது.*

*கடையில் கூட்டம் கலைந்திருந்தது. சிதம்பரநாதன் கை வழக்கம் போல் நீண்டது. அவரது நீட்டிய கையில் அண்ணன் ஐம்பது சதத்தை வைத்தார்.*

*காசை எடுத்து காதில் செருகிக் கொண்டு கடையை விட்டு சிதம்பரநாதன் வழக்கம் போல் ஒன்றும் சொல் லாமல் போனார்.*

*அண்ணன் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையின் அர்த்தம் ஒரு விசரனுக்கு இருக்கும் அறிவு கூட உனக்கு இல்லையே என்பது போல் இருந்தது.*

***6.11.2015***

# ஓடிய ஓட்டம் என்ன?

எங்கள் ஊரின் அன்றைய அழகு தேவதை அவள் தான். பெயர் எல்சி. நிறம் வெள்ளை. அதனால் தான் 'லொள்ளு' விட பல இளைஞர்கள் அவளைச் சுற்றிச் சுற்றி சைக்கிளில் திரிந்தார்கள்.

அவர்களுக்குள் செல்வா இருந்தானா என்று கேட்கிறீர் களா? இல்லை என்று சொல்ல மாட்டேன். இருந்தான். அழகு என்பது பொதுவுடமை. அதை யாரும் ரசிக்கலாம் தானே. ஆனால் பயம் காரணமாக தூர இருந்தே செல்வா ரசித்துக் கொண்டிருந்தான்.

தங்களைப்பார்த்து ஒருத்தியாவது சிரிக்கமாட்டாளா என்று ஏங்கும் இளம் வயது வாலிபங்கள் மத்தியில் எல்சி எல்லோரையும் பார்த்துச் சிரித்தாள்.கவனியுங்கள் அவளுக்கும் பொதுவுடமைத் தத்துவம் தெரிந்திருக்கிறது. அவளுக்கு முழங்காலுக்கு கீழே இருக்கும் பாவாடை அணியப் பிடிக்காது. இதுவும் வாலிபங்களுக்கு அவளி டம் பிடித்த மெகா குணம்.

ஆனாலும் எல்லா வாலிபங்களுக்கும், அவர்களுக்கு உள்ளேயே ஒரு கேள்வி இருந்தது. "உண்மையில் எல்சி யாரை விரும்புகிறாள்?" அவளை நெருங்கிக் கேட்கவோ, கடிதம் எழுதிக் கொடுக்கவோ வாலிபங்களுக்கு தயக்க மாக இருந்தது. காரணம் அவளது சித்தப்பா அருமை நாயகம். ஆறடிக்கு மேலான உருவம், மற்றும் முறைப் பான பார்வை, இந்த இரண்டும் அவரது முக்கியமான அடையாளங்கள்.

ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப் பின்னரான அருட்தந்தை

*ஆனந்தன் அவர்களின் பிரசங்கம் ஒன்று, "நாங்கள், எங்களது வீட்டுப் பெண்களுக்கு கொடுக்கும் மதிப்பை மற்றையபெண்களுக்கும் கொடுக்க வேண்டும். காலத்தின் மதிப்புத் தெரியாமல் வீணாகத் தெருவில் நிற்பதும், பெண்களை இடைஞ்சல் செய்வதும் நல்லதல்ல. இளை ஞர்கள் இதை உணர்ந்து நடந்தால் இருபாலாருக்கும் நன்மைதரும்..."*

*குருவானவர் இப்படிச் சொல்லிவிட, கிருஸ்தவ மதத்தில் இருந்த வாலிபங்கள் மரியாதையாக மெது மெதுவாகக் கழன்று கொண்டார்கள். இதனால் சைவப் பெடிகளுக்கு இடைஞ்சல்கள் வெகுவாகக் குறைந்து போனது. அவர்கள் எல்சி செல்லும் பாதைகளில் சைக்கிளில் தங்கு தடையின்றி சுழன்று கொண்டிருந்தார்கள்.*

*கிருஸ்தவ மதத்தில் இருந்த இளைஞர்கள் தயங்கி நின்ற போதும், பிலிப்நேரி மட்டும் துணிந்து காதலில் இறங்கி னான். பிலிப்நேரி நகரசபையில் வேலை செய்து கொண்டிருந்ததால் அவனிடம் போதிய பணம் இருந்தது. அவனிடம் இருந்த தொழில், வருமானம் ஆகிய இரண்டு தகுதிகளும், மாணவர்களான எங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு அவனை முன்னே கொண்டுபோய் நிறுத்தி விட்டன. ஆனால் பிலிப்நேரிக்கு எல்சியை விட பதினைந்து வயதுகள் அதிகமாக இருந்ததால் ஜோடிப் பொருத்தத்தில் கொஞ்சம் பின்னடைவு தெரிந்தது.*

*அருமைநாயகமும், பிலிப்நேரியும் ஏறக்குறைய ஒரே உயரமும் உடல்வாகும் கொண்டவர்கள். எங்களைப் போல, அவனுக்கு அருமைநாயகத்திடம் பயம்கிடையாது. ஆனால் தனது காதலை எல்சி மறுத்து விட்டால் என்னாகும் என்ற தயக்கம் மட்டும்தான் அவனிடம் மேலோங்கி இருந்தது.*

*பிலிப்நேரி தனது விடயத்தில் சில திட்டங்களைப் போட்டான். முதற்கட்டமாக எல்சியின் தம்பி ரோகானை வசப்படுத்தினான். அவன் என்னகேட்டாலும் வாங்கிக் கொடுத்தான். சினிமா பார்க்க ரிக்கெற் எடுத்துக் கொடுத்தான். ரோகான் எங்கெல்லாம் போக வேண்டும் என்று சொல்கிறானோ, அங்கெல்லாம் அவனை சைக்கிளில் கொண்டு போய் விட்டுவிடுவான். ரோகானுடனான பிலிப்நேரியின் நெருக்கம், சைவப் பெடியங்களுக்கு எல்சியின் மேல் இருந்த ஈர்ப்பை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டே வந்தது. ஒவ்வொரு வீட்டிலும் ''அவிட்டு விட்ட மாடு போலை ஊரெல்லாம் சுத்தமாமல் படிக்கிற அலுவலைப் பார். சோதனையிலை பெயில் விட்டியோ பிறகு கொப்ப ரிட்டை தப்ப மாட்டாய்'' என்ற அம்மாக்களின் பயம் காட்டுதலும் சேர்ந்து கொண்டதால் ஒரு கட்டத்தில் போட்டியில் இருந்து சைவப்பெடியங்களும் 'திராட்சை புளிக்கும்' என்று விலக, பிலிப்நேரி தனிக்காட்டு ராஜாவாக அங்கீகாரம் பெற்றான்.*

*ஒருநாள் நானும் பிலிப்நேரியும் எதிர் எதிர்த் திசைகளில் ஒழுங்கையால் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம். அந்த ஒழுங்கையில் இருந்த ஆன் அன்ரிவீட்டு வாசலில் எல்சி தனியாக நின்றிருந்தாள். பிலிப்நேரி என்னைப் பிடித்துக் கொண்டான்.*

*''இது நல்ல சந்தர்ப்பமடா தனிய நிக்கிறாள். அவளோடு கதைக்கலாம். பயமாயிருக்கு. நீயும் நில்லடா?''பிலிப்நேரி என்னிடம் கெஞ்சினான். நான் என்ன கேட்டாலும் செய்துதரும் நிலையிலேயே பிலிப்நேரியின் நிலை இருந்தது. ஆனால் அவனுக்கிருந்த உதறலை விட என்னிடம் அதிகமாக இருந்தது. ஒழுங்கையில் இரண்டு பக்கமும் பார்த்தேன். அருமைநாயகத்தின் நிழல் கூட அந்த ஒழுங்கையில் இல்லை என்பதை உறுதியாக்கிய*

*பின்னர் எல்சியின் பக்கம் மெதுவாகத் திரும்பினேன். சிரித்தாள். அவள் என்னைப்பார்த்துத்தான் சிரிக்கிறாளா இல்லை பிலிப்நேரியைப் பார்த்தா? நான் ஒரு முடிவுக்கு வரு முன்னரே பிலிப்நேரி முடிவெடுத்து விட்டான். "பாருடா பாருடா அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கி றாள்" பிலிப்நேரி அப்படிச் சொன்னதும் எரிச்சலின் உச்சத்தில் நான் இருந்தேன்.*

*"அப்ப போய்க் கதையன்"*

*"போயிடாதையடா" என்று என் காதிடம் சொல்லி விட்டு பிலிப்நேரி எல்சியை நெருங்கினான். பிலிப்நேரி தன்னை நோக்கி அடி எடுத்து வைப்பதைப் பார்த்து எல்சி இரண்டடி பின் நகர்ந்து "அம்மா" என்று மாரீசன் பாணியில் அவலக் குரல் கொடுக்க, எனக்கு விளங்கி விட்டது. ஒரு போர் மேகம் தரைக்கு உடனடியாக வரப் போகிறது என்று. நான் நினைத்தது நடந்தது. 'கன்றழுத குரல் கேட்டு தாய்ப்பசு ஓடும்' என்பார்கள். அது நடந்தது. ஆன் அன்ரியின் வீட்டுக் கேற்றைத் திறந்து கொண்டு எல்சியின் தாய் லூடாஸ் அன்ரி வெளியே வர, ஏற்கனவே எச்சரிக்கையோடு இருந்த நான் மெது வாக சைக்கிளோடு நகர்ந்தேன்.*

*"அக்கா, சொல்லுறதைக் கேளுங்கோ. நான் ஒண்டுமே செய்ய இல்லை அக்கா. ஏன் இதிலை நிக்கிறீங்கள் எண்டு கேக்கத்தான்..." பிலிப்நேரியின் குரல் தளதளப் போடு வெள்ளைக் கொடி பிடித்தது. இப்படியான ஒரு சம்பவம் நடக்கும் என அவன் கணித்திருக்க மாட்டான்.*

*"நான் உனக்கு அக்காவோடா? நான் உனக்கு அக்கா எண்டால் என்ரை மகள் உனக்கு மருமகளெல்லோடா. உன்ரை வயசென்ன? அவளின்ரை வயசென்ன?" லூடாஸ் அன்ரிக்கு இவ்வளவு கோபம் வந்து நான்*

*பார்த்ததில்லை. தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள் அன்று அந்த இடத்தில் நின்றிருந்தால் நல்ல தமிழில் ஒரு அர்ச்சனையையும், அதனோடு சேர்த்து ஆலாபனையையும் கேட்டிருப்பார் கள். அழகான தமிழில் இவ்வளவு அழுக்கான வார்த்தை களா? நான் அதிர்ந்து போனேன். லூடாஸ் அன்ரியின் பார்வை என்மேல் திரும்பினால் நிச்சயம் நான் கொங்கணன் பார்த்த கொக்காகி விடுவேன். அந்தளவுக்கு அவரின் கண்கள் சிவந்திருந்தன. நல்ல வேளையாக விடுப்புப் பார்க்க கொஞ்சம் ஆட்கள் சேர்ந்து விட, அவர்களுக்குள் புகுந்து வெளியேறி என் சைக்கிளில் ஏறி ஓடத் தொடங்கினேன். இரவில் படம் பார்த்து விட்டு ஒழுங்கையால் வரும் போது நாய் துரத்துமே, அப்போது கூட இவ்வளவு வேகம் என் சைக்கிள் கண்டதில்லை. அன்று நான் ஓடியதே என் வாழ்வில் அதிகமான சைக்கிள் ஓட்ட வேகம் என்பேன்.*

*நடந்த பிரச்சினை அன்று மாலையே நட்பு வட்டத் துக்குள் வந்துவிட்டது. "நல்ல வேளையடா நீ பிடிபட இல்லை. மனுசியின்ரை கையிலை நீ அம்பிட்டிருந்தால், உனக்கு சரியாப் பிடிச்சு மூத்திரம்விடத்தெரியுமோ என்றுகேட்டு நாறடிச்சிருக்கும்"*

*"வாழைக்குள்ளை சந்தியாப்பிள்ளை எண்டு ஆருக்குத் தெரியும். தாய்க்காரி ஆன் அன்ரி வீட்டுக்குள்ளே இருக் கிறதை நாங்கள் கவனிக்க இல்லை" எங்களுக்குள் எழுந்த கேள்விகள் இவைதான். பிலிப் நேரியை எல்சி உண்மையிலேயே விரும்பினாளா?*

*பின் எதற்காக பிலிப்நேரி எல்லா இடத்திற்கும் சைக்கி ளில் எல்சியின் தம்பி ரோகானை வைத்துக் கொண்டு திரிந்தான்? அடுத்த நாள் எங்களுக்கு விடை கிடைத்தது. ரோகானையே பிடித்துக் கேட்டோம்.*

*“நேற்று கொம்மாவுக்கும், பிலிப்நேரிக்கும் ஏதோ பிரச்சினையாமே?”*

*“அக்காவோடை சேட்டை விட்டார் அதுதான்”*

*“நீதானே பிலிப்நேரிக்கு தூது போற ஆள்”*

*“நான் ஒருத்தருக்கும் தூது போகேல்லை”*

*“அப்ப எதுக்கடா உனக்கு கொத்து றொட்டி ஐஸ்கிறீம் எல்லாம் வாங்கித் தந்தவன்?”*

*“அதை அவரிட்டை போய்க் கேளுங்கோ”*

*ரோகான் எங்களிடம் பிடி கொடுக்கவில்லை. அவன் உலகம் தெரியாதவனில்லை. சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக்கி, பிலிப்நேரியின் காசில் நன்றாகத் தின்று, உருண்டு திரண்டிருப்பது தெரிந்தது. காதலிக்கும் போது காதலனுக்கு கண் இல்லாமல் போகலாம். ஆனால் காதலிகளின் தம்பிகளுக்கு அப்பொழுதுதான் அறிவு அதிகமாக வேலை செய்கிறது.*

*கொஞ்சநாளில் பிலிப்நேரி சொந்த மச்சாளுக்கே மாப்பிள்ளையாகிப் போனான்.*

*பேஸ்புக்கில் தன் பேரனைக் கொஞ்சியபடி எல்சி இருக் கும் படத்தைப் பார்த்தேன். அமெரிக்காவில் பயங்கரக் குளிர் போலை, படத்தில் உடல் முழுதும் மூடி உடுப்பு போட்டிருந்தாள்.*

***30.03.2017***

நினைவுகள் விசித்திரமானவை.
நேற்று நடந்ததை மறந்து விடுவோம்.
ஏன் இன்று சற்று முன்னர் நடந்த
விடயத்தைக் கூட மறந்து விடுவோம்.
ஆனால் என்றோ நடந்த விடயங்கள்
சில மட்டும் மறக்காமல் எம்மோடு
பயணித்துக் கொண்டிருக்கின்றன



9 783981 300277
மனஓசை வெளியீடு